விலை ரூபா: 15.00

...gistered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 ஆவணி 30 வெள்ளிக்கிழமை (16.09.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 271

ராம்கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

RAMCO

SLS 107 தரம் கொண்டதும் 100 வீத சாதாரண போட்லான் சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறு வெளியானது

### அகில இலங்கையில் மூவருக்கு முதலிடம்; யாழில் பொஸ்கோ மாணவி முதலிடம்!!



ரமேஷ் நிதாஷிகா

(கொழும்பு)

5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் மூன்று மாணவர்கள் தலா 195 புள்ளிகளைப் பெற்று அகில இலங்கை ரீதியில் முதல் இடம் பெற்றுள்ளனர்.

அநுராதபுரம் மாவட்டத்தின் கெக்கிராவை முஸ்லிம் மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த மொஹமெட் நளீம் ஸக்கி அஹமட், களுத்துறை பாலிகா மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவி ஓஷாதி ரஷிபிரபா பொன்சேகா, களுத்துறை தொடங்கொட மிரிஸ்வெள மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவி கே.டி.வி. நெத்மி ரணவீர ஆகியோரே இம் மூவருமாவர்.

இவர்களில் (19ஆம் பக்கம் பார்க்க)

## பீரிஸ் தலைமையில் இன்று பேச்சு

(கொழும்பு)

அரசாங்கப் பிரதிநிதிகளுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையிலான மற்றுமொருபேச்சுவார்த்தை மீண்டும் இன்று இடம்பெறவுள்ளது.

இந்த சந்திப்பு ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெறவுள்ளதாக வெளிவிவகார அமைச்சு உறுதி செய்துள்ளது. இச்சந்திப்பில் அரசாங்கத்தரப்பிற்கு வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் தலைமை தாங்குகிறார்.

ஆர்.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் (19ஆம் பக்கம் பார்க்க)

# தமிழர்களுக்கான தீர்வு வழங்கலில் அரசு அவதானமாகவுள்ளது!

## அமைச்சர் யாப்பா தெரிவிப்பு

(கொழும்பு)

யுத்தம் முடிபுக்கு கொண்டு வரப்பட்டுள்ள நிலையில் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வினை வழங்கும் முயற்சியில் அரசாங்கம் ஈடுபட்டு வருகின்றது. இவ்வாறு தமிழ் மக்களுக்கான தீர்வு ஏனையோருக்கு பாதகமாக அமையாத வகையில் வழங்கப்பட வேண்டும். அதில் அரசாங்கம் மிகக் கவனமாகவும் அவதானமாகவும் இருந்து வருகின்றது என ஊடகத்துறை பதில் அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்தார். (19ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் வீரர்களா? பயங்கரவாதிகளா? தீர்மானிக்கப் போகிறது நெதர்லாந்து

(ஆம்ஸ்ரடாம்)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு வழங்கியதாக கூறப்படும் ஐவர் மீதான வழக்கு விசாரணை நேற்று நெதர்லாந்தில் இடம் பெற்றது.

விடுதலைப் புலிகளுக்கு நிதி வழங்கினார்கள் என அவர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. கடந்த காலங்களில் நெதர்லாந்தில் இடம் பெற்று வந்த தமிழர்களின் கூட்டங்கள் மற்றும் சந்திப்புக்களை அந்நாட்டுப் பொலிஸார் கண்காணித்து வந்துள்ளனர் என்று தெரிவித்துள்ள நெதர்லாந்து வானொலி ஒன்று குறிப்பிட்ட கண்காணிப்பு நடவடிக்கைக்கு ஒப்பரேசன் கொனிக் எனப் பெயரிட்டிருந்ததாகவும் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு நிதி வழங்கிய பலர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். கடந்த 2009 ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை (19ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.மாவட்ட வெட்டுப்புள்ளி-151

(கொழும்பு)

5ஆம் ஆண்டுப் புலமைப்பரீட்சை பெறுபேறுகள் வெளியாகியுள்ள நிலையில் மாவட்ட ரீதியான வெட்டுப்புள்ளிகளும் அறிவிக்கப்பட்டுள்ளன.

இதன்படி யாழ்ப்பாணம்-151, கிளிநொச்சி 147, மன்னார்-150, வவுனியா-143, முல்லைத்தீவு-148, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை-151, திருகோணமலை-152, கொழும்பு, கம்பஹா, களுத்துறை, கண்டி, மாத்தளை, காலி, (20ஆம் பக்கம் பார்க்க)

# விடையளித்தலில் ஏற்பட்ட கவனயீனமே தேசியரீதியில் முதலிடம் பெறமுடியவில்லை

(யாழ்ப்பாணம்)

விடையளித்தலில் ஏற்பட்ட கவனயீனத்தால் அகில இலங்கை ரீதியில் முதலிடத்தைப் பெறும் வாய்ப்பு இல்லாமல் போனதாக 194 புள்ளிகளைப் பெற்று வடமாகாணத்தில் முதலிடத்தையும் அகில இலங்கை ரீதியில் இரண்டாம் இடத்தையும் பெற்ற மாணவனான பரமேஸ்வரன் சேதுராகவன் வலம்புரிக்கு தெரிவித்தார்.

## வடக்கில் முதலிடம் பெற்ற சேதுராகவன் தெரிவிப்பு

முல்லைத்தீவு நெத்தலியாறு தமிழ் மகா வித்தியாலய மாணவனான பரமேஸ்வரன் சேதுராகவன் ஐந்தாமாண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் 194 புள்ளிகளைப்பெற்று வடமாகாணத்தில் முதலிடத்தை பெற்றார்.

முதலிடத்தை பெற்றமை குறித்து அவர் வலம்புரியுடன் கருத்துக்களை பரிமாறிக் கொண்டார்.

அவர் அதன்போது கூறியதாவது, வன்னியில் இடம்பெற்ற யுத்த சூழ்நிலையில் வளர்ந்தவன் நான். (19ஆம் பக்கம் பார்க்க)

# ஈ.பி.டி.பி. அரசியல் கட்சியே தவிர துணை இராணுவக் குழு அல்ல!

## றொபேர்ட் ஓ பிளேக் கருத்துக்கு கண்டனம்

(யாழ்ப்பாணம்)

நாம் தமிழ் பேசும் மக்களின் அங்கீகாரம் பெற்ற பொறுப்புவாய்ந்த ஒரு அரசியல் கட்சியே தவிர வன்முறைநோய்கொண்டு அலையும் துணை இராணுவக் குழு அல்ல. இந்த உண்மையை தனது வழமையான கபடநோக்கத்தோடு எம் மீது அவதூறு பரப்பும் வகையில் தொடர்ந்தும் கருத்து வெளியிட்டுவரும் அமெரிக்க ராஜாங்க அமைச்சின் உதவி செயலர் றொபேர்ட் ஓ பிளேக் உணர வேண்டும் என ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி விடுத்திருக்கும் ஊடகங்களுக்கான அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.மேலும் அந்த அறிக்கையில் கூறப்பட் டுள்ளதாவது,

அண்மையில் இலங்கைக்கான உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொண்டிருக்கும் அமெரிக்க ராஜாங்க அமைச்சின் உதவிச் செயலர் றொபேர்ட் ஓ பிளேக் வழமை போல் திட்டமிட்ட உள்நோக்கத்தோடு எம் மீதான (19ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கைக்கு எதிரான விசாரணைக்கு லியம் பொக்ஸ் ஆதரவளிக்க வேண்டும்

## பிரி.யில் ஆர்ப்பாட்டம்



(லண்டன்)

இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பான சர்வதேச விசாரணைக்கு பிரித்தானியப் பாதுகாப்புச் செயலர் லியம் பொக்ஸ் ஆதரவளிக்க வேண்டும் என்று கோரி வடக்கு சொம்செற் தொகுதியில் போராட்டம் நடத்தப் பட்டுள்ளது.

ரெயஸ் சீ நகரசதுக்கத்தில்நடத்தப்பட்ட இந்தப்போராட்டத்தை அக்ற் நௌவ்என்றஅமைப்புமற்றும்தமிழர்களும் இணைந்து முன்னெடுத்துள்ளனர். (20ஆம் பக்கம் பார்க்க)

வர்த்தகப் பெருமக்களே...

வியாபாரத்தைப் பதிவு செய்தல்

பெறுமதிமிக்க உங்கள் வியாபார நிறுவனங்களை இலகுவாகப் பதிவு செய்து, அதற்குரிய கௌரவத்தையும் உத்தரவாதத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள்.

VTL மெனேஜ்மென்ட்
கொழும்பு-03
0729994777
0117902938

# சிறுவர் போராளிகள் இலங்கையில் இல்லை!

## ஐ.நாவுக்கு அரசு அறிவிப்பு

இலங்கையில் நடத்தப்பட்ட விசாரணைகள் மூலம் நாட்டில் எந்தவொரு சிறுவர் போராளிகளும் இல்லை என தெரியவந்துள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவுக்கு இலங்கை அறிவித்துள்ளது.

இலங்கையில் இடம்பெற்ற போர் முடிவுக்கு வந்த பின்னர் காணாமல் போகும் சிறுவர்கள் நாட்டின் கிழக்குப் பகுதியில் இயங்கி வரும் துணை ஆயுதக் குழுவொன்றில் இணைத்துக் கொள்ளப்படுவதாக ஐக்கிய நாடுகள் சபை அதிகாரி ஒருவர் அண்மையில் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் இலங்கையில் சிறுவர்போராளிகள் எவருமே இல்லை எனவும், அத்தகைய சந்தர்ப்பங்கள் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளதாகவும் ஜெனிவா மனிதவுரிமைகள் ஆணைக் குழுவின் கூட்டத் தொடரில் கலந்து கொண்டுள்ள இலங்கை மனிதவுரிமைகள் ஆணைக்குழு தெரியப்படுத்தியுள்ளதாக வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

அத்துடன் இலங்கையில் சிறுவர்களை எவரேனும் போராளிகளாக இணைத்துக் கொள்வார்களாக இருந்தால் அவர்கள் கைது செய்யப்படுவர் எனவும் ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணைக் குழுவுக்கு தெரிவிக் கப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. (ச-5)

## தீவக கல்வி வலய அதிபர்களுக்கான கூட்டம்

தீவக கல்வி வலய பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு தீவக கல்வி வலயத்தின் முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு வரும்போது தாங்கள் தரம் 5 புலமைப் பரிசில் பெறுபேறு பகுப்பாய்வு, சி.எப்.எஸ். பாடசாலைகளுக்கு வழங்கப்பட்ட பத்து இலட்சம் ரூபாயுக்கான வேலைத் திட்ட விபரமும், வேலை முன்னேற்ற அறிக்கையும், பாடசாலையில் நடத்தப்பட்ட சி.எப்.எஸ் கூட்டங் களுக்கான வவுச்சர், பாடசாலையில் மேற்கொள்ள வேண்டிய திருத்த வேலைகள் தொடர்பான விபரங்கள், தங்கள் பாடசாலையில் இருந்து நல்லாசிரியர் தெரிவுக்கு சிபாரிசு செய்யப்பட்ட ஆசிரியர் போன்ற மேற்கூறப்பட்ட விபரங்களை தனித்தனித் தாளில் தயாரித்துக் கொண்டு வருமாறு தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ச-8)

## இலவச கணனிக் கருத்தரங்கு

க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான இலவசகணனிகருத்தரங்குநாளையும் நாளை மறுதினமும் காலை 9.30 மணிக்கு நவீன சந்தைப் பகுதியிலுள்ள குளோபல் கணனிக் கற்கை நிறுவனத்தில் நடத்தப்படவுள்ளது. இதில் மாணவர்களை கலந்து கொண்டு பலன் பெறுமாறு முகாமையாளர் எ.செந்தூரன் அறிவித்துள்ளார். (ச-8)

வேலை ஆட்கள் தேவை
(அறிவொளி போன் சொப்)
* கணனி இயக்குநர் * கணக்காளர் * விற்பனையாளர்
எமது நிறுவனத்திற்கு மேற்கூறப்பட்ட பதவி வெற்றிடங்களிற்கு வேலையாட்கள் எதிர்பார்க்கப்படுகின்றது. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பங்களை சுயவிபரக் கோவையுடன் rubantp@yahoo.com எனும் முகவரிக்கு மின் அஞ்சல் செய்யவும். கணனி அறிவும் பன்மொழிப் புலமையும் மேலதிக தகைமையாகக் கொள்ளப்படும்.
தொடர்புகளுக்கு: 0212220066 rubantp@yahoo.com
(6153)

வேலையாட்கள் தேவை
தச்சுவேலை நிலையமொன்றுக்கு அனுபவமுள்ள வேலையாட்கள் தேவை.
உடனே தொடர்பு கொள்ளவும்.
0777431045
(6154)

பனை அபிவிருத்திச் சபை
விலைமனுக் கோரல்
பனை அபிவிருத்திச் சபையின் மாமுனை மற்றும் புளியங்குளம் பனந்தோட்ட காணிகள் துப்புரவாக்கம் செய்வதற்கு தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து கூறுவிலைகள் கோரப்படுகின்றன. மேலதிக விபரங்களை எமது தேசிய வீடமைப்புச் செயலகம், கண்டி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியிலுள்ள எமது தலைமையலுவலகத்தில் பெற்று 23.09.2011 இற்கு முன்னர் தங்கள் கூறு விலைகளை பதிவுத் தபால் மூலமோ நேரடியாகவோ ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.
பசுபதி சீவரத்தினம்
தலைவர்
பனை அபிவிருத்திச் சபை.
(C-4449)

காணி/வீடு விற்பனைக்கு
* பளை, புலோப்பளையில் 5 பரப்பு வெற்றுக் காணியும்,
* பளை, கச்சார் வெளி பிள்ளையார் கோயிலுக்கு அருகில் 6 ஏக்கர் காணியும்,
* 56, அச்சுக் கூட லேன், கொக்குவில் கிழக்கில் 6 அறை, 2 மலசல கூட வசதி, சுற்றுமதில் கொண்ட மேல் மாடி வீடும் விற்பனைக்குண்டு.
தொடர்புக்கு: 0779592051
(6147)

பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயத்தில் இருந்து 5ம் தர புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்றி, 192 புள்ளிகளைப் பெற்று யாழ். மாவட்டத்தில் முதலாமிடம் பெற்றுள்ள
செல்வி ரமேஷ் - நிதாஷிகா
அவர்களை மனதார பாராட்டி வாழ்த்துவதுடன், இவருடன் சித்தியடைந்து எமது பாடசாலைக்கு பெருமை தேடித் தந்த 113 மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றேன்.
அத்துடன் இவர்களுக்கு சிறந்த முறையில் கற்பித்த ஆசிரியர்களையும் வாழ்த்தி மகிழ்வடைகின்றேன்.
மரிய ஜீவந்தி
அதிபர்
யா/புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்
(சி-4447)

பெயர் மாற்றம்
1983-06-03ம் திகதியில் பிறந்த பிறப்பு அத்தாட்சிப் பத்திர இலக்கம் 7621 யாழ்நகர் மேற்குப் பிரிவில் 1983-07-03 பதிவு செய்யப்பட்ட பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தையுடைய லோட்டன் றோட் மானிப்பாயில் வசிக்கும் நாகேசன் கனகேஸ்வரி ஆகிய நான் ஒரு கிறிஸ்தவளாக மாறியபடியால் எனது பெயரை எஸ்தர் என மாற்றிக்கொண்டேன் என இத்தால் யாவருக்கும் அறியத் தருகின்றேன்.
இப்படிக்கு
N. Esther
(6149)

பெயர் மாற்றம்
1981-01-19ம் திகதியில் பிறந்த பிறப்பு அத்தாட்சிப் பத்திர இலக்கம் 9746 யாழ்நகர் மேற்குப் பிரிவில் 1981-02-13 பதிவு செய்யப்பட்ட பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தையுடைய லோட்டன் றோட் மானிப்பாயில் வசிக்கும் நாகேசன் பரமேஸ்வரி ஆகிய நான் ஒரு கிறிஸ்தவளாக மாறியபடியால் எனது பெயரை ஷாலோம் என மாற்றிக்கொண்டேன் என இத்தால் யாவருக்கும் அறியத் தருகின்றேன்.
இப்படிக்கு
N. Shalom
(6149)

மாபெரும் மாட்டுவண்டிச் சவாரி போட்டி
பெரியவிளான் விவசாயிகளினால் நடத்தப்படும் மாபெரும் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி.
இடம் : பெரிய விளான் சவாரித்திடல்
காலம் : 18.09.2011 ஞாயிற்றுக்கிழமை பி.ப.01 மணி
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
பெரியவிளான் விவசாயிகள்
(C-4451)

௬௦ ஆவது பிறந்தநாள் வாழ்த்து
Dr. லி. சச்சிதானந்தராஜா (கண்ணா)
15-09-2011

பெயரைப் போலவே ஆனந்தமாக
வாழும் சச்சிதானந்தனே!
வாழ்த்துகின்றோம் இன்னாளில்
பல்லாண்டு வாழ்ந்திடவே
பொறுமையின் சிகரமே
அன்பின் இருப்பிடமே
நாம் காணவில்லை உம்மிடம்
நேர்மை தவறும் பண்பதனை.
இன்பக் களிப்புடனே
இன்முகமாகவே வாழ்ந்திடுவீர் பல்லாண்டு
கண்ணா வைத்தியசாலை
சித்தன்கேணி
வாழ்த்துபவர்கள்: நிர்வாகி, பணிபுரியும் டாக்டர்கள், பணியாளர்கள், ஆய்வுகூட உத்தியோகத்தர்
(சி-4450)

யா/வண்ணை நாவலர் மகா வித்தியாலயம்
தரம் - 5
புலமைப் பரிசில் பரீட்சை - 2011

யா/வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் 2011
தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில்
செல்வி லக்ஷகா இராசகுமார் (166) செல்வன் சுரேந்நாதன் அஜுசன் (165)
செல்வி துவாரகை மணிவண்ணன் (165) செல்வி நிரோசனா சிவநாதன் (151)
ஆகியோர் சித்தியடைந்ததுடன்
செல்வி ப. ஜிந்துஜா (135) செல்வன் சு. சுதர்சன் (115)
செல்வன் இ. சதுர்த்தீஸ்வரன் (135) செல்வன் செ. தேனுசன் (109)
செல்வி ச. விதுஷா (115)
ஆகியோர் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றுள்ளனர். இவ்வெற்றிக்கு வழிகாட்டிய பாடசாலை அதிபர் திரு. சு. சிவபாதசுந்தரம் இம்மாணவர்களுக்குக் கற்பித்த வகுப்பாசிரியர் திருமதி கமலாசனதேவி தனக்குமார் மற்றும் சக ஆசிரியர்களையும் மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.
பாடசாலைச் சமூகம்
(சி-4444)

## இன்று ஒரு தகவல்

# வாழ்வின் சுவை!

ஒரு ஊரிலே ஒருவர் இருந்தார். அவர் ஒருநாள் சந்தையொன்றுக்குச் சென்றார்.

அப்பொழுது அங்கே மிளகு குறைந்த விலையிலே தாராளமாகக் கொட்டிக் கிடந்தது. அதனாலே ஒரு மூட்டை மிளகு வாங்கிக் கொண்டு வீட்டுக்குச் சென்றார். வீட்டுக்குச் சென்றதும் மூட்டையைப் பிரித்து ஒரு மிளகை எடுத்து வாயிலே போட்டார். அப்பொழுது காரமாக இருந்தது.

பின்னர் இன்னொன்றை எடுத்து வாயிலே போட்டார். காரம் அதிகமாக இருந்தது.

அதன்பின்னர் இன்னொன்றை எடுத்து வாயிலே போட்டார். அப்பொழுது நாக்கு எரிய ஆரம்பித்தது.

தொடர்ந்து ஒவ்வொரு மிளகாக எடுத்து வாயிலே போட்டுக் கடித்துக்கொண்டே இருந்தார்.

ஒரு கட்டத்திலே அவராலே தாங்க முடியவில்லை. கண்ணீர் கொட்ட ஆரம்பித்தது. ஆ... ஊ... என்று கத்தினார். ஆனாலும், மிளகு சாப்பிடுவதை நிறுத்தவில்லை.

இதைப் பார்த்துக் கொண்டு பக்கத்திலே இருந்தவர் அவரைப் பார்த்து ஏன் நீங்கள் இப்படி தொடர்ந்து மிளகைச் சாப்பிட்டுக் கொண்டு இருக்கின்றீர்கள்? என்று கேட்டார்.

“அட ஒன்று இல்லையென்றால் ஒன்றாவது இனிப்பாக இருக்காதா? என்று பார்க்கிறேன்!” என்று பதில் சொன்னார்.

இதற்குப் பக்கத்திலே இருந்தவர். மிளகின் இயல்பு காரம். இனிப்பு வேண்டுமென்றால் கற்கண்டை அல்லவா தேடி எடுத்துச் சாப்பிட வேண்டும்!

எங்களில் பலபேர் இன்றைக்கு இப்படித் தான் இருந்து கொண்டிருக்கின்றோம்.

தித்திக்கிற மிளகு கிடைக்குமா என்று தேடிக் கொண்டிருக்கின்றோம். துயரமான வாழ்க்கையிலே இனிமை வந்து சேரும் என்று காத்துக் கொண்டிருக்கின்றோம்.

தித்திக்கின்ற மிளகைத் தேடுவது நம்பிக்கைக்கு எதிராக நம்பிக்கை வைப்பது மாதிரித் தான்!

கடந்த காலத்திலேயிருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டுமே தவிர கடந்த காலத்திலேயே தங்கி விடக்கூடாது.

கடந்த காலத்தை நிகழ்காலத்திலே பொருத்திக் கொண்டு வாழ முற்படுவது மகா அபத்தம்... அதைவிட அந்த வாழ்க்கைக்கு முற்றுப் புள்ளி வைப்பதே நல்லது!

எதையும் உள்ளது உள்ளபடி பார்க்க வேண்டும். ஏற்க வேண்டும். இதுதான் ஜென் சொல்கின்ற கருத்து. வாழ்க்கையை முழுமையாக வாழும்படிதான் நாம் ஆசீர்வதிக்கப்பட்டோம்.

*தென்கச்சி கோ. சுவாமிநாதன்*

### கிளிநொச்சி மாவட்டத்தில்

# பிம்சவிய திட்டத்தின்கீழ் காணி பத்திரங்கள் வழுங்கப்படவுள்ளன

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள காணிகள் தொடர்பாக **பிம்சவிய** செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதால் இச்செயற்றிட்டத்தின் கீழ் அனைத்து காணிகளுக்கும் இலவசமாக நில அளவை செய்யப்பட்டு காணிப் பத்திரங்கள் வழங்கப்படவுள்ளன.

எனவே, பொதுமக்கள் **பிம்சவிய** செயற்றிட்டத்திற்காக உத்தரவு பெற்ற நில அளவையாளர் மூலம் அரச காணிகளை நில அளவை செய்ய வேண்டிய தேவையில்லை.

அவ்வாறு அளவீடு செய்தல் சட்ட விரோதமானதென்றும் இவ்வாறு பெறப்பட்ட நில அளவைப் படங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டதெனவும் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி றூ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

அத்தோடு அரசாங்கத்தால் சட்டப்படி வழங்கப்பட்ட அளிப்பு பத்திரங்களுக்கான உரிமை மாற்றங்கள், பெயர் மாற்றங்கள், பிரிவிடல் போன்ற நடவடிக்கைகள் பிரதேச செயலாளரின் அனுமதி பெற்ற பின்பே மேற்கொள்ளப்படவேண்டும். அவ்வாறு அனுமதியின்றி பெறப்பட்ட ஆவணங்கள் வலுவற்ற ஆவணங்களாகுமென அவர் தெரிவித்துள்ளார். (4-2-12)

## கொழும்பில் வருமானம் குறைந்தவர்களுக்கு 30 ஆயிரம் வீடுகள் அமைப்பதற்கு திட்டம்

(கொழும்பு)

கொழும்பில் வாழும் வருமானம் குறைந்த குடும்பங்களுக்கு வசிப்பிட வசதியை ஏற்படுத்திக் கொடுக்கும் வகையில் அரசாங்கம் குறைந்தபட்சம் 30 ஆயிரம் வீடுகளை அமைக்க உத்தேசித்துள்ளதாக பதில் அமைச்சரவை பேச்சாளரான அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

தகவல் திணைக்களத்தில் நேற்று காலை நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

குறைந்தபட்சமாக 30 ஆயிரம் வீடுகளின் தேவை நிலவுகின்ற போதிலும் அதனைக் கட்டம்கட்டமாக நிறைவேற்ற அரசாங்கம் உத்தேசித்துள்ளது.

அதனடிப்படையில் முதலில் ஆயிரம் வீடுகளை அமைக்க முடிவு செய்யப்பட்டதுடன் அதில் 320 வீடுகள் கொழும்பு தெமட்டகொடப் பகுதியில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இந்த 320 வீடுகளிலும் கொழும்பு கொம்பனித்தெரு வீடுகளில் இருந்து வெளியேற்றப்பட்ட குடும்பங்கள் குடியமர்த்தப்படவுள்ளனர்.

அடுத்த கட்டமாக 500 வீடுகளை அமைக்கவும் அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதுடன் அதற்கான ஒப்பந்தத்தை உள்ளூர் ஒப்பந்தகாரர் ஒருவரிடம் வழங்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைப்பத்திரத்துக்கு ஏற்ப இதற்கு 952 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. (4-2)

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 60 |
| உருளைக்கிழங்கு | 130 | 110 |
| பச்சைமிளகாய் | 100 | 100 |
| தக்காளி | 40 | 60 |
| மரவள்ளிக் கிழங்கு | 50 | 50 |
| கோவா | 60 | 80 |
| கரட் | 80 | 50 |
| பூசணி | 40 | 25 |
| புடோல் | 60 | 30 |
| வாழைக்காய் | 30 | 40 |
| சின்ன வெங்காயம் | 80 | 80 |
| பெரிய வெங்காயம் | 60 | 90 |
| பாகற்காய் | 90 | 80 |
| வெண்டிக்காய் | 40 | 50 |
| கருணைக் கிழங்கு | 110 | 100 |
| பயற்றங்காய் | 80 | 60 |
| லீக்ஸ் | 40 | 50 |
| பீற்றூட் | 20 | 15 |
| கறிமிளகாய் | 40 | 40 |
| முருங்கைக்காய் | 90 | 80 |
| போஞ்சி | 110 | 90 |
| கத்தரிதம்புள்ள | 20 | 50 |
| கீரை - 1 பிடி | 15 | 20 |
| தேசிக்காய் | 160 | 130 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 30 |

## இராசி பலன்

*16.09.2011*
*(ஆவணி 30, வெள்ளிக்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.01 மணிக்கு*
*சதுர்த்தி முன்னிரவு 10.47 மணிவரை*
*அச்சுவினி பிற்பகல் 3.27 மணிவரை*
*இராகுகாலம் 10.33-12.03 மணிவரை*
*சுபநேரம் 6.03-7.33 மணிவரை*
*சங்கடகர சதுர்த்தி விரதம்*
*அமிர்தசித்தம்*

**மேடம்**

கணபதியை வழிபட்டு காரியம் சாதிக்க வேண்டிய நாள், வீட்டில் சில மாற்றங்களைச் செய்ய முன்வருவீர்கள், நீங்கள் தேடிச்சென்று பார்க்க நினைத்த நபர் உங்கள் இல்லம் தேடி வரலாம்.

**இடபம்**

ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், இடமாற்றச் சிந்தனை மேலோங்கும், சயன சுகக் குறைவுண்டு, நண்பர்களின் சந்திப்பால் திடீர் விரயங்கள் ஏற்படலாம்.

**மிதுனம்**

பொதுநல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள், தொலைபேசி வழித் தகவல் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணைபுரியும், புதிய நபர்களின் சந்திப்பு இடம் பெறலாம், வருமானம் திருப்தி தரும்.

**கடகம்**

திட்டமிட்ட காரியங்களில் எளிதில் வெற்றி கிடைக்கும், அந்நியர்களின் உதவியுண்டு, கொடுத்தவாக்கைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், ஆரோக்கியம் சீராகி உற்சாகமடைவீர்கள்.

**சிங்கம்**

சிந்தித்து செயற்பட்டு சிறப்படைய வேண்டிய நாள், சொத்துப் பிரச்சினைகளுக்கு சுமுகமான தீர்வு கிடைக்கும், தந்தை வழி உறவினரால் அனுகூலமுண்டு, போட்டிகளைச் சமாளித்து வெற்றி காணவேண்டிய நாள்.

**கன்னி**

கணபதியை வழிபட்டு வளம் காண வேண்டிய நாள், உடனிருப்பவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது, ஆரோக்கியத்தில் அக்கறை காட்ட வேண்டிய நாள், கௌரவக் குறைவான நாள்.

**துலாம்**

வியக்கும் வாழ்வமைய விட்டுக் கொடுத்துச் செல்ல வேண்டிய நாள், சுற்றத்தார் வருகையால் சுகம் காண்பீர்கள், தொழில் முன்னேற்றத்திற்கு நண்பர்கள் ஒத்துழைப்பு வழங்குவர்.

**விருச்சிகம்**

எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் நாள், பணவரவு திருப்திதரும், போட்டிகளில் வெற்றி கிடைக்கும், இல்லத்தில் உள்ளவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து மகிழ்வீர்கள்.

**தனுசு**

கோயில் வழிபாட்டால் குதூகலம் காணவேண்டிய நாள், பொன்னான எதிர்காலத்தை அமைத்துக் கொள்ள புதிய வழிபிறக்கும், அரசியல் ஈடுபாடு அதிகரிக்கும், புத்திரரால் பெருமையடைவீர்கள்.

**மகரம்**

வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்ய மாற்றினத்தவர்கள் முன்வருவர், வாகன யோகம் கிட்டும், ஆலய தரிசனத்தில் நாட்டம் கூடும், தாய்வழி உறவினர்களால் நன்மையுண்டு.

**கும்பம்**

சுதந்திரமாகச் செயற்படும் நாள், சமுதாயப் பணிகளில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள், குடும்பத்தினர் உங்களுடைய ஆலோசனைகளைக் கேட்டு நடக்க முன்வருவர், வியாபார விருத்தியுண்டு.

**மீனம்**

மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும் நாள், பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், தொழில் வளர்ச்சி மேலோங்கும், வாக்கு மேன்மையுண்டு, போசன சுகமுண்டு.

வளவன்

# புதுக்குடியிருப்பு பிரதேச அபிவிருத்தி சங்கங்களுக்கு நீரிறைக்கும் இயந்திரங்கள்

உணவு விவசாய ஸ்தாபனத்தின் நிதியுதவியுடன் முல்லைத்தீவு மாவட்ட புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட மூங்கிலாறு தெற்கு, உடையார்கட்டு கிழக்கு, குரவில், உடையார்கட்டு தெற்கு ஆகிய நான்கு கிராம அபிவிருத்திச் சங்கங்களுக்கு நீர் இறைக்கும் இயந்திரமும் அதன் உதிரிப்பாகங்களும் வழங்கப்பட்டுள்ளன.

மேற்குறித்த இயந்திரங்களும் அதன் உதிரிப்பாகங்களும் கடந்த 13ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப 2 மணிக்கு உடையார்கட்டு தெற்கு கிராம அலுவலகத்தில் புதுக்குடியிருப்புப் பிரதேச செயலாளர் சி.ஜெயகாந்தால் வழங்கப்பட்டது.

இதில் 30 ஆயிரம் ரூபா பெறுமதியுடைய நீர் இறைக்கும் இயந்திரங்கள் ஒரு அபிவிருத்திச் சங்கத்திற்கு ஒன்று வீதம் நான்கு கிராம அபிவிருத்திச் சங்கங்களுக்கும் நான்கு இயந்திரங்கள் வழங்கப்பட்டு அதன்மூலம் 900குடும்பங்கள் பயனடையவுள்ளனர்.

இடம்பெயர்ந்து மீளக்குடியமர்ந்துள்ள இம்மக்கள் கிணறுகளைச் சுத்தம் செய்து நீர் பெறமுடியாத நிலையில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டனர்.

இதை நிவர்த்தி செய்யும் பொருட்டே கிராம அபிவிருத்திச் சங்கங்களுக்கு மேற்குறித்த இயந்திரங்கள் வழங்கப்பட்டு அவர்களின்மூலம் ஒவ்வொரு குடும்பத்தின் கிணறுகளும் இவ் இயந்திரங்கள்மூலம் சுத்தம் செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-3)

# இலங்கையில் சிறந்த வளர்ச்சி வேகத்துடன் பொருளாதார நிலைமை உருவாகியுள்ளது

## அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் சிறந்த வளர்ச்சி வேகத்துடன் பொருளாதார நிலைமை உருவாகியுள்ளதாக நிர்மாணத்துறை பொறியியல் சேவைகள் வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சர் விமல்வீரவன்ச தெரிவித்துள்ளார்.

அடுத்த வருடம் நடைபெறவுள்ள சர்வதேச நிர்மாணக் கண்காட்சி தொடர்பான தெளிவூட்டல் செயற்றிட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு கருத்து வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை நிர்மாணத்துறையினர் சங்கத்தின் ஏற்பட்ட சர்வதேச நிர்மாணக் கண்காட்சி அடுத்த வருடம் ஜுன் மாதம் 29, 30 மற்றும் ஜுலை முதலாம் திகதிகளில் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பல்வேறு நாடுகளிலுள்ள தொழில்நுட்ப முறைகள் தொடர்பாகவும் இலங்கையிலுள்ள நிபுணர்களின் தொழில்நுட்ப முறைகள் தொடர்பாகவும் இதன் ஊடாக அறிந்து கொள்ள முடியும்.

கடந்த துரதிர்ஷ்டவசமான காலகட்டத்தை முடிவுக்கு கொண்டு வந்து தாய்நாட்டின் சிறந்த எதிர்பார்ப்புக்களுடன் நல்லதோர் எதிர் காலத்தை நோக்கி அமைதியான நாடு கட்டியெழுப்பப்படுவதனை அவதானிக்க முடிகின்றது.

பொருளாதார சுட்டெண்கள் அல்லது வேறு ஏதேனும் புள்ளிவிபரங்கள் ஊடாக நாடு குறித்து சிறந்த எதிர்பார்ப்புக்களை ஏற்படுத்திக் கொள்ளக்கூடிய தகவல்கள் முன்னர் அறியக் கிடைக்கவில்லை எனினும் தற்போது அந்த சூழ்நிலை மாறியுள்ளதுடன் சிறந்த வளர்ச்சி வேகத்தை காட்டக்கூடிய பொருளாதாரம் குறித்து இன்று அனைவராலும் பேச முடிந்துள்ளது என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார். (ஸ்ரீ-4)

# கோண்டாவிலில் பிடிபட்ட சந்தேக நபர் தொடர்ந்தும் வைத்தியசாலையில் !

## 29-ம் திகதி ஆஜர்படுத்த உத்தரவு

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் பகுதியில் வைத்து மர்ம மனிதன் என சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட இரத்தினபுரி ஹகவத்தையைச் சேர்ந்த இளைஞனை யாழ். மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி ஏ.ஆனந்தராஜா எதிர்வரும் 29ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராக்கும்படியும் அத்துடன் அவருடைய முழுமையான மருத்துவ அறிக்கையையும் சமர்ப்பிக்குமாறும் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

குறித்த சந்தேக நபர் மனநோயாளி என சந்தேகிக்கப்படுவதனால் அவரை மனநோய் வைத்திய பரிசோதனைக்கு அனுமதிக்குமாறும் கடந்த முதலாம் திகதி நீதவான் உத்தரவிட்டிருந்தார்.

தற்போது தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் குறித்த நபருக்கு தொடர்ந்து சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு வருவதோடு, இன்றைய(நேற்றைய) தினமும் சிகிச்சையளிக்கப்படுவதால் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த முடியவில்லை என பொலிஸார் நேற்று வழங்கிய அறிக்கையினை அடுத்தே நீதிபதி இவ்வாறு உத்தரவிட்டுள்ளார்.

நீதிமன்றத்திற்கு குறித்த நபரது தாய் மற்றும் மாமனாரும் சமுகமளித்திருந்தனர். சந்தேக நபரின் தாயாரான வெல்லத்துரங்கே நாலனி காந்தி இது குறித்து கருத்து தெரிவித்தபோது,

தனது மகன் மாமனாருடன் கே.கே.எஸ். வீதி திருத்த வேலைக்காக வந்திருந்ததாகவும் அவர் மனநோயாளியாக இருக்கவில்லை எனவும் அன்றைய தினத்திற்கு பின்னர் தான் தனது மகன் மனநோயாளியாக மாறியுள்ளதாகவும் தெரிவித்தார்.

சந்தேக நபர் அக்சஸ் இஞ்சினியரிங் நிறுவனத்தில் உதவியாளராக கடந்த மாதம் 11-ம் திகதி தொடக்கம் 31-ம் திகதி மதியம் ஒரு மணிவரை பணிபுரிந்தார் எனவும் தன்னுடனேயே வேலை செய்வதால் தனது மருமகன் பொழுதுபோக்காகவே சைக்கிளை எடுத்துக் கொண்டு போனதாகவும் பின்பு நடந்த விடயம் பற்றி தனக்கு தெரியாது என்றும் அவரின் மாமனார் கே.பி.விமலசேன தெரிவித்தார்.

இதேவேளை கடந்த மாதம் 31-ம் திகதி கோண்டாவில் பகுதியில் வைத்து மர்ம மனிதன் என சந்தேகத்தில் கோப்பாய் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு இம்மாதம் முதலாம் திகதி யாழ். நீதின்றத்தில் முன்னிறுத்தப்பட்ட குறித்த இளைஞனான தனஞ்செய பிரியதாத் பிரேம சிறியை பதினான்கு நாட்கள் விளக்கமறியலில் வைத்து 15-ம் திகதியான நேற்று நீதிமீன்றத்தில் முன்னிறுத்துமாறு நீதிவான் ஆனந்தராஜா உத்தரவிட்டிருந்தார். (எ-5,6)

# தரமான நெல்லைப்பெற்று காலபோக நெற்செய்கையை மேற்கொள்ள அறிவித்தல்

(கிளிநொச்சி)

தரமான நெல்லைப் பெற்று காலபோக நெற்செய்கையை மேற்கொள்ளுமாறு கிளிநொச்சி மாவட்ட பிரதி விவசாய பணிப்பாளர் செல்வராஜா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கிளிநொச்சி மாவட்ட விவசாயத்திணைக்களத்தினால் முரசுமோட்டை, 5ஆம் வாய்க்கால் பரந்தன், இராமநாதபுரம், வன்னேரிக்குளம் ஆகிய பகுதி விவசாயிகளுக்கு விதை நெல் உற்பத்தித் திட்டத்தின் கீழ் 100 ஏக்கரில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்வதற்கான Bg 300, Bg358, At 308 போன்ற நெல்வர்க்கங்கள் இலவசமாக வழங்கப்பட்டன.

மேற்குறித்த் விதை நெல்லை பெற்று விதைக்க விரும்பும் விவசாயிகள் அவ்வப்பகுதி விவசாயப் போதனாசிரியர்களிடம் தொடர்பு கொண்டு நெல்லை பெற்று விதைப்பதன் மூலம் உயர் விளைவை பெற்றுக் கொள்ள முடியும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-3)

# விசேட தேவையுடையோருக்கான விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

விசேட தேவையுடைய மாணவர்களுக்கான விளையாட்டு விழா நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.நல்லூர் ஸ்தான சி.சி.த.க பாடசாலையில் (வலயக் கல்வி அலுவலகம் அருகில்) நடைபெறவுள்ளது.

எனவே யாழ்.வலயப் பாடசாலைகளில் கல்வி பயிலும் விசேட தேவையுடைய மாணவர்களை தவறாது கலந்து கொள்ளச் செய்யுமாறு பாடசாலை அதிபர்களை யாழ்.பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.ரவீந்திரநாதன் கேட்டுள்ளார். (ச-8)

# முன்பள்ளி விளையாட்டு

(யாழ்ப்பாணம்)

வேலணை மேற்கு முன்பள்ளி சிறார்களின் வருடாந்த விளையாட்டு விழா இன்று பிற்பகல் ஒரு மணியளவில் முடிப்பிள்ளையார் ஆலய முன்றலில் இடம்பெறவுள்ளது.

ஆசிரியை வ.மனோஜா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினர்களாக வேலணைப் பிரதேச சபைத் தலைவர் சி.சிவராசா, யாழ்.வைத்தீஸ்வரா கல்லூரி அதிபர் மு.மகேந்திரன் , வேலணை தீவக வலய முகாமைத்துவ உதவிக்கல்விப் பணிப்பாளர் பொ.அருணகிரிநாதன், தீவக வலய முன்பள்ளி அபிவிருத்தி பிரிவு உதவிக்கல்விப் பணிப்பாளர் எஸ்.விக்னேஸ்வரன், சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் நா.மகேந்திரன், வேலணை பொது சுகாதார பரிசோதகர் ம.அனுசுதன் ஆகியோர் கலந்துகொள்கின்றனர். (ச-8)

# மரண அறிவித்தல்

## வல்லியர் கந்தசாமி



தெல்லிப்பளை கிழக்கு சித்தியம்புளியடியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வல்லியர் கந்தசாமி அவர்கள் 15.09.2011 நேற்று வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லியர்-பொன்னம்மாவின் அன்புமகனும், காலஞ்சென்ற நாகன்- பார்வதியின் மருமகனும், நாகம்மா மற்றும்காலஞ்சென்ற இலட்சுமியின் கணவரும், நாகம்மா, காலஞ்சென்றவர்களான கிட்டிணர், அருச்சுனர் மற்றும் செல்வராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற ஐயம்பிள்ளை மற்றும் செல்லம்மா, இலட்சுமி, மகேஸ்வரி, செல்லம்மா, இராசதுரை, செல்வமலர் ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஞான குணசேகரம் (தெல்லிப்பளை ப.நோ.கூ.சங்க ஊழியர்), சகுந்தலா, ஈஸ்வரன் (உரிமையாளர் முருகன் மருந்துக் களஞ்சியம், சுன்னாகம்), சசிகலா, சசிலகுமாரி, சங்கீதா (வட்டக்கச்சி இராமநாதபுரம் மகா வித்தியாலய ஆசிரியை), சஞ்ஜீவன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், மனோன்மணி, காலஞ்சென்ற வரதராஜா மற்றும் றெஜி, விஜயரட்ணம், அருந்தவராஜன் ஆகியோரின் அன்பு மாமனாரும், கஜீபா, அஜிக்கா, புவி, கலிஸ்ரீனா, சாருகான், சங்கவி, டக்ஷனா, கிஷானா, ஜனுஜன், ஜதுஷா, தனுஷா, அபிஷா, டிலக்ஸி, டிஷானி ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 16.09.2011 வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக தெல்லிப்பளை கட்டுப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சித்தியம்புளியடி,
தெல்லிப்பழை கிழக்கு.

தகவல்
குடும்பத்தினர்.

(6150)

ASIAN Mega COMPUTER SCHOLARSHIP
Win 75%

G.C.E. உயர்தர பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான விசேட சிறப்புச் சலுகை

மெகா இலவச புலமைப் பரிசில் பரீட்சை கடந்த 11 ஆண்டுகளாக (Sept. 2000 ஆண்டு முதல்) ஏசியன் கொம்ப்யூட்டர்ஸால் அறிமுகப்படுத்தப்பட்டு நடாத்தப்படுகிறது. இவ்வாண்டும் தகவல் தொழில்நுட்பம், கிராபிக்ஸ் அனிமேஷன், மல்டிமீடியா, இணைய வடிவமைப்பு, டலி கணக்கியல், ஹாட்வேயார் மற்றும் ஆங்கில பேச்சுப்பயிற்சிகளுக்கான புதிய பாட நெறிகளுடன் இப்புலமைப்பரிசில் கணனி ஆர்வலர்கள் அனைவருக்கும் வழங்கப்படுகிறது.

இலவச புலமைப்பரிசில்

- பரீட்சையை தமிழ் or ஆங்கிலத்தில் எழுதலாம்
- அடிப்படைத் தகைமை G.C.E. (O/L)
- வினாத்தாள் 50 நிமிடங்கள் மட்டுமே
- பாடசாலப் பாடத்திட்டம் & பொது அறிவு வினாக்கள்
- இலவச பாடநூல்கள் (இந்தியா & இலங்கை)
- தவணைமுறை கட்டண வசதி (Installment)
- சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்கள்

செப்டெம்பர் 18 ஞாயிறு

படிப்பின் முக்கியமான தருணங்களில் சிறந்ததை தெரிவு செய்யுங்கள் !

ஸ்கொலர்ஷிப் மூலம் சேர்ந்து படிப்பது, படிப்பிற்கான உங்கள் செலவைக் குறைப்பதாகும்.



இலவச அனுமதிகளுக்கு..

ASIAN COMPUTERS

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி |
|---|---|---|
| 2G ஸ்ரான்லி வீதி | கொடிகாமம் வீதி | 230- 1ம் மாடி கண்டி வீதி |
| 021-2225677 | 021-2262399 | 021-2270267 |

# ஆசான் ஆர்.எஸ்.நடராசா எழுதிய ஆய்வு நூல் அறிமுக விழா

(யாழ்ப்பாணம்)

ஆசான் ஆர்.எஸ்.நடராசா எழுதிய சேர் பொன் இராமநாதனின் கல்விச் சிந்தனையும் கல்விப் பணியும் ஆய்வு நூல் அறிமுகவிழா நாளை காலை 9.30 மணிக்கு நல்லூர் கோயில் வீதியில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் இந்துமாமன்ற அரங்கில் நடைபெறவுள்ளது.

துர்க்கா துரந்தரர் ஆறுதிருமுகன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வைத்திய கலாநிதிகள் கணேசமூர்த்தி தம்பதிகளும் சிறப்பு விருந்தினராக வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரனும் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். காலை 9.30 மணிக்கு மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பமாகும் இவ் விழாவில் காலை 9.35 மணிக்கு யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரி விரிவுரையாளர் திருமதி விக்கினேஸ்வரி நரேந்திரா இறைவணக்கத்தையும் யாழ். கல்வி வலயத்தின் ஆசிரியர் கல்வி நிலைய முகாமையாளர் ஜி.இரத்தினசிங்கம் வரவேற்புரையையும் ஓய்வுநிலை கல்வி அதிகாரி சி.இராஜநாயகம், யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தரும் வாழ்நாள் பேராசிரியருமான பொன்.பாலசுந்தரம்பிள்ளை ஆகியோர் வாழ்த்துரைகளையும் வழங்கவுள்ளனர்.

தொடர்ந்து காலை 10.40 மணிக்கு ஓய்வுநிலைஅதிபர்சிற்பிசரவணபவன் நூல் அறிமுகவுரையினையும் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை முன்னாள் விரிவுரையாளர் கலாநிதி பண்டிதர் புலவர் செ.திருநாவுக்கரசு நூல் ஆய்வுரையினையும் யாழ்.பல்கலைக்கழக பௌதீக துறைத்தலைவர் பேராசிரியர் பு.ரவிராஜன் நன்றியுரையினையும் ஆற்றவுள்ளனர் (ஸ்ரீ-4)




# ஆசிரியர்களுக்கான கணித உபகரணங்கள் தயாரித்தல் போட்டி

(யாழ்ப்பாணம்)

கல்வி அமைச்சினால் வலய, மாகாண, தேசிய ரீதியில் ஆசிரியர்களுக்கான கணித உபகரணங்கள் தயாரித்தல் போட்டி நடத்த ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இதில் வலயமட்ட போட்டிகள் யாவும் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 20 ஆம் திகதிக்கு முன்பதாகவும் மாகாண மட்டப் போட்டி 2012 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 10 ஆம் திகதிக்கு முன்பதாகவும் நடத்தப்படும். இதற்கான திகதிகள் பின்னர் அறிவிக்கப்படும்.

அத்தோடு வலய மட்டத்தில் தெரிவு செய்யப்படும் சிறந்த உபகரணங்கள் மாகாண மட்டப் போட்டியில்பங்குபற்ற முடியும். உபகரணங்கள் தயாரிக்கும் போது பின்வரும் விடயங்களை கவனத்தில் கொள்ளவேண்டும்.

✷ கணித எண்ணக்கருக்கள் இலகு வான முறையில் விளங்கப்படுத்தக் கூடியதாக இருத்தல்.

✷ மகிழ்ச்சிகரமான விளையாட்டு மூலம் வகுப்பறையில் கணிதம் கற்பிக்கக் கூடியதாக இருத்தல்.

✷ மெல்லக் கற்போருக்கு தகுந்ததாக உபகரணம் இருத்தல்

✷ இலகுவான முறையில் செய்யக்கூடியதாக இருத்தல்.

✷ கணித அறையில் பாவிக்க கூடியதாக இருத்தல்.

✷ சுய தயாரிப்பாக இருத்தல் வேண்டும்.

இதில் தேசிய ரீதியில் முதலாவதாக தெரிவு செய்யப்படும் உபகரணத்திற்கு 30 ஆயிரம் ரூபாவும் இரண்டாவதாக தெரிவு செய்யப்படும் உபகரணத்திற்கு 25 ஆயிரம் ரூபாவும் மூன்றாவதாக தெரிவு செய்யப்படும் உபகரணத்திற்கு 20 ஆயிரம் ரூபாவும் மேலும் தேசிய மட்டத்தில் தெரிவு செய்யப்படும் ஒவ்வொரு உபகரணத்திற்கும் தலா 5 ஆயிரம் ரூபா வீதமும் வழங்கப்படும்.

தெரிவு செய்யப்படும் உபகரணங்கள் பாடசாலைகளில் உள்ள கணித அறைகளில் பாவிப்பதற்கு கல்வி அமைச்சினால் கொள்வனவு செய்வதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும்.

அத்தோடு ஆசிரியர்கள் இணைக்கப்பட்ட மாதிரிக்கமைவாக விண்ணப்பபடிவங்கள் தயாரித்து கணிதபாட வலய உதவிக்கல்விப்பணிப்பாளரிடம் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

(ஸ்ரீ-12)


# கல்விமாணி புதிய பிரிவு ஆரம்ப வைபவம்

தேசிய கல்வி நிறுவக கல்வி மாணிப்பட்டநெறி 2011 புதிய கல்வி ஆண்டுக்கு தெரிவு செய்யப்பட்ட தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூல மாணவர்களுக்கான ஆரம்ப வைபவம் யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியில் நாளை 17 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகும்.

தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான கடிதங்கள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அடிப்படைத்தகைமைகளைப் பூர்த்தி செய்து அழைப்புக்கடிதங்கள் கிடைக்கப்பெறாத மாணவர்கள் எதிர்வரும் சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரிக்குச் சமுகமளிக்கவும்.

இதனை இரண்டாம் வருட கல்விமாணிப்பட்டநெறி யாழ்.மத்திய கல்லூரி மற்றும் தேசிய கல்வியியற் கல்லூரி நிலையங்களின் மாணவர்களை எதிர்வரும் வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ்.தேசிய கல்வியற் கல்லூரிக்குச் சமுகமளிக்குமாறு தேசிய கல்வி நிறுவக இணைப்பாளர் எஸ். ஆர். சத்தியேந்திரம்பிள்ளை அறிவித்துள்ளார். (ஸ்ரீ)

# வதிரிகலாமன்ற சனசமூக நிலையத்தை சீரான முறையில் நடத்தக் கோரிக்கை



(கரவெட்டி)

நெல்லியடி வடக்கு வதிரிகலாமன்ற சனசமூக நிலையம் பல வருடகாலமாக இயங்காமையால் அப்பகுதி மக்கள் வாசிப்புத்திறன்களை வளர்த்துக் கொள்ள பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக விசனம் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது, மேற்படி சனசமூக நிலையம் 1947 ஆம் ஆண்டு அப்பகுதி மக்களால் உருவாக்கப்பட்டு பின் படிப்படியாக வளர்ச்சி பெற்றது.

அரச, அரசசார்பற்ற நிறுவனம் மற்றும் அப்பகுதி மக்களின் நிதியுதவியுடன் கட்டங்கள் நிர்மாணிக்கப்பட்டு சனசமூக நிர்வாகம் உருவாக்கப்பட்டு இயங்கி வந்துள்ளது.

பின்னர் பல வருடங்களாக இச் சனசமூக நிலையம் இயங்காமல் இருக்கின்றதென்று குறித்த நிர்வாகம் இச் சனசமூக நிலையத்தை மீளவும் இயங்க வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் அப்பகுதி மக்களால் கோரிக்கை விடுவிக்கப்பட்டுள்ளது.

(12-24)

# வெற்றிலைக்கேணியில் விழிப்புக்குழு அமைப்பு

(பொற்பதி)

வடமராட்சி கிழக்கு வெற்றிலைக்கேணி ஜெ/432 கிராமசேவையாளர் பிரிவு பகுதியில் இடம்பெறும் குற்றச் செயல்களை கட்டுப்படுத்தும் நோக்குடன் விழிப்புக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

அண்மைக்காலமாக பல பிரதேசங்களிலும் இடம்பெற்று வரும் குற்றச் செயல்கள் மற்றும் மர்ம மனிதர்களின் நடவடிக்கைகளைக் கருத்திற் கொண்டு மருதங்கேணி பொலிஸ் பிரிவினராலும் இப்பகுதி கிராம அலுவரினாலும் தலைவர், செயலாளர் உள்ளடங்கலாக 15 பேர் கொண்ட விழிப்புக்குழு நிர்வாகம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

(ஸ்ரீ-12-64)

# மாகாணமட்ட சமூக விஞ்ஞானப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

மாகாணமட்ட சமூக விஞ்ஞான போட்டிகள் நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதில் யாழ்ப்பாணம், வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி, தீவகம், கிளிநொச்சி வலயங்களை சேந்த பாடசாலைகளுக்கு யா/வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையிலும், துணுக்காய், முல்லைத்தீவு, மன்னார் மடு, வவுனியா வடக்கு, வவுனியா தெற்கு வலயங்களை சேர்ந்த பாடசாலைகளுக்கு வ/வவுனியா தமிழ் மகா வித்தியாலயத்திலும் இப்போட்டிகள் நடைபெறவுள்ளன.

எனவே, தங்கள் வலயங்களிலிருந்து வலய ரீதியாக நடைபெற்ற போட்டிகளில் பங்கு பற்றி வெற்றியீட்டிய மாணவர்களை மாகாண மட்டப் போட்டிகளில் கலந்து கொள்ளச் செய்வதற்கு ஏற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வடமாகாண கல்விப்பணிப்பாளர் ப.விக்வேஸ்வரன் வலயக்கல்விப்பணிப்பாளர்களுக்கு அறிவித்துள்ளார்.

(ஸ்ரீ-12)

# கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் இணைந்து நடத்தும் அரசியல் கருத்தரங்கு நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு காங்கிரஸ் இல்லத்தில் நடைபெறவுள்ளது.

இதில் சமகால அரசியல் எனும் தலைப்பில் கருத்தரங்கு நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ஸ்ரீ-12)

# கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சர்வதேச மார்க்கசிய குழுவின் கலந்துரையாடலொன்று நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு ஆரியகுளம் முன்பாகவுள்ள உயர் கலைக்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இதில் சமகால அரசியல் எனும் விடயம் பற்றி கலந்துரையாடல் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-12)

# கல்விமாணி பட்டநெறி மூன்றாம் வருட பரீட்சை

(யாழ்ப்பாணம்)

தேசிய கல்வி நிறுவக கல்விமாணிப்பட்டநெறி மூன்றாம் வருடப் பரீட்சை எதிர்வரும் 24 ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெறுமென தேசிய கல்வி நிறுவக இணைப்பாளர் எஸ்.ஆர்.சத்தியேந்திரம்பிள்ளை அறிவித்துள்ளார். (ஸ்ரீ-12)

# ஆசிரியர் தெரிவிற்கான எழுத்துப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

தீவகம் கல்வி வலயத்தில் நிலவும் ஆங்கில ஆசிரியர்களுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்காக விண்ணப்பித்தவர்களுக்கான எழுத்துப்பரீட்சை யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலகத்தில் உள்ள முகாமைத்துவ மண்டபத்தில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதில் அழைப்புக்கடிதம் மற்றும் அடையாள அட்டையுடன் விண்ணப்பித்தவர்கள் சமுகமளிக்கும்படி வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் தெரிவித்துள்ளார்.

(4-12)

# மணற்காடு முதல் அம்பன் வரையான மக்களுக்கான நடமாடும் சேவை

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உள்நாட்டில் இடம்பெயர்தோருக்கான தேசிய பாதுகாப்பிற்கும் நிரந்தர தீர்விற்குமான செயற்றிட்டத்தினால் மணற்காடு தொடக்கம் அம்பன் வரையான பிரதேச மக்களுக்கான நடமாடும் சேவை ஒன்றினை இன்று காலை 10 மணி தொடக்கம் பிற்பகல் 3.15 மணிவரை குடத்தனையிலுள்ள தென்னிந்தியதிருச்சபை ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நடமாடும் சேவையில்,

சட்ட உதவி ஆணைக்குழு,இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, பதிவாளர் நாயகத்திணைக்களம்,வடமராட்சி கிழக்கு பிரதேச செலயகம், பருத்தித்துறை வலயக்கல்விப் பணிமனை, பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி, பருத்தித்துறை சிறுவர் மற்றும் பெண்கள் பிரிவு பொலிஸ் நிலையம், பால் நிலை வன்முறைக்கு எதிரான அமைப்பு, விவசாயத்திணைக்களம்,பருத்தித்துறை பிரதேசசபை, மீன்பிடித்திணைக்களம், இலங்கை மின்சாரசபை, இலங்கை போக்குவரத்து சபை ஆகியவை தமது சேவைகளை வழங்கவுள்ளன.

எனவே, இப்பகுதி மக்கள் இந்நடமாடும் சேவையில் பங்கு பற்றுவதன் மூலம் தங்களின் பிரச்சினைகளுக்கான தீர்வுகளைப் பெற்றுக் கொள்ள முடியுமென யாழ்ப்பாணம் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உள்நாட்டில் இடம்பெயர்ந்தோருக்கான செயற்றிட்ட பிராந்திய நிகழ்ச்சித்திட்ட அதிகாரி அறிவித்துள்ளார். (4-2-12)

# அடிக்கல்நாட்டு விழா

(இருபாலை)

கட்டப்பிராய் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்திற்கு ஆலய பரிபாலனசபை அலுவலகம் ஒன்று அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு இன்று நண்பகல் 12 மணிக்கு இடம்பெறவுள்ளதாக பரிபாலனசபை செயலாளர் தெரிவித்துள்ளார்.

(4-12-136)

# ஜெனீவாவின் தீர்மானங்களுக்கு இலங்கை ஒருபோதும் அஞ்சாது



## குணதாஸ அமரசேகர கூளுரை

(கொழும்பு)

ஜெனீவாவின் தீர்மானங்களுக்கோ ஐ.நா. உட்பட அமெரிக்காவின் படைப்பலங்களுக்கோ இலங்கை ஒருபோதும் அஞ்சாது. மீள் தலையீடுகளுக்கு எவராவது முயற்சித்தால் அதனை எதிர்கொள்ள நாம் தயாராகவே உள்ளோம் என்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் கலாநிதி குணதாஸ அமரசேகர தெரிவித்தார்.

ரொபேட் ஓ பிளேக் போர் குற்றச்சாட்டுக்களுக்கு அடிப ணிய வைக்கவும் உள்நாட்டில் அதிகாரப்பகிர்வின் ஊடாக நாட்டை துண்டாடவுமே இலங்கை வந்தார். எனவே ,அரசாங்கம் உடனடியாக பிரிவினைவாதத்திற்கு ஏதுவான காரணிகளை தேசிய அரசியலில் தடை செய்ய வேண்டும் என்றும் அவர் குறிப் பிட்டார்.

இது தொடர்பாக கலாநிதி குணதாஸ அமரசேகர மேலும் தெரிவிக்கையில், ஜெனீவா அமர்விற்கு பான் கீ முன் நிபுணர் குழு அறிக்கையை அனுப்பி வைத்துள்ளார். எனவே, ஏதாவது வழியை பின்பற்றி நாட்டிற்கு எதிரான சர்வதேச நடவடிக்கைகளை ஏற்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றமை வெளிப்படையாகவே தெரிகின்றது.

இதற்கு அரசாங்கம் அஞ்சாமல் முகம்கொடுக்க வேண்டும். பிரிவினைவாத சர்வதேச சூழ்ச்சிக்காரர்களின் நோக்கம் இலங்கையை துண்டாடுவதே ஆகும்.

நிபுணர்குழு அறிக்கை 6 மாத காலத்திற்கு பின்னர் பேசப்படும் என்றால் அது பாரிய ஆபத்தானதாகவே அமையும்.

எவ்வாறயினும் எந்தவொரு சர்வதேசத்தின் நடவடிக்கைகளுக்கும் தீர்மானங்களுக்கும் இலங்கை அடிபணியாது. அமெரிக்கா, இலங்கை மீதான தலையீட்டை அத்துமீறி மேற்கொள்கின்றது. ரொபேட் ஓ பிளேக்கின் இலங்கை வருகை நாட்டிற்கு எதிரான காரியமாகவே உள்ளது.

தமிழ் கூட்டமைப்பினரை அவர் சந்தித்தமையும் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்தமையும் பிரிவினைவாத போராட்டத்திற்கு மீண்டும் வித்திடும் நடவடிக்கை என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (4)

# ஆபாச வீடியோக்களை விற்ற மூவர் பொலிஸாரால் கைது

(கொழும்பு)

வெலிகந்தை செவனபிட்டிய பகுதியில் ஆபாச வீடியோக்களை விற்றதாகக் கருதப்படும் மூவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இது தொடர்பாக கிடைக்கப்பெற்ற தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனையின் போதே சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

அத்துடன் ஆபாச வீடியோ இறுவெட்டுக்கள், அவற்றைத் தயாரிப்பதற்காக பயன்படுத்தப்பட்ட கணனி உள்ளிட்ட ஒரு தொகை உபகரணங்களையும் இதன்போது பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

சந்தேகநபர்களை பொலநறுவை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-4)

# மோசமான நிதிநிலைமையில் உள்ள அரசினால் உள்ளூராட்சி மன்றங்களுக்கு உதவமுடியுமா?

## ஐ.தே.க.வேட்பாளர் கேள்வி

கொழும்பு மாநகரசபையின் வருமானம் போதுமானதாக இருப்பதனால் தான் கொழும்பு மேயராக தெரிவு செய்யப்பட்டால் மாநகரசபையின் செயற்பாடுகளுக்கு மத்திய அரசாங்கத்தின் நிதியை நம்பியிருக்க போவதில்லை என ஐக்கிய தேசிய கட்சியின் கொழும்பு மாநகரசபை.மேயர் வேட்பாளர் ஏ.ஜே. எம்.முஸம்மில் தெரிவித்துள்ளார்.

நுகர அபிவிருத்தி அதிகார சபை போன்ற நிறுவனங்கள் கொழும்பு மாநகரசபை மக்களுக்கு பாதகமான எதனையும் செய்யாத போது அவற்றுடன் ஒத்துழைக்க தயாராக இருப்பதாக அவர் குறிப்பட்டார்.

கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் உரையாற்றிய அவர், மத்திய அரசாங்கம் தற்போது வங்குரோந்து நிலையிலுள்ளதாக அவர் கூறினார்.

இத்தேர்தலில் வெற்றி பெற்றாலும் எதிர் கட்சியினால் மத்திய அரசாங்கத்தின் ஆதரவினை நிர்வாகம் செய்ய முடியாது என சில அமைச்சர்கள் தெரிவிக்கின்றமைக்கு பதிலளிக்கும் வகையில் அரசாங்க ஊழியர்களின் ஆறு மாத சம்பளத்தை மட்டும் வழங்கும் அளவுக்கு மோசமான நிதி நிலைமையை கொண்டுள்ள அரசாங்கம் எவ்வாறு உள்ளூராட்சி மன்றங்களுக்கு உதவி செய்ய முடியும் என கேள்வி எழுப்பினார்.

மனோ கணேசன் தலைமையிலான ஜனநாயக மக்கள் முன்னணி மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகியன உங்களுக்கு போட்டியாக அமையுமா என டேட்டபோது இரு கட்சிகளும் அரசாங்கத்தின் ஒப்பந்தத்தை முன்னெடுப்பதாக முஸம்மில் குறிப்பிட்டார். (4-2)

# இருபாலை கிழக்குப் பகுதியில் குடிநீர் வழங்கும் திட்டம்

(நல்லூர்)

வலி.கிழக்கு கோப்பாய் பிரதேச செயலர் பிரிவிலுள்ள இருபாலை கிழக்கு பகுதிப் பிரதேசங்களுக்கான குடிநீர் வழங்கும் திட்டம் விரைவில் பூர்த்தி செய்யப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதற்கான துரித வேலைகள் தேசிய நீர் வளங்கள் வடிகாலமைப்பு சபையினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இவ்வளவு காலமாக இருபாலை கிழக்குப் பகுதிகளில் குடிநீருக்கு சிரமப்பட்டு வந்த சுமார் 3 ஆயிரத்திற்கு மேற்பட்ட குடும்பங்கள் இத்திட்டத்தால் நன்மையடைய இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதில் நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி தேர்தலிற்கு முன்னர் பாரம்பரிய கைத்தொழில்க்ள் மற்றும் சிறுதொழில் அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா தலைமையில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ வருகை தந்து இதற்கான அடிக்கல்லினை நாட்டி வைத்தமை குறிப்பிடத்தக்கது. (4-12-134)

# இந்திய வீடமைப்பு திட்டத்தின் கீழ் முஸ்லிம் மக்களுக்கும் வீடுகள்

## வடமாகாண ஆளுநர் உறுதி

(கொழும்பு)

வன்னி மாவட்டத்தில் மீள்குடியேற்றப்படும் முஸ்லிம் மக்களின் உட்கட்டமைப்பு ஏற்பாடுகள் மற்றும் வாழ்வாதார பிரச்சினைகளுக்கு உடனடித்தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக வட மாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி உறுதியளித்துள்ளார்.

முஸ்லிம் பிரதிநிதிகளை வடமாகாண ஆளுநரை சந்தித்த போதே அவர் இந்த உறுதிமொழியை வாங்கியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இந்திய வீடமைப்பு திட்டத்தின் கீழ் இடம்பெயர்ந்த தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களுக்கு வீடுகள் பாரபட்சமின்றி பகிர்ந்தளிக்கப்படவிருப்பதாகக் கூறினார்.

வடக்கின் வசந்தம் செயற்றிட்டத்தின் கீழ் மின்சார இணைப்புகளுக்காக விண்ணப்பித்தோருக்கும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவுடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொடுப்பதாக அவர் தெரிவித்தார்.

அத்தோடு மன்னார் எருக்கலம்பிட்டி மத்திய மகா வித்தியாலயத்தில் க.பொ.த.உயர்தர பிரிவில் கல்வி கற்பிக்கும் தொண்டர் ஆசிரியர்கள் ஐவருக்கு ஒக்டோபர் மாதம் முதலாம் திகதியிலிருந்து நிரந்தர ஆசிரியர் நியமனம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-4)

# அரச மற்றும் தனியார்துறை ஊழியர்களின் சம்பளம் உயர்த்தப்பட வேண்டும்

## தேசிய ஊழியர் சங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

இம்முறை வரவு -செலவுத்திட்டத்தில் அரச மற்றும் தனியார்துறை ஊழியர்களின் சம்பளத்தை 10 ஆயிரம் ரூபாவால் உயர்த்த வேண்டும் என தேசிய ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது சங்கத்தின் தலைவரான ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்த்தன இதனை தெரிவித்துள்ளார்.

வரவு-செலவுத்திட்ட யோசனைகள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பது தொடர்பிலான திட்டங்கள் அரசாங்கத்தினர்ல் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

அரச மற்றும் தனியார்துறை ஊழியர்களின் மாதாந்த சம்பளம் பத்தாயிரம் ரூபாவால் உயர்த்தப்பட வேண்டும் என்பதை ஐக்கிய தேசியக்கட்சி சார்பில் தேசிய ஊழியர்கள் சங்கம் வலியுறுத்துவதாக ஜயலத் ஜயவர்த்தன வலியுறுத்தியுள்ளார். (ஸ்ரீ-4)

# 16 வைத்தியசாலைகளுக்கு மின்பிறப்பாக்கிகள் வழங்கல்

## சுகாதார அமைச்சு தீர்மானம்

(கொழும்பு)

அத்தியாவசிய சேவைகளைத் தொடர்ந்து மேற்கொள்வதற்காக தெரிவு செய்யப்பட்ட வைத்தியசாலைகளுக்கு 500 தொடக்கம் 1000 கிலோவோல்ட் வலுகொண்ட மின்பிறப்பாக்கிகளை வழங்க அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவின் ஆலோசனைக்கு ஏற்ப இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதற்கான அவுஸ்திரேலிய அதிகார அரசாங்கத்துடன் கடனுதவி ஒப்பந்தம் ஒன்று செய்து கொள்ளப்பட உள்ளது.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை கொழும்பு வடக்கு மற்றும் தெற்கு போதனா வைத்தியசாலைக்ள் மஹரகம புற்றுநோய் சிகிச்சை வைத்தியசாலை ,கூவனல்லை ஆதார வைத்தியசாலை, களுத்துறை மாவட்ட வைத்தியசாலை, கண்டி மற்றும் கராபிட்டிய போதனா வைத்தியசாலைகள் உட்பட 16 வைத்தியசாலைகளுக்கு இவை வழங் கப்பட உள்ளது. (4-2)

# அநுராதபுரத்திலுள்ள சமாதி உடைப்பு அரசாங்கமே பொறுப்பேற்க வேண்டும்

## மக்கள் விடுதலை முன்னணி தெரிவிப்பு

அநுராதபுரம் பிரதேசத்தில் முஸ்லிம் ஸியாராம்(சமாதி) உடைக்கப்பட்டதற்கு அரசாங்கமே பொறுப்பு கூற வேண்டும் என மக்கள் விடுதலை முன்னணி நேற்று தெரிவித்தது.

குறித்தசமாதிஉடைக்கப்பட்ட போதுபொலிஸ் உயர் அதிகாரிகளும் உடன் இருந்துள்ளனர். இதனால் இந்த ஸியாரா்ம் உடைப்பிற்கு அரசாங்கம் பொறுப்பு கூற வேண்டும் என மக்கள் விடுதலை முன்னணியின் பிரசார செயலாளர் விஜித ஹேரத் தெரிவிதார்.

அநுராதபுரம் பிரதேசத்தில் முஸ்லிம் ஸியாராம் உடைக்கப்பட்டதன் பின்னணியில் மக்கள் விடுதலை முன்னணி செயற்பட்டதாக மேல்மாகாண ஆளுநர் அலவி மௌலானா நேற்றுமுன்தினம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத்தை இணையத்தளத்திற்கு தொடர்பு கொண்ட போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதனைவிடுத்து மக்கள் விடுதலை முன்னணியின் மீது குற்றஞ்சாட்டுவது த்வறாகும் என அவர் கூறினார்.

யுத்தத்திற்கு பின்னரான சூழ்நிலையில் இலங்கையில் மதங்களுக்கிடையிலான உறவை கட்டியெழுப்பும் நடவடிக்கையில் மக்கள் விடுதலை முன்னணி ஈடுபட்டுள்ளது.

இவ்வாறான சந்தர்ப்பத்தில் முஸ்லிம் ஸியாராத்தினை உடைத்து நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்த வேண்டிய எந்த தேவையும் இல்லை என அவர் தெரிவித்தார்.

மக்கள் விடுதலை முன்னணிக்கு எதிராக அரசாங்கம் இவ்வாறான பொய் பிரசாரங்கள் மேற்கொள்வதை நிறுத்த வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் ஹேரத் மேலும் தெரிவித்தார். (4-2)

# தமிழகத்திலிருந்து 28 பேர் நாடு திரும்பியுள்ளனர்

(கொழும்பு)

இலங்கையில் மோதல் இடம்பெற்ற காலப்பகுதியில் அகதிகளாக இந்தியாவுக்கு சென்ற 28 இலங்கையர்கள் நேற்று முன்தினம் மீண்டும் நாடு திரும்பியுள்ளனர்.

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர்ஸ்தானிகர் அலுவலக ஒத்துழைப்புடன் அகதிகளாக இந்தியாவுக்கு தப்பிச் சென்ற ஒன்பது குடும்பங்களைச் சேர்ந்த 28 பேர் இலங்கையை வந்தடைந்துள்ளனர்.

அவர்களுக்கு கட்டுநாயக்க விமான நிலையத்தில் அமோக வரவேற்பளிக்கப்பட்டது.

இந்த வருடத்தின் இதுவரையான காலப் பகுதியில் ஆயிரத்து 446 இலங்கை அகதிகள் இந்தியாவிலிருந்து நாடு திரும்பியுள்ளதாக அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர்ஸ்தானிகர் அலுவலகம் தெரிவிக்கின்றது.

கடந்த 2009 ஆம் ஆண்டு 818 பேரும் 2010 ஆம் ஆண்டு 2 ஆயிரத்து 54 பேரும் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் பங்களிப்புடன் இலங்கைக்கு மீளத் திரும்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-4)

# 2 ஆவது உலகத் தமிழர் பொருளாதார மாநாடு

## ஒக்டோபர் முதலாம் திகதி டுபாயில் ஆரம்பம்

இரண்டாம் உலகத் தமிழர் பொருளாதார மாநாடு மற்றும் கண்காட்சி டுபாயில் உள்ள உலக வர்த்தக மையத்தில் ஒக்டோபர் முதலாம் திகதி முதல் நான்கு நாட்கள் நடைபெறவுள்ளது.

உலகம் முழுவதுமுள்ள தமிழர்களின் கலாசாரம் மற்றும் பொருளாதார நிலை குறித்து இந்த மாநாட்டில் விவாதிக்கப்படவுள்ளது.

தற்போது உலகத் தமிழர் நிலை, முதலீட்டு வாய்ப்புகள் ,'தொழில்நுட்பம் ஆகியவை குறித்து பல நிபுணர்கள் உரையாற்றுகின்' றனர்.

உலகம் முழுவதிலுமுள்ள தமிழர்கள் இதில் பங்கேற்று தங்கள் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ள உள்ளனர். கல்வி, வேலை வாய்ப்பு, தொழில்வாய்ப்புக்கள் தொடர்பாக விழிப்புணர்வு ஏற்படுத்தவும் தனிநபர் மற்றும் குழுவாக ஒன்றிணைந்து சமுதாய வளர்ச்சிக்கு பாடுபடவும் இந்த மாநாடு நடத்தப்படுகின்றது.

இந்த மாநாட்டில் இந்தியா உட்பட நாடுகளைச் சேர்ந்த அமைச்சர்கள், நீதிபதிகள், அதிகாரிகள், கல்வியாளர்கள், தொழில் அதிபர்கள் பலரும் பங்கேற்கின்றனர்.


உலகத் தமிழர்களுக்கு பல துறைகளிலும் சேவை புரிந்தவர்களுக்கு உலகத் தமிழ்மாமணி என்ற விருது வழங்கப்படுகின்றது.

மலேசிய தேசிய நில நிதி கூட்டுறவு சங்க செயல் தலைவர் கே.ஆர்.சோமசுந்தரம், அவுஸ்திரேலிய ஸ்பிரிங் பில்டு நில கோர்ப்பரேஷன் தலைவர் மகாலிங்கம் சின்னத்தம்பி,

அமெரிக்கா வேலுச்சாமி எண்டர்பிரைசஸ் தலைவர் பி.வேலுச்சாமி, அமெரிக்கா டெக் மகிந்திரா சேவைகள் தலைவர் பால் பாண்டியன், சிங்கப்பூர் இந்திய தொழில் வர்த்தக கழக தலைவர் விஜய் அய்யங்கார், அமெரிக்கா ஸ்ரீ மீனாட்சி கோயிலை உருவாக்கிய எஸ்.கண்ணப்பன்,

யுஎன்ஐடிஓ தலைமை இயக்குநரின் முன்னாள் முதன்மை ஆலோசகரான அவுஸ்திரேலியாவை சேர்ந்த வி.ஜெபமாலை, அமெரிக்கா மைல்ஸ்டோன் மெட்டல்ஸ் தலைவர் ஜி.ராம்பிரசாத், பிரிட்டன் சிறுநீரக நிபுணர் பி.சண்முகராஜ் ஆகியோருக்கு இந்த உலகத் தமிழ்மாமணி விருது வழங்கப்படுகிறது. (ஸ்ரீ-4)

# வீதி அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கான உபகரணங்கள் ஆளுநரால் கையளிப்பு



(கொழும்பு)

வீதி அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதற்காக உரிய உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ. சந்திரசிறி பிரதமராக கலந்து கொண்டு இவ்வுபகரணங்களை வீதி அபிவிருத்தித் திணைக்கள பிரதம பொறியியலாளர் மற்றும் நிறைவேற்றுப் பொறியியலாளர்களிடம் கையளித்திருந்தார்.

ரூபா 34 மில்லியன் பெறுமதியான இவ்வுபகரணங்கள் பாதிக்கப்பட்ட பகுதியின் அவசர முன்னேற்றம் தொடர்பான செயற்றிட்டத்தின் ஊடாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் அனுசரணையுடன் வழங்கப்பட்டிருந்தது.

மாகாண உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் ஏ.ஈ.எஸ்.ராஜேந்திரா, மாகாண வீதி அபிவிருத்தி திணைக்கள பணிப்பாளர் ரி.சிவராஜலிங்கம், பிரதம பொறியியலாளர், நிறைவேற்றுப் பொறியியலாளர்கள் மற்றும் பல அதிகாரிகளும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். (ஸ்ரீ-4)

# போதிய சட்ட உதவிகள் கிடைக்கப் பெறாததால் ஜோர்தான் சிறையில் வாடும் இலங்கைப் பணிப்பெண்

(கொழும்பு)

போதிய சட்ட உதவிகள் கிடைக்காததால் இலங்கைப் பெண்ணொருவர் ஜோர்தானில் சிறையில் அடைக்கப்பட்டுள்ளதாக ஹொங்கொங்கை தளமாகக் கொண்ட ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

காலி மாவட்டத்தின் ரத்கம, கொடவுதாவத்த எனும் இடத்தைச் சேர்ந்த 33 வயதான கே. ஸ்ரீயானி எனும் இப்பெண் கடந்த 2006 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஜோர்தானுக்குச் சென்றுள்ளார் என அவ்வாணைக்குழு தெரிவித்துள்ளது.

ஜோர்தானின் சஹாப் நகரிலுள்ள ஐவரி ஆடைத் தொழிற்சாலையில் (தையல்) இயந்திர இயக்குநராக பணியாற்ற அவர் சென்றார். அங்கு சிரமங்களை எதிர்கொண்டதன் காரணமாக அத்தொழிற்சாலையிலிருந்து விலகியதுடன் தங்குவதற்கு வேறொரு இடத்தை தேடிக் கொண்டார்.

அதையடுத்து அவருக்கு உதவ முன்வந்த சட்டவிரோத குடியேற்றவாசியொருவர் பின்னர் அப்பெண்ணை விபசாரத்திற்கு தள்ளினார். அப்பெண் அதை கடுமையாக எதிர்த்தார்.

அதன் பின் அப்பெண்ணை கொல்ல முயற்சியொன்று நடந்தது. அப்போது தன்னை தாக்க வந்தவருடன் அப்பெண் சண்டையிட்டார். இதில் தாக்க வந்த நபர் பலியானார்.

அச்சம்பவத்தையடுத்து கைது செய்யப்பட்ட ஸ்ரீயானிக்கு எதிராக வழக்குத் தொடுக்கப்பட்டு 15 வருட கால சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

தனக்கு முறையான மொழிபெயர்ப்பு உதவியும் தனக்கும் தனது சட்டத்தரணிக்கும் இடையில் முறையான தொடர்பாடல் இல்லாததாலும் தான் சுயபாதுகாப்பு நடவடிக்கையை மேற்கொண்டமைக்கான ஆதாரத்தை முன்வைத்து தான் அப்பாவி என்பதை நிரூபிக்க முடியாத சூழலில் குற்றவாளியாகக் காணப்படும் நிலை ஏற்பட்டதாக ஸ்ரீயானி கூறியுள்ளார்.

தனது பிரச்சினைகளை தீர்க்கவும் தனக்கு நியாயம் கிடைக்கவும் உதவுமாறு இலங்கை அரசாங்கத்திடமும் சர்வதேச அமைப்புகளிடமும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (ஸ்ரீ-4)

# மேர்வின் சில்வாவின் செயலுக்கு மனோகணேசன் கண்டனம்

(கொழும்பு)

முன்னேஸ்வரம் பத்திரகாளி அம்மன் ஆலயத்தில் அமைச்சர் மேர்வின் சில்வா கோயில் வளாகத்திற்குள் அடியாட்களுடன் அத்துமீறி நுழைந்து சட்டத்தை தன் கையில் எடுத்துக் கொண்டதை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

மிருகவதையை தடுப்பதாக கூறிக் கொள்ளும் இந்த அரசியல்வாதி தமிழ் இந்துக்களின் மனங்களை வதை செய்துள்ளார் என ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோகணேசன் தெரிவித்துள்ளார்.

முன்னேஸ்வர ஆலயத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பிலே கருத்து தெரிவித்த மனோ கணேசன் மேலும் கூறியுள்ளதாவது,

முன்னேஸ்வரம் கோயிலில் ஆடுகள், கோழிகள் பலியிடப்படுவது பல ஆண்டுகளாக நடைபெற்று வருகின்றன. இது இந்து தர்மத்திற்கு முரணானது. மிருகவதையை ஒருபோதுமே இந்துப் பாரம்பரியம் ஏற்றுக் கொள்வதில்லை.

உலகெங்கும் பல்வேறு மதஸ்தலங்களிலேயே பகுத்தறிவிற்கு ஒவ்வாத எத்தனையோ காரியங்கள் நடைபெறுகின்றன. இவ்விதம் பாரம்பரியமாக நடைபெற்றுவரும் ஒரு செயற்பாட்டை தடாலடியாக தடுத்து நிறுத்திவிட முடியாது. முன்னேஸ்வரம் தொடர்பிலே ஏற்கனவே நீதிமன்றத்தின் தலையீடு ஏற்பட்டுள்ளது.

அத்துடன் அகில இலங்கை இந்து மாமன்றம் உட்பட பல்வேறு இந்து மத அமைப்புகளும் இது தொடர்பில் அக்கறை கொண்டுள்ளன. அது தவிரவும் அரசாங்கத்திகுள்ளே பல்வேறு தமிழ் இந்து அமைச்சர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களும் இருக்கின்றார்கள்.

இந்நிலையில் இந்து அமைப்புகளின் துணையைபெற்றுக் கொள்ளாமலும் குறைந்த பட்சமாக அரசாங்கத்தில் இருக்கக்கூடிய இந்து அரசியல்வாதிகளை துணைக்கு அழைத்துக் கொள்ளாமலும் மேர்வின் சில்வா தனது அடியாட்களுடன் ஆலயத்திற்குள் அத்துமீறி பிரவேசித்துள்ளார்.

அங்கு குழுமியிருந்த பக்தர்களையும் அந்த ஆலய குருமார்களையும் அவமானப்படுத்தியுள்ளார். ஒட்டுமொத்தமாக இந்து உணர்வாளர்களின் மனங்களை கடுமையாக புண்படுத்தியுள்ளார்.

இத்தகைய மிருகவதையை தடாலடியாக தடுக்க வேண்டும் என்று கூறுகின்றவர்கள் வாழ்கின்ற இந்நாட்டிலேதான் இலட்சக்காணக்கான மக்கள் சில நாட்களுக்குள் கொல்லப்பட்டார்கள் என்பதை நாம் நினைத்து பார்க்க வேண்டும். இன்று மிருகவதையை எதிர்க்கின்றவர்கள் மனித படுகொலைகளை எதிர்க்காதது மாத்திரம் அல்ல அவற்றை நியாயப்படுத்தியவர்கள் என்பதை நாங்கள் மறக்கவில்லை. சட்ட ஒழுங்கையும் தர்மத்தையும் நிலைநாட்டும் பொறுப்புக்களை பொலிஸாருக்கும் மதத் தலைவர்களுக்கும் மாத்திரமே வழங்க வேண்டும். (ஸ்ரீ-4)

# நிர்வாகசபைக் கூட்டம்

(குருநகர்)

யாழ்.பிரதேச கலாசார பேரவையின் நிர்வாக சபைக் கூட்டம் இன்று மாலை 3 மணிக்கு பிரதேச மாநாட்டு மண்டபத்தில் கலாசார பேரவை தலைவர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் கலாசார பேரவை நிர்வாகசபை உறுப்பினர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

(ஸ்ரீ-12-39)

# புரட்டாதி மாத இராசி பலன்கள்




(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதலாம் பாதம்)

**இறை வழிபாடு இனிமை சேர்க்கும்!**

*எந்தக் காரியமாக இருந்தாலும் நாளை பார்ப்போம் என்று சொல்லாமல் உடனடியாக செய்ய வேண்டும் என்று சொல்லும் மேட இராசி நேயர்களே!*

வளைந்து கொடுத்துப் போகும் தன்மை உங்களிடம் இருப்பதால் தான் நண்பர்களும் உறவினர்களும் உங்களைத் தேடி வந்து கொண்டிருக்கின்றார்கள். தன்னம்பிக்கை அதிகம் பெற்றிருப்பவர்களின் வரிசையில் முதலில் நிற்பவர்களும் நீங்கள் தான். நாலுபேர் நம்மைப் பற்றி என்ன பேசினாலும் பரவாயில்லை. நாம் செய்யும் செயல்களை செய்து கொண்டேயிருப்போம் என்று சொல்வீர்கள்.

உங்களுக்கு இந்த புரட்டாதி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது இராசிநாதன் செவ்வாய் நீச்சம் பெற்றிருக்கின்றார். ஆனால் அது நின்ற இராசி நாதனோ உச்சம் பெற்று நீச்ச பங்க இராஜ யோகத்தோடு இம்மாதம் தொடங்குகின்றது. எனவே எந்தக் காரியங்களும் முதலில் தாமதமாக இருந்தாலும் முடிவில் துரிதமாக முடியும். விரயாதிபதி வக்ரம் பெறுவது யோகம் தான்.

விரயத்திற்கேற்றதனவரவுவந்துகொண்டேயிருக்கும். எனவே குடும்பச் சுமை பெறுவது யோகம்தான். விரயத்திற்கேற்ற தனவரவு வந்து கொண்டேயிருக்கும். எனவே குடும்பச் சுமை கூடுகின்றதே என்று கவலைப்பட வேண்டாம்.

செவ்வாய் நீச்சம் பெறுவதால் உடல் ஆரோக்கியத்தில் மட்டும் கூடுதலான கவனம் செலுத்துவது நல்லது. ஏதேனும் குறைபாடு ஏற்பட்டால் உடனடியாக மருத்துவ ஆலோசனை பெற வேண்டும். குடும்ப ஒற்றுமை குறையாமல் இருக்க விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. மற்றவர்களைப் பற்றி விமர்சிப்பதன் மூலம் பிரச்சினைகள் உருவாகலாம்.

அஷ்டமத்து இராகு அலைச்சல்களைக் கொடுத்தாலும் ஆதாயத்தையும் கொடுக்கும். பெண் தெய்வ வழிபாட்டில் அதிக ஆர்வம் காட்டினால் பிரச்சினைகளில் இருந்து விடுபட இயலும்.

இம்மாதம் நவராத்திரி விழாவும் வருவதால் அந்த ஒன்பது நாட்களிலும் உள்ளன்போடு அம்பிகையை வழிபாட்டால் நல்ல நிலை உங்களுக்கு உருவாகும். நடக்கும் செயல்களிலும் வெற்றி காண்பீர்கள்.

இம்மாதம் 18 ஆம் திகதி கன்னி இராசியில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். ஆறுக்கு அதிபதி ஆறில் சஞ்சரிக்கும் பொழுது அதிலும் உச்சம் பெறும் பொழுது எதிரிகளின் பலம் கூடும். இல்லம் தேடி வரும் விருந்தினர்களால் தொல்லை ஏற்படும். மாற்றுக் கருத்துடையோரின் மனதை மாற்றுவது உங்கள் அன்பு தான். எனவே மற்றவர்களின் மனதில் அன்பை விதையுங்கள். ஆதாயத்தை அறுவடை செய்யுங்கள்.

ஒக்டோபர் 4 ஆம் திகதி துலாம் இராசியில் புதன் சஞ்சரிக்கப்போகிறார். அதற்கு மறுநாள் 5 ஆம் திகதி சுக்ரனும் துலாத்தில் வந்திணைகின்றார். எனவே புத-சுக்ர யோகம் எனப்படும் பொன்னான யோகம் செயற்படப் போகின்றது.

எனவே பொருளாதார நிலை உயரும். பு[illegible] தம்பதியர்களாக மாறுகிற யோகம் ஒரு [illegible]ருக்கு உருவாகும். வாகன யோகம் எதிர்பார்த்தபடியே வந்து சேரும். கடித அனுகூலம் உ[illegible] கொடுக்கல்-வாங்கல்களை ஒழுங்கு செய[illegible] கொண்டு புதிய தொழில் தொடங்கும் வாய்ப்புக்க[illegible]ளை உபயோகப்படுத்திக் கொள்வீர்கள்.

பலம் 6 [illegible]றும் இராகுவால் நலம் பல கிடைக்க துர்க்கை, சரஸ்வதி, இலக்குமியை வழிபட்டு வாருங்கள். வியாழன் தோறும் குருவை வழிபட்டு குதூகலம் காணுங்கள்.

இம்மாதம் குடும்ப உறுப்பினர்களை அனுசரித்துச் செல்வது நல்லது. ஆரோக்கியத்தில் குறைபாடு தோன்றும் பொழுதே மருத்துவ ஆலோசனைகளைப் பெற்றால் பெரிய செலவுகள் ஏற்படாது. செவ்வாய் நீச்சம் பெறும் இந்த நேரத்தில் உடன்பிறப்புகளையும் அனுசரித்துச் செல்லுங்கள். வீடு கட்டும் முயற்சி அல்லது வாங்கும் முயற்சியில் மாதத்தின் மையப்பகுதியில் வெற்றி கிடைக்கும். ஒக்டோபர் 5க்கு மேல் நினைத்த காரியங்கள் நிறைவேறும். நவராத்திரி விழாவில் அம்பிகையை கொண்டாடி பாமாலையை படியுங்கள். இன்பங்கள் வந்து சேரும்.




(கார்த்திகை 2,3,4 ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1,2 ஆம் பாதங்கள்)

**வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும்.**

*தன்னைச் சுற்றியிருப்பவர்களும் தங்களைப் போல சந்தோஷமாக இருக்க வேண்டும் என்று விரும்பும் இடப இராசி நேயர்களே!*

நீங்கள் காந்தசக்தி மிக்கவர்கள் என்றே சொல்லலாம். ஏனென்றால் உங்களைச் சுற்றி நண்பர்கள் பட்டாளம் ஏராளமாக இருக்கும்.

நட்புக்காக எதையும் செய்ய தயங்க மாட்டீர்கள். மற்றவர்களை பரிசு மழையில் நனைய வைக்க வேண்டும் என்று விரும்புவீர்கள். தாங்கள் வசிக்கும் வீடும் சுற்றுப்புறமும் தூய்மையாக வைத்திருப்பது உங்கள் இலட்சியமாக இருக்கும்.

உங்களுக்கு இந்த புரட்டாதி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்திலேயே இராசிநாதன் சுக்ரன் நீச்சம் பெறுவதால் ஆரோக்கியத்தில் கொஞ்சம் அக்கறை செலுத்த வேண்டிய சூழ்நிலை உருவாகும். சந்திரபலம் கொஞ்சம் கூடுதலாகவே இருப்பதால் உங்களைப் பொறுத்தவரை உடல் நலம் சீராகவே இருக்கும். ஆனால் உங்களைச் சார்ந்தவர்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்களுக்கு தொல்லைகளும் மருத்துவச் செலவுகளும் உருவாகலாம்.

பயணங்கள் நிறைய ஏற்படும். அலைச்சல் அதிகரிக்கும். ஜென்ம கேது, சப்தம இராகு என்ற அமைப்பில் உங்கள் இராசி தொடர்ந்து இருந்து வருகின்றது. எனவே சர்ப்ப தோஷ அமைப்பும் இருக்கின்றது. ஏற்ற இறக்கமான வாழ்க்கையையும் எதிரிகளை இனம் கண்டு கொள்ள முடியாத சூழ்நிலையும் காணப்படும். பணம் வந்த மறுநிமிடமே செலவாகும் சூழ்நிலையும் திடீர் மனக்கசப்புக்களும் காரியங்களில் தாமதமும் ஏற்படும்.

இதற்கு காரணம் இந்த சர்ப்ப தோஷ அமைப்பு தான். அதற்காக நீங்கள் பயப்பட தேவையில்லை. சர்ப்பதோஷ நிவர்த்தி பரிகாரத்தை முறையாகச் செய்தால் சந்தோஷமான வாழ்க்கையை அமைத்துக் கொள்ளலாம். சுய ஜாதகத்திலும் சந்திரனோடு இராகு அல்லது கேது இணைத்திருப்பவர்கள் அவசியம் சர்ப்ப கிரக வழிபாட்டை மேற்கொள்ள வேண்டும்.

மாதத் தொடக்க நாளிலேயே தனாதிபதி புதன் உச்சம் பெறப்போகிறார். எனவே பணத்தேவைகள் உடனுக்குடன் பூர்த்தியாகும். அதேநேரத்தில் ஒரு சிலருக்கு ஒரு கடனை அடைக்க மற்றொரு கடனை வாங்கி கடன் சுமையும் கூடிக்கொண்டே செல்லும். மாமன், மைத்துனர் வழியில் விலகியிருந்த சொந்தங்கள் இனி விரும்பி வந்து சேரும். சேமிக்க இயலாத சூழ்நிலை உருவாகும் என்பதால் வந்த தொகையை வீட்டிற்கு தேவையான விலை உயர்ந்த பொருட்களாகவோ, சொத்துக்களாகவோ மாற்றி வைத்துக் கொள்வது நல்லது.

சுக்ரன், ஒக்டோபர் 5 ஆம் திகதி துலாம் இராசியில் பலம் பெறுகிறார். அதற்கு முதல் நாளே புதனும் சுக்ரனுடன் வந்திணைகிறார். புத- சுக்ரயோகம் செயற்படும் இந்த நேரத்தில் எதிரிகள் விலகுவர். இலாபம் எதிர்பார்த்தபடி வந்து சேரும். உத்தியோகத்தர்களுக்கு உதிரி வருமானங்கள் பெருகும். உடல் நலம் சீராகி உற்சாகப்படுத்தும். உள்ளத்தில் ஒன்றும் உதட்டில் ஒன்றும்

சிவல்புரி சிங்காரம்

வைத்துப் பேசியவர்கள் உங்களை வந்து சரணடைவர். வக்ர குருவின் பார்வை சுக்ரன் மீது பதிவதால் வளர்ச்சி எதிர்பார்த்ததைக் காட்டிலும் கூடுதலாகவே இருக்கும். வாய்ப்புக்கள் வந்து அலைமோதும்.

இம்மாதம் அம்பிகை வழிபாட்டில் ஆர்வம் காட்டுங்கள். சனிக்கிழமைதோறும் விஷ்ணு வழிபாட்டில் கவனம் செலுத்தினால் உங்கள் விருப்பங்கள் அனைத்தும் நிறைவேறும்.

இம்மாதம் குடும்பச் சுமை கூடும். செலவுநடைகள் அதிகரிக்கின்றதே என்று கவலைப்படுவீர்கள். ஆலய வழிபாடுகளை மேற்கொள்ள சுற்றுப்பயணங்களில் ஆர்வம் காட்டுவீர்கள். ஒக்டோபர் 5 இற்கும் மேல் பெண் குழந்தைகளால் பெருமை சேரும். விவாக பேச்சுக்கள் நல்ல முடிவிற்கு வரும். சரஸ்வதி பூஜை அன்று சரஸ்வதி வழிபாட்டையும் விஜயதசமி அன்று விரமதமிருந்து அம்பிகை வழிபாட்டையும் மேற்கொண்டால் வெற்றிச் செய்தியும் வீடு வந்து சேரும். ஒற்றுமையும் மேம்படும். (தொடரும்)

## பொன்சேகாவின் அரசியல் கட்சியின் பதிவு நிராகரிக்கப்பட்டமை குறித்து விசாரணை

(கொழும்பு)

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவினுடைய அரசியல் கட்சியின் பதிவு நிராகரிக்கப்பட்டமை குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஜனநாயக கட்சி என்ற பெயரில் பதிவிற்காக விண்ணப்பம் செய்யப்பட்டிருந்தது. எனினும் இந்த விண்ணப்பத்தை தேர்தல் செயலகம் நிராகரித்திருந்தது.

அரசியல் கட்சியொன்றை பதிவு செய்வதற்கு தேவையான அடிப்படை தகுதிகளை குறித்த விண்ணப்பப்படிவம் கொண்டிருக்கவில்லை என தெரிவித்து நிராகரித்தது.

சரத் பொன்சேகாவின் சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக தெரிவித்து மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இந்த சம்பவம் தொடர்பில் கட்சியின் பொதுச் செயலாளர் டிரான் அலஸ் மற்றும் கட்சியின் பிரதித் தலைவர் அர்ஜுன ரணதுங்க ஆகியோரிடம் மனித உரிமை ஆணைக்குழு வாக்குமூலங்களை பதிவு செய்து கொண்டுள்ளது.

சம்பவம் தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக மனித உரிமை ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ஸ்ரீ-4)

## ஆஸி செல்ல முற்பட்ட 44 பேரில் ஆறு பேர் புலி உறுப்பினர்கள்

### குற்றத் தடுப்பு பிரிவினர் நீதிமன்றில் அறிவிப்பு

(கொழும்பு)

அண்மையில் அவுஸ்திரேலியாவுக்கு தப்பி செல்லும் போது கைது செய்யப்பட்டவர்களில் 6 பேர் தமிழீழ விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர்கள் என தெரிய வந்துள்ளது.

இதனை குற்றத் தடுப்பு பிரிவினர் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் அறிவித்தனர்.

திருகோணமலையில் இருந்து அவுஸ்திரேலியாவுக்கு தப்பி செல்ல முற்பட்ட 44 பேர் கடந்த 11 ஆம் திகதி இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர். அவர்கள் தொடர்பிலான வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன் போது விளக்கமளித்த பொலிஸார் அவர்களில் 6 பேர் விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர்கள் என நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

தற்போது அவர்களிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் கைதான 44 பேரில் 36 பேரை எதிர்வரும் 28 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்கவும் கைதான இரண்டு சிறுவர்களை சரீர பிணையில் விடுவிக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

(ஸ்ரீ-4)

# மற்றொரு கோணம்


## உங்கள் விருப்புக்களும் வெறுப்புக்களும், உங்கள் ஆளுமையைக் கட்டமைக்கிறது



ஆன்மீகம் 43

சுதந்திரத்தை விரும்பும் மனிதருக்கு யோகாகூட ஒரு கட்டுப்பாடுதானே? (இக்கேள்விக்கான பதில் தொடர் கீழே)

...குடும்பத்திலோ பணியிடத்திலோ இயங்குகின்ற போதுகூட விருப்பு வெறுப்புகளின் அடிப்படையில் செயற்பட்டால் பல முட்டாட் தனங்களைச் செய்வீர்கள். ந மனிதரை உங்களுக்குப் பிடிக்கும், இன்னொருவரைப் பிடிக்காது. என்றால் அப்போதைக்கு என்ன தேவையோ அதனை உங்களால் செய்ய முடியாது. ஒரு மனிதரை பிடிக்காது என்பதாலேயே அவர் செய்கின்ற அபத்தங்களையும் கண்டு கொள்ளாமல் விட்டு விடுகிறீர்கள். உங்கள் அன்றாட வாழ்விலேயே இதை நீங்கள் உணர்ந்திருப்பீர்கள். உங்கள் விருப்பு, வெறுப்புக்களால் எடை போடுகின்ற தன்மையை இழந்து விடுகிறீர்கள். இத்தகைய விருப்பு வெறுப்புக்களில் சிக்கிப் போகின்ற போது விழிப்புணர்வு என்பது சாத்தியமே இல்லை. ஒன்று பிடிக்கும் என்பதாலேயே எங்களையும் அறியாமல் அதனோடு அடையாளப்படுத்திக் கொள்கிறீர்கள்.



72 வயதுடைய ஆழ்வார் சுவாமி யோகாவில் ஈடுபட்டிருக்கும் பொழுது

விருப்பு, வெறுப்பு இருக்குமென்றால் வாழ்க்கையை மிக நன்றாகக் கையாளலாம் என்று நீங்கள் நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள். ஒருவரை வெறுக்காவிட்டால் அவரை நீங்கள் நெருங்குவீர்கள். உலகில் நல்ல விடயங்களை விரும்பினால் அதனை நெருங்கலாம். தீய விடயங்களை வெறுத்தால் அவற்றிலிருந்து விலகலாம். இந்த அடிப்படையான சித்தாந்தத்தில்தான் உங்களையே நீங்கள் பாதுகாத்துக் கொள்ளும் விதத்தில் இயங்குகிறீர்கள். நான் திரும்பத் திரும்பச் சொல்வது போல உங்கள் உடலை மட்டும்தான் நீங்கள் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். மற்றவற்றை ஒவ்வொருநாளும் சிதைத்துக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு விடியலிலும் எழுந்து இன்று என்ன விதமான மனிதராக இருக்கலாம் என்று நீங்கள் முடிவு செய்ய வேண்டும். ஆனால், உங்கள் விருப்பு வெறுப்புகளை நிர்ணயித்துவிட்டால், இவ்வாறு தேர்வு செய்யும் உரிமையை இழந்து விடுகிறீர்கள். மாறாக விருப்பு, வெறுப்புக்களால் பாதுகாக்கப்படுகிறீர்கள்.

பல காதல் திருமணங்கள் தோல்வியில் முடிவது ஏன்?

காதலர்களாக இருக்கின்ற கால கட்டங்களில் ஒருவருக்கொருவர் மிகுந்த நேசத்தோடு பழகுகிறார்கள். பெற்றோர்களையும் எதிர்த்துக் கொண்டு திருமணம் செய்து கொள்கிறார்கள். திருமணமாகி நான்கு ஐந்து ஆண்டுகளுக்குள் அவர்கள் வாழ்க்கை சின்னாபின்னமாகிவிடுகிறது. ஒருவரை யொருவர் பயன்படுத்த நினைப்பதால், ஒரு காலத்தில் மிக அற்புதமான மனிதராக உங்கள் கண்களுக்குத் தெரிந்தவர் மிகமோசமான மனிதராக இப்போது தெரிகிறார். எந்தச் செயலைச் செய்தாலும் அதில் ஏற்படக் கூடிய விளைவுகளையும் முன்கூட்டியே யோசித்துப்பார்க்கிற மனிதராக நீங்கள் இருந்தால் இத்தகைய இடர்பாடுகள் ஏற்படாது.

பலரும் மகிழ்ச்சியான மண வாழ்க்கை குறித்து கேட்பதுண்டு. உள் நிலையில் மகிழ்ச்சி இருந்தால் அது வெளிப்படும். உங்களுக்குள் சில தன்மைகளை நிலை நிறுத்திக் கொண்டால்தான், உங்களால் ஆனந்தமாக இருக்கமுடியும். எனவே உங்கள் உடல் உங்கள் மனம், உங்கள் சக்தி நிலை ஆகியவற்றில் முழு ஆளுமை செலுத்தக் கற்றுக் கொண்டால் ஆனந்தம் இயல்பாக ஏற்படும். ஏனெனில் வெளியிலிருந்து நீங்கள் ஆனந்தத்தைப் பெறுவதில்லை. மற்றவர்களால் நீங்கள் எதையும் பெறுவதில்லை. நீங்கள் வருத்தமாக இருக்கிறீர்கள் என்றால் அதற்கு மோசமான உறவு காரணமல்ல. அந்த உறவை நீங்கள் கொண்டு செலுத்துகிற விதம்தான் உங்கள் வருத்தத்திற்குக் காரணம்.

(தொடரும்)

சத்குரு ஜக்கி வாசு தேவ்

# நீலாவணன் காவியங்கள்

## ஓர் அறிமுகம்

எழில் வேந்தன் அவர்களால் நீலாவணனை நிலவுலகுக்கு ஈந்த அவர் தாயார் தங்கம்மா தாளடிக்குச் சமர்ப்பணம் செய்யப்பட்டிருக்கும் நீலாவணன் காவியங்கள் எனும் இந்நூலில் கவிஞர் நீலாவணனின் மூன்று காவியங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. அவை பட்டமரம்-வடமீன்-வேளாண்மை.

1. தமிழிலே பெரும் காப்பியங்கள், சிறுகாப்பியங்கள் மற்றும் கம்பராமாயணம், மகாபாரதம் போன்ற இதிகாசங்களுடன் நள வெண்பா, அரிச்சந்திர புராணம் போன்றவைகளையெல்லாம் காவியங்களாகக் கொள்ளலாம். இக்காவியங்களெல்லாம் ஒரு காவிய மரபிற்கு உட்பட்டு கடினமான செய்யுள் நடையிலே உருவானவை. இக்காவியங்கள் கூறிய கதையையும் பொருளையும் சாமான்யர்கள் புரிந்து கொள்வதற்கு பின்னாளில் உரையாசிரியர்களும் பொழிப்புரை, பதவுரைகளும் தேவையாயிருந்தன. ஆனால், தமிழில் நவீன இலக்கியங்கள் தோற்றம் பெற்ற-குறிப்பாக இருபதாம் நூற்றாண்டின் மறுமலர்ச்சி இலக்கிய சகாப்பதத்தில் காவியங்கள் மிகச்சொற்பமாகவே படைக்கப்பட்டன. இதற்குக் காரணம் தமிழில் உரை நடை தோன்றி வளர்ந்தமையும் நவீன இலக்கிய வடிவங்களான புனைகதை- கட்டுரை- புதுக்கவிதை போன்றவை புகுந்தமையும் எனக் கொள்ளலாம். .எனினும் பழந்தமிழ் காவியமரபைச் சற்றுத் தகர்த்து சாமான்யர்களும் புரிந்து கொள்ளும் வண்ணம் நவீன கவிதைப் போக்கில் முதலில் பாஞ்சாலிசபதம் படைத்தவன் பாரதி. பாரதிதாசன் படைத்த புரட்சிக்கவி, மற்றும் ச.து.ச. யோகியாரின் அகல்யை போன்ற காவியங்களைக் குறிப்பிடலாம். இக்காவியங்கள் யாவும் இதிகாசங்களை அடிப்படையாகக் கொண்டவை. தமிழின் பழம் பெரும் காவியங்கள் மட்டுமல்ல இருபதாம் நூற்றாண்டில் எழுந்த நவீன காவியங்கள்கூட ஒருகுறிப்பிட்ட காலம்வரை மன்னர்களையும்- கடவுளர்களையும் மதத்தலைவர்களையுமே பாட்டுடைத் தலைவனாகக் கொண்டவை. நவீன் இலக்கிய காலத்தில் படைக்கப் பெற்றிருந்தாலும் கூட கவிஞர் கண்ண தாசனின் இயேசு

**"கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை"**

காவியம், இலங்கையில் முருகையனின் இளநலம், மகா கவியின் அகலிகை, ஜின்னாஷ்ரி புத்தீனின் திருநபிகாவியம், பண்டார வன்னியன் என்பவையும் இவ்வகையைச் சார்ந்தவையே. ஆனால், இந்த மரபையும் தூக்கி எறிந்துவிட்டு சாதாரண சமூகமாந்தரைக் கதாநாயகர்களாகக் கொண்டு காவியம் இயற்றியவர்களுள் முக்கியமானவர்களைக் குறிப்பிடும்போது மகாகவி, முருகையன், நீலாவணன் ஆகியோரே முதலில் நிற்கிறார்கள். தமிழகத்திலே தெய்வமாகி நின்றான் காவியம் படைத்த கு.சின்னப்ப பாரதியைக் குறிப்பிடலாம்.

இத்தகையதோர் பின் புலத்திலே நீலாவணன் காவியங்கள் எனும் இவ்நூலை அறிமுகம் செய்வதே இக் கட்டுரையின் நோக்கம்.

இந்நூலிலுள்ள மூன்று காவியங்களுள் முதற் காவியம் பட்டமரம்

உலகிலே நல்லார் ஒருசிலரே
தோன்றி
நிலவினார் அன்பு வழி நின்று-
கொலைவல்ல
காலன் அவர்க்கின்று கல்லறைகள்
கட்டிவிட்டான்
ஞாலமே துன்ப நதி

என்று தொடங்கும் இத்தகையை 39 வெண்பாக்களால் இக்காவியம் பாடப்பெற்றுள்ளது. இக்காவியம் நீலாவணனுக்கு இருபத்தியாறு வயதாயிருக்கும்போது 1957 இல் ஈழகேசரியில் வெளிவந்துள்ளது.

பாவகைகளிலே வெண்பாதான் இயற்றக் கஷ்டமானது. நள வெண்பா பாடிய புகழேந்திப் புலவர்தான் வெண்பாவில் வித்தகர். ஈழத்திலே புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை, ஆ.மு.ஷரிபுத்தீன் போன்றவர்கள் வெண்பா இயற்றுவதில் பேர் பெற்றவர்கள். இன்று ஈழத்திலே வெண்பாவை பிழையின்றிப் பாடக்கூடியவர்கள் ஒரு சிலரே. அவர்களுள் புலவர் த.கனகரத்தினம், கவிஞர் ஜின்னாஷரிபுதீன் ஆகியோரைக் குறிப்பிடலாம். இந்த வெண்பாவை இருபத்தாறு வயதாக இருக்கும் போதே கவிஞர் நீலாவணன் கையாண்டிருப்பது அவரது கவிதா மேதா விலாசத்திற்கு ஓர் எடுத்துக்காட்டு. தனது கன்னிக்காவியமான பட்டமரத்தை அவர் வெண்பாவில் படைக்கத் துணிந்தது அவரது வித்துவத்தின் வெளிப்பாடே.

பட்டமரம் ஒன்றுதான் இக்காவியத்தில் கதை சொல்லிபண்ணையாரின் மகள் பத்மாவை பண்ணையாரிடமே ஊழியனாயிருக்கும் பரந்தாமன் காதலிப்பதும்-அதை ஏற்காத பண்ணையார் பரந்தாமனைக் கொன்று இரகசியமாக புதைப்பதும்- பத்மா தன்னைத்தான் மாய்த்துக் கொள்வதும்.

பண்ணையார் பெண்ணைப்
பரந்தாமன் காதலித்தான்

செங்கதிரோன் 01

கன்னி களவாகக் கர்ப்[illegible] முற்
றாள்-பெண்ணவளை
அற்பனவன் கைவிட்ட[illegible]றா
னதாலே
[illegible]

என்று பண்ணையாரின் ப[illegible] பலத்தினால் பத்திரிகைச் செய்[illegible] மூலம் ஊர் நம்பவைக்கப்படுகிறது. உண்மையில் என்ன நடந்தது என்பதற்[illegible] காவியத்தில் கதை [illegible]லியாக வ[illegible] பட்டமரமே சாட்சி. [illegible] கொடு[illegible]யொன்றினை சுட்டும் இக்காவி[illegible] ஊடகத்துறையின் நம்பகத் தன்[illegible]யையும் கேள்விக்குள்ளாக்குகிற[illegible]

(தொடரும்)

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

# [illegible] மற்றும் மனித சுகாதாரம் போன்றவற்றில் DNA மரபணுப் பரிசோதனை

விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் நன்கு வளர்ச்சியடைந்த இன்றைய அவசர உலகில் Finger print ஆனது உன்னதமான விஞ்ஞான தொழில்நுட்பமாகும். இத்தொழில்நுட்பமானது பொலிஸ் நிலையங்களிலும் மற்றும் துப்பறிதுலக்கும் நிலையங்களிலுள்ள ஆய்வகத்தில் 1930 ஆம் ஆண்டு காலப் பகுதியிலிருந்து பயன்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றது.


நடைமுறையிலுள்ள dog tags, dental records and blood typing strategies னை விட இம்முறையானது மேலானதாகவுள்ளது. இவ்விரல் பதிவானது இரண்டு முறையில் மேற்கொள்ளப்படுகின்றன.

I. மரபு ரீதியான விரல் பதிவு அடையாளம் (Conventional Finger print)

II. DNA Finger print

பொதுவாக ஆள் அடையாளங்களுக்காக Conventional Finger print ஐப் பயன்படுத்துகின்றன. அப்படியான Finger print ஆனது விரல் நுனியினால் மாத்திரம் ஏற்படுத்தப்படுகின்றன. ஆனால் இப்படியான விரல் பதிவானது இலகுவான முறையில் மாற்றியமைக்கக்கூடியதாகவுள்ளது. உதாரணமாக சத்திரசிகிச்சை மூலம் மாற்றியமைக்கலாம். எனவே இப்பதிவானது ஓர் திருப்திதரக்கூடிய முறையாக கருதப்படுவதில்லை. ஒவ்வொரு மனிதர்களினது DNA Finger prints ஆனது தனித்துவமானதும் விசேட தன்மையும் மிக்கது. இப்படியான Finger prints மூலம் ஒவ்வொருவரையும் மற்றவர்களிடமிருந்து வேறுபடுத்துவதற்கு இலகுவானதும் தெளிவானதுமான தொழில்நுட்பம் ஆகும்.

ஒரு மனிதனுடைய சகல அங்கங்களையும் ஆக்கும் கலன்கள் யாவற்றினதும் DNA Finger prints ஒரே மாதிரியானதாக இருக்கும். இதை எந்தவிதமான முறைமூலமும் மாற்ற முடியாது. ஆனால் பரம்பரையலகில் மாற்றத்தை ஏற்படுத்துகின்ற சந்தர்ப்பத்தில் மாத்திரம் மாற்றங்கள் ஏற்படும்.




குழந்தைகள், முதியவர்கள் மற்றும் பிறக்காத குழந்தைகள் (unborn babies) என்பவர்களிலுள்ள பரம்பரையான நோய்கள் (Diagonosis of ingerited disorders) மற்றும் அவற்றுக்குக் காரணமான பரம்பரையலகு என்பவற்றினை இலகுவாக அடையாளங்காண்பதற்கு இத்தொழில்நுட்பம் பயன்படுத்தப்படுகின்றது. வைத்தியசாலைகளில் பிறந்த மற்றும் கருப்பையிலுள்ள குழந்தைகளில் cystic fibrosis, haemophilia, Hunting ton's disease, Familial Alzheimer's, sickle anemia, thalassemia போன்ற நோய்களை அடையாளங்கண்டு அவற்றுக்கு தகுந்த சிகிச்சை அளிப்பதற்கும் அதேசமயம் Genetic counselors போதியளவு ஆலோசனைகளை வழங்குவதற்கும் இத்தொழில்நுட்பமானது பயன்படுத்தப்படுகிறது.

இத்தொழில்நுட்பமானது பொருளாதார ரீதியிலும் தொழில்நுட்ப ரீதியிலும் மிகவும் உயர்ந்ததாகவும் சமுதாயத்துடன் பின்னிப்பிணைந்துள்ளது. இப்பதிவின் மூலம் உயிரியல் ஆதாரங்களைப் (தலைமயிர், நகம், இரத்தம்) பயன்படுத்தி கொலைக்குற்றவாளி (forensic or criminal) ஒரு குழந்தைக்கான பெற்றோர் (paternity disputes) மற்றும் ஒரு விபத்தில் தவறவிடப்பட்ட நபர் (to identify casualities or person missing in action like war ) போன்றவர்களை இப்பதிவின் மூலம் அடையாளங் காணலாம். (personal identification)

### DNA இன் அமைப்பு

ஒரு அங்கியானது தலைமுறையுரிமையடைகின்ற ஒவ்வொரு இயல்புக்கும் காரணமான பாரம்பரிய அலகு. பரம்பரையலகு எனப்படும் இப்பரம்பரையலகானது நிறமூர்த்தத்தில் அமைந்துள்ளது: நிறமூர்த்தமானது DNA மற்றும் protcin இனால் ஆக்கப்பட்டுள்ளது. DNA ஆனது Deoxy ribonuckotioke இன் பல்பகுதியாகும். இப்பல்பகுதியமானது Deoxyribose வெல்லம் $Po_4^{3-}$ கூட்டம் மற்றும் N உப்பு மூலகங்களால் ஆனது (Adenine, Guanine, Thymine and cytosine) N உப்பு மூலகங்களில் ஒழுங்குக்குக்கேற்ப DNA துண்டின் இயல்புகள் மாறுபடுகின்றன. DNA ஆனது இரட்டை விரிபரப்பு சுருள் அமைப்பாகவுள்ளது. இவ்விரிபரப்பு சுருளின் ஒரு சங்கிலியானது மற்றைய சங்கிலிக்கு மிகைநிரப்பு சங்கிலியாகவுள்ளது.

DNA ஆனது exons, introns ஆகிய பகுதிகளால் ஆக்கப்பட்டுள்ளன. தொழிற்பாட்டு பரம்பரையலகுகளை (Functional genes) கொண்ட DNA யின் பகுதியானது exons எனவும் அழைக்கப்படுகின்றன. இப்பகுதியானது உடற்புரதங்களைத் தொகுக்கின்றன. இப்பகுதியானது மனிதப் பரம்பரைப் பொருளில் 10%ஐ கொண்டுள்ளது. இத் தொழிற்பாட்டு பரம்பரையலகுகளை கொண்டிராத மற்றைய பகுதியானது Introns எனப்படும். இவை Junk DNA என அழைக்கப்படும். இப்பகுதியானது பிரதியெடுக்கப்படுவதில்லை (no transcription ) மற்றும் இயற்கைத் தேர்வுக்குட்படுவதில்லை. ஆகவே அதிகளவு மாறுபாடு உடையதாகவும் தனித்துவமானதாகவும் உள்ள DNA யின் இப்பகுதியானது Finger Print இற்கு பயன்படுத்தப்படுகின்றது.

Finger Print படிமுறைகள்

1.DNA ஐ பிரித்தெடுத்தல்

ஒருசம்பவஇத்திலிருந்த தடயங்களை (நகம், தலைமயிர், Blood sample) சேகரித்தல், தடயங்களை buffer solution இல் கரைத்தல், DNA ஐ வீழ்படிவாக்குவதற்காக ethanol Solution ஐ சேர்த்தல். அதே சமயம் மாசாக உள்ள protan னை வீழ்படிவாக்குதற்காக protease enzyme இனை சேர்த்தல்

2.பிரித்தெடுக்கப்பட்ட DNA ஐ நொதியங்களைப் பயன்படுத்தி (Restriction exzyme) துண்டுதுண்டாக்குதல்.


இந்நொதியமானது முதலில் DNA துண்டிலுள்ள (Specificsite) குறிப்பிட்ட விசேட தொடரினை அடையாளப்படுத்தல். பின்னர் DNA தொடரினை அக்குறிப்பிட்ட இடத்தில் வெட்டுதல். வெட்டப்பட்ட DNA துண்டின் அளவு மற்றும் எண்ணிக்கை மனிதனுக்கு மனிதன் தனித்துவமானது.

உதாரணம்:- Restriction enzyme ஆனது A-T தொடரினை முதலில் அடையாளங் காணல். பின்னர் அப்புள்ளியில் DNA ஐ வெட்டுதல்

3.துண்டாக்கப்பட்ட DNA யானது Agarose gel electrophorosis இன் மூலம் பட்டிகளாக ஒழுங்குபடுத்தப்படுகின்றன

துண்டாக்கப்பட்ட DNA ஆனது நீளத்தின் அடிப்படையில் பட்டிகளாகப் பிரித்தெடுக்கப்படுகின்றன. இத்தொழில்நுட்பத்தின் போது gel இற்கு குறுக்காக பின்புலமானது செலுத்தப்படுகின்ற போது எதிர் ஏற்றம் கொண்ட $Po_4^{3-}$ உடைய DNA யின் பகுதியானது நேர் ஏற்றத்தை நோக்கி அசைகின்றது. குறைந்த நீளமுடைய DNA துண்டானது கூடிய நீளங்கொண்ட DNA துண்டினை விட விரைவாக அசைகின்றன. இவற்றின் அசைவு வேகமானது DNA துண்டின் e/m விகிதத்தில் தங்கியுள்ளது.

4.ஜெல்லிலுள்ள DNA பட்டிகைகள் Nylon membrane னுக்கு மாற்றப்படுகின்ற




தொழில்நுட்பமானது Southern boltting DNA துண்டுகளை தெளிவாக வெற்றுக் கண்களினால் பார்க்க முடியாது. ஆகவே இரட்டைப்பட்டியாகவுள்ள DNA துண்டானது தனிப்பட்டிகையாக மாற்றி NaOH solution மூலம் Nylon membrane இல் பதியப்பண்ணுதல்.

கதிர் தொழிற்பாடுடைய மூலகத்தினால் அடையாளப்படுத்தப்பட்ட செயற்கையான முறையில் தயாரிக்கப்பட்ட தனிப்பட்டிகையான சிறுதுண்டு DNA யின் பகுதியானது DNA Probe எனப்படும். இவ் DNA Probe ஆனது Nylon membrane உள்ள DNA யின் துண்டின் மிகை நிரப்புகின்றதாக இருக்கின்றன.

மேலதிகமாகவுள்ள DNA Probe ஆனது கழுவப்படுகின்றன. பின்னர் X-ray Film ஆனது Nylon membrane மீது வைக்கப்படுகின்றன. இவ் membrane உள்ள DNA யினது கதிர் தொழிற்பாடானது X-ray Film இன் மீது பட்டியாக விழுகின்றது. X-ray Film இல் உள்ள ஒவ்வொரு பட்டியும் DNA துண்டுகளை பிரதிபலிக்கின்றது. இவ்வாறான பட்டிகைகளை கொண்ட அமைப்பு DNA Finger print எனப்படும். (தொடரும்)

**ரி.மைதிலி**
செய்முறை வழிகாட்டுநர்,
தாவரவியல் துறை,
யாழ்.பல்லைக்கழகம்

## வாரத்திற்கு ஒரு புதிர்! 49

சார்பியல் கொள்கையை முன்வைத்தவர் யார்? .

விடைகளை 26.09.2011 இற்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி:

Mr.S.Ketheeswaren
Editor, Section A
Jaffna Science Association
Library
University of Jaffna, Jaffna.

**சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 250/- பணப்பரிசு வழங்கப்படும்.**

இப் பணப்பரிசினை யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட தாவரவியல் துறையில் கலாநிதி பி.செவ்வேளிடம் (தலைவர் பிரிவு A) நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

**பரிசுக்கு அனுசரணை வழங்குவோர்:**
மக்கள் வங்கி,
யாழ்.பல்கலைக்கழகம்.

**புதிர் 48 க்கான 250/-பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

SRIGANESH KRISHNAPIRIYA,
KOPAY ROAD,
URUMBIRAI.

**புதிர் 48 இற்கான கேள்வியும் விடையும்:**

சிறு பிள்ளை ஒன்று மூடப்பட்ட காரினுள் ஒரு நூலினால் கட்டப்பட்ட பலூனை பிடித்திருக்கின்றது. காரானது ஆர்முடுகும் போது பலூனின் நிலை எவ்வாறு அமையும்?

*பலூன் காரின் ஆர்முடுகல் திசை நோக்கி அசையும்.*



*(காணப்படும்)*

### யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்
### புதிர் இல . 49

சரியான விடை :..............................
முழுப்பெயர் :..............................
முகவரி :..............................
:..............................
தொ.பே. இல :..............................
கையொப்பம் :..............................

# சிறுமியை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய ஐவருக்கு விளக்கமறியல்

மாத்தறையில் 10 வயது சிறுமியை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியதாக கூறப்படும் முன்னாள் விமானப்படை அதிகாரி உட்பட 5 பேரை எதிர்வரும் 28 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.. மாத்தறை மேலதிக நீதிவான் துலினி அமரசிங்க இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

30 வயதான புத்திக நுவன்குமார என்ற முன்னாள் விமானப்படை அதிகாரி உட்பட 8 பேர் கடந்த 3 ஆம் திகதி குறித்த சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் செய்ததாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இதில் மூவர் ஒரு இலட்சம் ரூபா பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர். குறித்த சிறுமி இரண்டாம் தவணை பாடசாலை விடுமுறை செப்டெம்பர் 5 ஆம் திகதி முடிவடைவதை முன்னிட்டு பாடசாலையை சுத்தம் செய்ய தமது தாய் மற்றும் சகோதரியுடன் பாடசாலைக்கு வந்தபோதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. (ஸ்ரீ-4)

# மாதுரு ஓய இராணுவ முகாமில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் 2 படையதிகாரிகள் படுகாயம்

மாதுரு ஓய இராணுவ முகாமில் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவத்தில் இரண்டு படையதிகாரிகள் படுகாயமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆர்.பி.ஜீ.ரக குண்டுகளே இவ்வாறு வெடித்துள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

துணை லெப்டினன்ட்கள் இருவரே சம்பவத்தில் காயமடைந்துள்ளதாகவும் காயமடைந்தவர்கள் பொலநறுவை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஆர்.பி.ஜீ. குண்டுகளைக் கொண்டு பயிற்சிகளை நடத்தியபோது தவறுதலாகக் குண்டு வெடித்ததில் குறித்த இரண்டு துணை லெப்டினன்ட் அதிகாரிகளும் காயமடைந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் குறித்து இராணுவத்தினரும் அரலகங்வில பொலிஸாரும் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ஸ்ரீ-4)

# நாட்டில் 10 வீதமானோருக்கு உளவியல் பாதிப்புக்கள்

## தேசிய உள சுகாதார நிறுவகம் அறிவிப்பு

நாட்டில் 10 வீதமானவர்கள் உளவியல் பாதிப்புக்களை எதிர்நோக்கி வருகின்றனர் என தேசிய உள சுகாதார நிறுவகம் அறிவித்துள்ளது.

மூன்று தசாப்த காலமாக நீடித்த போர், ஆழிப்பேரலை, அனர்த்தம் மற்றும் சில காரணிகளினால் இவ்வாறு அதிகளவானவர்கள் உள பாதிப்புக்களை எதிர்நோக்கி வருவதாகக் குறிப்பிடப்படுகிறது.

உலக சுகாதார ஸ்தாபனத்தினால் இந்த ஆய்வு நடத்தப்பட்டுள்ளது.

உரிய முறையில் சிகிச்சை பெற்றுக் கொள்ளத் தவறினால் எதிர்காலத்தில் உளவியல் பாதிப்புக்களை எதிர்நோக்குவோரின் எண்ணிக்கை அதிகரிக்கலாம் என தெரிவிக்கப்படுகிறது.

மொத்த சனத்தொகையில் இரண்டு வீதமானவர்கள் கடுமையான உளவியல் நோய்களினால் பாதிக்கப்படக் கூடிய வாய்ப்பு காணப்படுவதாகக் குறிப்பிடப்படுகிறது. உளவியல் பாதிப்புக்கள் தொடர்பில் காத்திரமான திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது.

உளவியல் ரீதியாக பாதிக்கப்படுவோருக்கு உரிய சிகிச்சைகள் வழங்கப்படாவிட்டால் எதிர்காலத்தில் பாதகமான விளைவுகள் ஏற்படக் கூடிய சாத்தியம் காணப்படுவதாக தேசிய உள சுகாதார நிறுவகம் சுட்டிக்காட்டியுள்ளது. (ஸ்ரீ-4)


- தபால் மூலம் -

**ஆறு மாத கால டிப்ளோமா**

**Course Length - Six Month**

SEPT. 2011 TO FEBRUARY 2012

*தமிழ் மொழி மூலம்*

Dip. in Psychology - உளவியல் டிப்ளோமா
Dip. in Office Administration - காரியாலய நிர்வாக டிப்ளோமா
Dip. in Human Resources Management - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Civil Engineering - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா
Dip. in Business Management - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Banking Management - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Sales & Marketing Management - விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் மு. டி.
Dip. in Health & Hospital Management - சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை மு. டி.
Dip. in Nursing Administration - தாதியர் நிர்வாக டிப்ளோமா
Dip. in Educational Management - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Montessori - மொண்டிசூரி டிப்ளோமா

**கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்**

• கல்முனை • மட்டக்களப்பு • திருகோணமலை • புத்தளம் • வவுனியா • மன்னார் • யாழ்ப்பாணம் • கண்டி • கொழும்பு • ஹட்டன் • அனுராதபுரம் • நுவரெலியா

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர், முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.

Mobile: 0777 140 844, 071 803 48 48

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி

Country Co-ordinator
MARUTHUR . A. HASSEN
(B.Sc. Psychology, M.Sc. Psychology)

**ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES**
24, 1st FLOOR, SUPERMARKET COMPLEX, MAIN STREET, SAINTHAMARUTHU-07.
Web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org
Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848

விண்ணப்ப முடிவுத் திகதி : 28.09.2011


# இந்திய மீனவர்களின் சடலங்கள் கையளிப்பு

தீவகக் கடற்பரப்பில் கரையொதுங்கிய நிலையில் மீட்கப்பட்ட தமிழக கடற்றொழிலாளர்கள் இருவரினது சடலங்கள் அவர்களின் உறவினர்களிடம் நேற்று முன்தினம் கையளிக்கப்பட்டுள்ளன.

சிலம்பம்பட்டி நாமக்கல்லைச் சேர்ந்த 31 வயது பொன்னுச்சாமி தேவானந்தன் என்ற தொழிலாளி கடந்த மாதம் 28 ஆம் திகதியும் அதே இடத்தைச் சேர்ந்த 28 வயது சீனி முருகானந்தம் என்ற தொழிலாளி கடந்த 4 ஆம் திகதி ஊர்காவற்றுறை கடற்பரப்பில் சடலமாக மீட்கப்பட்டனர்.

உடற்கூற்றுப் பரிசோதனைகளுக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட இச்சடலங்கள் நேற்று முன்தினம் மருத்துவமனையில் வைத்து இந்தியத் துணைத் தூதரக அதிகாரி மற்றும் கடற்றொழிலாளர்களின் முன்னிலையில் உறவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (எ-5)

# நீதிமன்றத்தால் அபராதம்

அநுராதபுரம் புகையிரத திணைக்களத்திற்கு சொந்தமான புகையிரத தண்டவாளத்தை திருடி தன்வசம் வைத்திருந்தாரென்ற குற்றச்சாட்டில் சாவகச்சேரி பொலிஸாரால் யாழ்ப்பாணம் பலாலி வீதியைச் சேர்ந்த நபரொருவர் கைது செய்யப்பட்டார்.

குறித்த நபர் நேற்றைய தினம் சாவகச்சேரி நீதிவான் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராசா முன்னிலையில் மன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்டார். வழக்கை விசாரித்த நீதிபதி குறித்த நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் குற்றவாளியாகக் கண்டு 21 ஆயிரத்து 420 ரூபா அபராதத்தை விதித்ததுடன் சான்றுப் பொருளான தண்டவாளத்தை அநுராதபுரம் புகையிரத நிணைக்களத்திடம் ஒப்படைக்குமாறு மன்றுக்கு உத்தரவிட்டார். (ஸ்ரீ-12-24)

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

2011.09 16

★ 1810-மிகுவேல் ஹிடால்கோ என்ற மதகுரு மெக்சிக்கோவின் விடுதலைப் போரை ஆரம்பித்தார்.

★ 1852-இலண்டனில் மான்செஸ்டர் நகரில் உலகின் முதலாவது இலவச நூல் நிலையம் அமைக்கப்பட்டது.

★ 1887-மென்பந்தாட்டம் முதன் [illegible] லில் சிக்காகோவில் வி[illegible] யாடப்பட்டது.

★ 1908-ஜெனரல் மோட்டர்ஸ் நிறுவனம் அமைக்கப்பட்டது.

★ 1963-மலாயா, சிங்கப்பூர் மற்றும் போர்ணியோவின் சாபா, சரவாக் ஆகியன இணைந்து மலேசியா உருவாக்கப்பட்டது.

★ 1975-பப்புவா நியூ கினி அவுஸ்திரேலியாவிடமிருந்து விடுதலை பெற்றது.

★ 1987-ஓசோன் படலத்தைப் பாதுகாக்கும் பிரகடனம் மொண்ட்றியால் நகரில் கைச்சாத்திடப்பட்டது.

★ 2000-இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் கட்சித் தலைவரும் அமைச்சருமான எம்.எச்.எம். அஷ்ரப் உலங்குவானூர்தி விபத்தில் மரணமானார்.

★ 2002-விடுதலைப் புலிகளுக்கும் ரணில் விக்ரமசிங்க அரசுக்கும் இடையிலான பேச்சுவார்த்தை தாய்லாந்தில் ஆரம்பமாகின.

**பிறப்புக்கள்**

★ 1916-எம்.எஸ்.சுப்புலட்சுமி, இந்திய கர்நாடக இசைப் பாடகி (இ.2004)

★ 1954-ப.சிதம்பரம், இந்திய அரசியல்வாதி

**இறப்புக்கள்**

★ 1736-கப்றியேல் ஃபாரென்ஹைட், ஜேர்மனிய இயற்பியலாளர் (பி.1686)

★ 1824-பதினெட்டாம் லூயி, பிரான்சின் மன்னன் (பி.1755)

★ [illegible]94-சு.பொன்னம்பலம், யாழ்ப்பாணத்தின் பிரபல சத்திரசிகிச்சை நிபுணர் (பி.1928)


★ 1998-கோ.கேசவன், தமிழியல் ஆய்வாளர் (பி.1946)

**சிறப்பு நாள்**

★ உலக ஓசோன் பாதுகாப்பு தினம்


★ மெக்சிக்கோ- சுதந்திர தினம் (1810)

★ பப்புவா நியூ கினி- சுதந்திர தினம் (1975)



2009- தமிழகப் பேச்சாளரும் எழுத்தாளருமான தென்கச்சிகோ சுவாமிநாதனின் நினைவு தினம் இன்றாகும்.

# நவீன எண் சோதிடம்



## பார்ப்பதற்கு கம்பீரமாகவும் மக்களுக்குத் தலைவனாகவும் விளங்குவர்

47

### உடல் எண் 5 உயிர் எண் ௯

5,14,23 போன்ற தேதிகளில் பிறந்து, பிறந்த தேதி, மாதம், வருடம் இம்மூன்றையும் கூட்டி வருகின்ற கூட்டு எண்ணாகிய உயிர் 9 வருமேயானால் இவர்கள் புதன், செவ்வாய் ஆதிக்கத்தில் பிறந்தவராவர். இவர்கள் பார்ப் பதற்கு கம்பீரமாகவும், மக்க ளுக்கு தலைவனாகவும் விளங்கு வர். இவர்களை பார்க்கின்ற போதே பிறர் அஞ்சும் அளவிற்கு காட்சியளிப்பர். மனோதிடமும், உடற்பலமும் கொண்ட இவர்கள் தான் நினைத்ததைச் செய்து முடிக்க வேண்டுமென்று உறுதி யாக செயற்படுவர். தன்னை நம்பி உள்ளவர்களுக்கு தலை வனாகவும் தன்னை எதிர்ப்பவர் களுக்கு பலமான எதிரியாகவும் விளங்குவர். எந்தக்காரியத்தையும் என்னால் செய்து முடிக்க முடியும் என்று மார்தட்டிக் கூறுவர். இதனால் இவர்களை எல்லோரும் மதிப்போடு மனோதிடமான மனிதர் என எண்ணுவர்.

இவர்களுடைய பிறந்ததேதி, எண்களுக்குப் பொருத்தமானதாக பெயர் அமைந்து விட்டால் வாழ்க்கையில் பல்வேறு வழிக ளில் முன்னேற்றம் அடைவர். பல மக்களுக்கு உதவுவதன் மூலம், தான் ஒரு பெரிய மனிதன் என்ற ஸ்தானத்தை அடைவர். எக்காரியத்தில் இறங்

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
|---|---|---|---|---|---|---|---|
| A | B | C | D | E | U | O | F |
| I | K | G | M | H | V | Z | P |
| J | R | L | T | N | W | | |
| Q | | S | | X | | | |
| Y | | | | | | | |

கினாலும் அதில் இரகசியமான வருவாயைத் தேடிக் கொண்டே செல்வர். பலருடைய பிரச்சனை களைத் தீர்த்து வைப்பதாலும், குறுக்கு விசாரணை செய்வதா லும் வழக்குத் தொடுப்பதாலும் புகழுடைவர். ஒரு சாரார் இவர்களைப் பார்த்து சூழ்ச்சிக் காரர் என்றும், மற்றொரு சாரரர் பொதுமக்களின் உபகாரி என்றும் அழைப்பர்.

இவர்களின் வாழ்க்கை போராட் டத்திலேயே உயர்ந்து கொண்டு செல்லும். பல ஆபத்துக்களைக் கடந்து கொண்டே செல்வர். பரோபகாரமான செயல்களினால் மற்றவர்கள் இவர்களை அனுப வசாலி எனப்புகழ்வர். வஞ்சகர் களும், ஏமாற்றுக்காரர்களும், நல்லவர்களும், பெரும் தொழில் அதிபர்களும், இவர்களைச் சூழ்ந் திருப்பர். இவர்கள் எப்போதும் சிந்தனை செய்து கொண்டே யிருப்பர். இவர்களுக்கு பெயர் பொருத்தமானதாக அமையுமே யானால் நாளுக்கு நாள் முன் னேற்றம் அடைந்து கொண்டே செல்வர். வீடு, வாகனம், நிலம் போன்ற அனைத்து வசதிகளும் பெற்றுச் செல்வச் சீமானாக வாழ்வர். ஆனால் பெயர் பொருத் தமின்றி அமையுமேயானால் பல் வேறு பிரச்சினைகளைச் சுமந்து கொண்டு அலைந்து திரிவர்.

இவர்கள் மனம் சட்டம், சாஸ் [illegible]ம், கைநுணுக்கத் தொழில், [illegible]தம், போன்றவற்றை ஆரா [illegible]ம். அதோடு இரசாயனம், [illegible]த்தியம் போன்றவற்றில் ஆர் வ[illegible]ருக்கும். தீடிர் தீடீரென்று புதுப்புது[illegible] கருத்துக்கள் மனதில் தோன்று[illegible] ஆரம்ப வாழ்க்கை சிலருக்கு[illegible] சிரமாக இருந்தாலும் வயது ஏற ஏற நல்ல முன்னேற்றத் தையும், அனுபவத்தையும் பெறு வர். எப்போதும் சுறுசுறுப்புடன் காட்சியளிக்கும் இவர்கள் சில நேரங்களில் முழுச் சோம்பேறியாகி விடுவர். பிறருக்கு ஊக்கம் கொடுப் பதில் கைதேர்ந்தவர்களான இவர் கள் தனக்கு வரும் கஷ்டத்தைப் பிறருடம் கூறாது தானாகவே தைரியப்படுத்திக் கொள்வர்.

கமிஷன் மூலம் அதிகப் பொரு ளீட்டும் பாக்கியமுள்ளவர்களாகை யால் செலவு செய்யும் போது தாராளமாகச் செலவு செய்வர். பணம் இல்லாத போது தனிமை யில் இருந்து வருந்துவர். இவர் களுக்கு பெயரர் பொருத் தமான தாக அமையுமேயானால் எல்லா வளங்களையும் பெறுவதோடு, ஆண்டவனின் அருளும் கிடைக் கும். அனால் பெ்யர் பொருத்த

**எண் கணித நிபுணர்**
**கலாநிதி ஆர்.ஐ.துரைமுருகர் D.LIT**

மின்றி அமையுமேயானால் இயற் கையிலேயே பெண்ணாசை கொண்ட இவர்கள் காமுகர்களாக மாறி விடுவர். இதனால் பெயரைத் தனது பிறந்த தேதிக்குப் பொருத்த மானதாக மாற்றிக் கொள்வது அவசியம்.

**தொழில்**

இந்த எண்ணிக்கைக்காரர்க ளுக்கு கமிஷன், கான்ட்ராக்ட், ஏஜென்சீஸ் வழக்கு தீர்த்துவைத் தல் போன்றவற்றிலும், இரும்பு, மெட்டல், மருந்து சம்பந்தமான தொழிலாலும், பிறரை மகிழ் விக்கும் தொழிலாலும் முன்னேற் றம் காண்பர்.

**நோய்**

இந்த எண்ணிக்கைகாரர்களுக்கு ரத்தக் கொதிப்பு, இருதய வியாதி, சர்க்கரை வியாதி, மூட்ட வலி, முதுகு வலி, நரம்பு சம்பந்தமான நோய்கள் வர வாய்பிருப்பதால் தனது பெயரைப் பிறந்த தேதிக்கு பொருத்தமானதாக அமைத்துக் கொண்டு நோயிலிருந்து விடு படலாம்.

**பெயர் அமைக்கும் முறை**

புதன், செவ்வாய், ஆதிக்கம் கொண்ட இவர்களுக்கு புதன், செவ்வாய் ஆதிக்கமான 14,23, 32,41,50,59,77,27,36,45 போன்ற எண்களில் பெயர் அமைத்துக் கொள்வது சிறப்பாகும்.

**பின்பற்ற வேண்டியவை**

யோகமான எண்- 5,9

யோகமான தேதிகள்- 5,14,23, 9,18,27,6,15,24,3,12,21,30

யோகமான நிறம்- சிவப்பு, சாம்பல் நிறம்,

யோகமான மோதிரக்கல்- வைரம், ஜிர்கான், பவளம்

ஆகாத தேதிகள்-2,11,20, 29,7,16,25

ஆகாத நிறம்- பச்சை மட்டும்


## பெயர் எண்களின் பலன்

**35 எண் பலன்**

இந்த எண்ணை பெயராக கொண் டவர்களுக்கு எப்பொழுதும் செலவு காத்து[illegible] கொண்டிருக்கும். மனம் அமைதியில்லாதிருக்கும். தன்னு டைய திறமைகளையெல்லாம் தீய வழியில் பணம் சேர்க்க பயன் படுத்துவர். அவரைச் சார்ந்தவர் களினால் நன்மை கிடையாது. வயிறு, முதுகு, பல் ஆகியவற்றில் வலி உண்டாகும். பெரிய வியா பாரம் செய்து கொண்டிருப்பவர், திடீரென்று பொருளை இழக்க நேரும். இதனால் வியாபரர விலாசமோ, பெயரோ இந்த எண்ணில் இருந்தால் மாற்றி அமைத்துக் கொள்ளவும்.

**36 எண் பலன்**

3 என்ற குருவும் 6 என்ற சுக்கி ரனும் சேர்ந்து இந்த எண் வரு வதால் பெண்களினால் சில இடை யூறுகள் வரும். ஆனால் தனது கடுமையான உழைப்பாலும், விடா



முயற்ச்சியாலும் செல்வந்தனாகி விடுவர். தனது பிறந்த ஊரை விட்டு வெளியேறி வாழ்க்கையில் முன்னேற, நல்ல தொழிலை அமைத்தக் கொள்வர். சிலர் கடல் கடந்து பயணங்களும் செய்வ துண்டு. 9,18,27 போன்ற தேதி களில் பிறந்தவர்கள் இப் பெயரை அமைத்துக் கொண்டால் வாழ்க் கையில் எவ்வித சிக்கலுமின்றி செல் வச் சீமானாய் வாழ்வர். ஆனால் 2,11,20,29,7,16,25 போன்ற தேதி களில் பிறந்தவர்கள் இப்பெயரை அமைத்துக் கொண்டால் துன் பம் தொடரும்.


**37 எண் பலன்**

இந்த எண்ணை பெயரில் அமைத்துக் கொண்டவர்கள் ஆரம் பத்தில் போராடி, உயர்ந்த இடத்தை அடைவர். இவர்களது பேச்சில் வசீகரமும், நடை, உடை, பாவ னைகளில் கவர்ச்சியாகவும் காட்சியளிப்பர். தன் தகுதிக்கு மீறிய திட்டங்களைப் போட்டு இறுதியில் வெற்றி பெறுவர். இவர்களுக்கு பல உண்மையான நண்பர்கள் சூழ்ந்திருப்பர். இவர் கள் வாழ்க்கையில் முன்னேறிய தற்கான காரணம் நண்பர்கள் தான். இவர்களுக்குப் பல்வேறு வழிகளிலும் வருமானம் வந்து சேரும். இவர்கள் மனம் கலை களிலும், கவர்ச்சியான பேச்சுக் களிலும் அழகான வீடு கட்டு வதி லும் செல்லும். என்றும் குன்றாத யோகம் உண்டு. இவர்களை காண்பதற்குப் பலர்காத்துக் கொண்டிருப்பர். இவர்களது பிறந்த தேதி பொருத்த மானதாக இல்லா விடில் பலன் சிறிது குறையும். தனக் குத் தேவையில் லாத விவகாரங் களில் தலையிட்டு மாட்டிக் கொண்டு திண்டாடு வர். பொதுவாக இந்த எண் பெயரில் அமைந்தவர்கள் சீரும் சிறப்புமாக இருப்பதை காணமுடிகிறது. இந்த எண் விரும்பத்தக்கதே. ஆனால் 50 வயதுக்கு மேல் இந்த எண் ணைப் பெயரில் கொண்டவர் கள் சில தோல்விகளைச் சந் திக்க நேரும். ஆனால் அந்தத் தோல்வியை மறைத்து மீண்டும் முயன்று வெற்றிப் பெறுவர்.

(தொடரும்)

# நீலக்கடலலை தாலாட்டும் சாட்டி தலத்தின் புனித சிந்தாத்திரை மாதா

கத்தோலிக்கத் திருச்சபை வரலாற்றில் தனியிடம் வகிப்பவள் புனித கன்னிமரியாள். கத்தோலிக்க மக்களின் இதயங்களில் நீங்காத நினைவாக நிறைந்திருப்பவள் அன்னை மரியா.``ஈன்று புறந்தருதல் என்



தலைக்கடனே'' ஒரு தாயின் முக்கிய கடமை குழந்தையைப் பெற்றெடுப்பது. ஆனால், அத்துடன் அவர் கடமை முடிவதில்லை.

அவ்வாறு புனித கன்னிமரியாள் இயேசுவை இவ்வுலகில் பெற்றெடுத்தது மட்டுமல்ல இறைவனின் மீட்புத்திட்டத்தில் மிகவும் நெருக்கமாக இயேசுவுடன் ஒத்துழைத்தார். அதற்கேற்ப இறைவன் அவளுக்குக் கொடுத்ததுதான் தாய்மை எனும் கொடை. ஒரு குழந்தைக்கும் அதன் தாய்க்கும் இடையேயான உறவை எடுத்துரைக்கின்றது. இதனால்தான் தாய்மைப்பேறு மிகவும் பொறுப்பு வாய்ந்தது.

தனது பிள்ளையின் நலனில் அக்கறை கொண்டு, அதன் வளர்ச்சியில் தன்னை அர்ப்பணிப்பதில் தான் ஒரு தாயானவள் தனது தாய்மையின் முழுமைமையடைகிறாள். இத்தகைய தாய்மையின் முழுமைக்கு இலக்கணம் என்றால் அது எமது அன்னை மரியாளே. இதனால்தான் அனைத்து மக்களும் இன, மத பேதமின்றி அன்னையின் திருத்தலங்களை தரிசித்து பிள்ளைகளுக்குரிய உரிமையோடு தங்கள் சுக துக்கங்களை அன்னையோடு பகிர்ந்து அன்னை யின் ஆசீர்பெற்று செல்கிறார்கள்.

இவ்வாறு புகழ் பெற்ற திருத்தலங்களில் ஒன்றாக எமது யாழ்.மறை மாவட்டத்திலே கடலலை தாலாட்டும் இயற்கை எழில்மிக்க சாட்டியிலே கோயில் கொண்டிருக்கும் சிந்தாத்திரை அன்னையின் திருத்தலமும் விளங்குகிறது. நாளை யாழ். கத்தோலிக்க திருச்சபை அன்னையின் திருவிழா வைக் கொண்டாடுகின்ற வேளையில் அத்திருத்தலத்தின் சிறப்பினையும், அன்னையின் மகிமையினையும் நாம் அறிந்து கொள்வது சாலச்சிறந்தது.

இந்து சமுத்திரத்தின் நித்திலம் என அழைக்கப்படும் இலங்கையில், யாழ்ப்பாணக் குடாநாட்டின் தீவகப் பகுதியிலே வேலணை என்னும் பதியில் அமைந்துள்ள சிற்றூரே சாட்டி. நீலக்கடலும், அது கழுவிய தூய மணலும், அவைவலுக்கொடுக்க ஓங்கி வளர்ந்திருக்கும் பனைகளும் எழில்பரப்பி நிற்கின்றது. இதனொளியில் அழகாகக் காட்சிதருகின்ற இக்கிராமமானது ஒரு காலத்தில் இலங்கைக்கும் இந்தியாவுக்குமான வர்த்தகமையமாக விளங்கியதை வரலாற்றில் காணமுடிகின்றது.

1544 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அக்கடற்கரையிலே பயணித்த போர்த்துக்கேயரின் கப்பலொன்று கடும்புயலில் அகப்பட்டு அதில் பயணித்த அனைவரும் உயிருக்கு போராடிக் கொண்டிருந்த வேளையில், கப்பல் தலைவன் அன்னையிடம் உருக்கமாக மன்றாடினான்.

அன்னையின் பரிந்துரையால் காப்பாற்றப்பட்ட அவர்களது கப்பல்

## சாட்டி புனித சிந்தாத்திரை மாதாவின் திருவிழா நாளை கொண்டாடப்படுகின்றது

சாட்டி கடற்கரையிலே அற்புதவிதமாக கரையொதுங்கியது. அன்னையின் புதுமையைக் கண்டு களிப்புற்ற கப்பல் தலைவன் அப்பகுதியிலே ஒரு கொட்டகை வடிவில் ஆலயம் அமைத்து அன்னையின் திருச்சொருபத்தை வைத்து வழிபட்டான். தொடர்ந்து கரம்பன் மற்றும் ஊர்காவற்றுறை மக்கள் இவ்வாலயத்தை தரிசித்து அன்னைக்கு விழாக் கொண்டாடி வந்தனர்.

போர்த்துக்கேயருக்குப் பின்னர் வந்த ஒல்லாந்தர் அன்னையின் திருத்தலத்தை முற்றுமுழுதாக அழித்தார்கள். அதன் விளைவாக அன்னையின் திருச் சொருபம் எங்கே என்பதே தெரியாமல் மக்கள் தவித்தார்கள். சிறிது காலத்துக்குப் பின்னர் மக்கள் மேற்கொண்ட தேடுதலின் விளைவாக அன்னையின் புதுமைமிக்க திருச்சொருபம் ஒரு பாழடைந்த கிணற்றுக்குள் இருந்து கண்டெடுக்கப்பட்டது.

பின்னர் அவர்கள் அன்னையின் திருத்தலத்தை மீள அமைத்தார்கள். அன்று தொடக்கம் பிரசித்திபெற்ற ஒரு திருத்தலமாக அன்னையின் பிரசன்னம் அங்கிருப்பது யாவரும் அறிந்த உண்மையே. அன்னையின் அற்புதப் புதுமைகளால் நலன்பெற, பல்லாயிரக்கணக்கான மக்கள் பல பாகங்களிலிருந்தும் வந்து அன்னைக்கு வணக்கம் செலுத்துவதோடு, இறைவனுக்கு புகழ்பாடுகிறார்கள்.

அன்னையின் பரிந்துரைகளால் நோய்கள், வறுமை, போர் ஆபத்துக்களிலிருந்து விடுதலை பெற்று தங்கள் வாழ்வை இயேசு ஆண்டவரின் வழியில் முன்னெடுக்க மக்கள் அன்னையின் பதியை நாடுகிறார்கள். பல்லாயிரக்கணக்கான யாத்திரிகர்களின் வருகையால் அன்னையின் திருத்தலம் புதுப்பொலிவோடு அழகுடன் காட்சி தருகிறது.

இறைமக்கள் அனைவரும் ஆவலோடு காத்திருக்கும் அன்னையின் திருவிழா நாளை யாழ்.மறைமாவட்ட ஆயர் அதி வணக்கத்திற்குரிய தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்களின் தலைமையில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு கொண்டாடப்படவுள்ளது. யாத்திரிகர்களின் அவசியத் தேவைகளை கவனிப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் திருத்தல பரிபாலகர் அருட்தந்தை ஸ்ரனிஸ்லாஸ் பிலிப்ஸ் அ.ம.தி. அடிகளார் ஒழுங்குபடுத்தியுள்ளார்.

சிந்தாத்திரை மாதா என அழைக்கப்படும் எமது அன்னை ஒரு கரத்தில் தனது குழந்தை இயேசுவை தாங்கியவளாகவும் மற்றைய கரத்தில் கப்பலை ஏந்தியவளாகவும் துன்பங்களோடும் வேதனைகளோடும் வரும்


**அருட் சகோ. ரமேஸ் அ.ம.தி**

தனது பிள்ளைகளை தேற்றி அரவணைக்கும் சாந்தமும், புனிதமும் நிறைந்தவளாக தனது கொலுவிலே வீற்றிருக்கிறாள்.

அன்னையின் பரிந்துரையால் இறையாசீர் பெற்று எமது வாழ்வை மலரச் செய்ய அன்னையின் பதி நாடுவோம், இறைபுகழ் பாடுவோம்.

# சில நாடுகளின் இராஜதந்திரிகள் வரைமுறைகளை மீறி செயற்படுகின்றனர்

## ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ குற்றச்சாட்டு



சில நாடுகளின் இராஜதந்திரிகள் இராஜதந்திர வரைமுறைகளை மீறிச் செயற்பட்டு வருவதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ குற்றம் சுமத்தியுள்ளார்.

அரசாங்கத் திணைக்களங்களின் தலைவர்களையும் பணிப்பாளர்களையும் குறித்த இராஜதந்திரிகள் நேரடியாக சந்திப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

துறைசார் அமைச்சர்கள் அல்லது அமைச்சுக்களின் செயலாளர்களது அனுமதியின்றி இராஜதந்திரிகள் அரச நிறுவன அதிகாரிகளை சந்திப்பது இராஜதந்திர வரைமுறைகளுக்கு புறம்பானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவ்வாறு இராஜதந்திர வரைமுறைகளை மீறிச் செயற்படக் கூடாது என குறித்த இராஜதந்திரிகளுக்கு விளக்கமளிக்குமாறு ஜனாதிபதி வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸிற்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

பல சந்தர்ப்பங்களில் துறை அமைச்சர்களும் அமைச்சு செயலாளர்களும் அறிந்திராத வகையில் அரச நிறுவன உயரதிகாரிகளுடன் சில நாட்டு இராஜதந்திரிகள் நேரடியான தொடர்புகளைப் கொண்டிருப்பதாகக் குற்றம் சுமத்தியுள்ளார்.

இவ்வாறு இராஜதந்திர வரைமுறை மீறிச் செயற்படும் அநேகமான இராஜதந்திரிகள் பிரதிநிதித்துவம் செய்யும் நாடுகள் இலங்கையில் நல்லாட்சி நிலவவில்லை என குற்றம் சுமத்தி வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

சீனா போன்ற நாடுகள் எந்தச் சந்தர்ப்பத்திலும் இவ்வாறான குற்றச்சாட்டுக்களை முன்வைத்ததில்லை எனவும் சீன இராஜதந்திரிகள் நாட்டின் உள்விவகாரங்களில் தேவையின்றி தலையீடு செய்வதில்லை என அவர் புகழாரம் சூட்டியுள்ளார். (ஸ்ரீ-4)

## சனீஸ்வர தோஷசாந்தி ஹோம பூஜைகள்

(யாழ்ப்பாணம்)

இணுவில், மருதனார்மடம் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் தேவஸ்தான சனீஸ்வர தோஷ சாந்தி ஹோம பூஜைகள் பிரதி சனிக்கிழமைகள்தோறும் நடைபெறவுள்ளது.

இதில் இம்மாதம் 24 ஆம் திகதி, எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 1,8,15 ஆம் திகதிகளில் தினமும் காலை தொடக்கம் மாலை வரை பூஜைகள் இடம்பெறவுள்ளன. (ஸ்ரீ-12)

## சரணாலயங்களை பார்வையிட செல்வோருக்கு இணையத்தளம் ஊடாக நுழைவுச்சீட்டுக்கள்

தேசிய சரணாலயங்களைப் பார்வையிடச் செல்லும் சுற்றுலாப் பயணிகளுக்கு இணையத்தளம் ஊடாக நுழைவுச் சீட்டுக்களை முன்கூட்டியே பெற்றுக் கொள்ளும் வழிமுறையை அறிமுகப்படுத்தவுள்ளதாக வனஜீவராசிகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சரணாலயங்களைப் பார்வையிட வருகின்ற மக்கள் இதன்மூலம் நுழைவுச்சீட்டிற்கான வரிசையில் காத்திருக்க வேண்டிய அவசியம் ஏற்படமாட்டாதென வனஜீவராசிகள் பணிப்பாளர் நாயகம் எச்.டீ.ரத்நாயக்க குறிப்பிட்டார்.

யால சரணாலயத்தைப் பார்வையிட வருகின்ற சுற்றுலாப் பயணிகளுக்காக இத்திட்டத்தின் முதல்கட்டம் இன்னும் சில தினங்களில் ஆரம்பிக்கப்படும் என்றும் வனஜீவராசிகள் பணிப்பாளர் நாயகம் மேலும் கூறினார். (ஸ்ரீ-4)

# ஆப்கானில் 19 மணி நேரம் கடும் துப்பாக்கிச் சண்டை



## 14 பேர் பலி

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் தலிபான்களுக்கும் பன்னாட்டு படைகளுக்கும் கடந்த செவ்வாய்க்கிழமை தொடங்கிய துப்பாக்கி சண்டை 19 மணி நேரம் நீடித்தது. நேற்று முன்தினம் காலை அது முடிவுக்கு வந்தது. இந்த சண்டையில் 6 தீவிரவாதிகள் உட்பட மொத்தம் 14 பேர் பலியானார்கள். 19 பேர் காயம் அடைந்தனர்.

ஆப்கானிஸ்தானில் தலைநகர் காபூலில் உள்ள அமெரிக்க தூதரகம் எதிரே இப்போது தான் கட்டப்பட்டு வரும் பல அடுக்கு மாடி கட்டடத்துக்குள் புகுந்து அதை தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டு தலிபான் தற்கொலை தீவிரவாதிகள் 6 பேர் தாக்குதல் நடத்தி னார்கள். அவர்கள் ரொக்கெட்டுகளை வீசியும் துப்பாக்கியால் சுட்டும் தாக்குதல் நடத்தினார்கள்.

இரவு முழுவதும் நீடித்த தாக்குதலில் 5 அப்பாவிகளும் 3 பொலிஸாரும் பலியானார்கள். 10 அப்பாவிகளும் 9 பொலிஸ்காரர்களும் காயம் அடைந்தனர். காயம் அடைந்தவர்களில் 3 பேர் சிறுவர்கள் ஆவார்கள்.

இரவு முழுவதும் நடந்த சண்டையில் கட்டடத்துக்குள் பதுங்கி இருந்தபடி தாக்குதல் நடத்திய தலிபான்களில் 4 பேர் பலியானார்கள். மீதி இருந்த 2 பேர் தொடர்ந்து யுத்தத்தை நடத்தி மோதலை நீடித்து வந்தனர். நேற்று முன்தினம் காலை அந்த 2 பேர்களும் பலியானதை தொடர்ந்து அந்த யுத்தம் முடிவுக்கு வந்தது.

இந்த சண்டையின் போது தலிபான்கள் அமெரிக்க தூதரகம் மீது ரொக்கெட் வீசி தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் தூதரக ஊழியர்கள் யாரும் காயம் அடையவில்லை என்று கூறப்படுகின்றது. அவர்கள் அனைவரும் பாதுகாப்பான இடங்களில் பதுங்கி கொண்டனர். இதனால் அவர்கள் தப்பித்தார்கள்.

இந்த தாக்குதலில் விசா வாங்குவதற்காக தூதரகத்துக்கு வந்த 4 ஆப்கானிஸ்தானியர்கள் காயம் அடைந்தனர். இது போன்ற கோழைத்தனமான நடவடிக்கைகளால் அமெரிக்க தூதரக ஊழியர்களை மிரட்ட முடியாது என்று அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஹிலாரி கிளின்டன் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# பிரிட்டனில் வேலையில்லா திண்டாட்டம் அதிகரிப்பு

பிரிட்டனில் வேலையில்லா திண்டாட்டம் சமீப காலமாக அதிகரித்துள்ளது. தற்போது 25 இலட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் வேலையில்லாமல் தவிக்கின்றனர். பிரிட்டனில் தற்போது வேலை இல்லாத சதவீதம் 7.9 ஆக உள்ளது. வேலை இல்லாமல் 9 இலட்சத்து 73 ஆயிரம் இளைஞர்கள் உள்ளனர். வேலையில் உள்ள்வர்களின் பொருளாதாரமும் கடந்த 3 மாதத்தில் வெகுவாக குறைந்துள்ளது.

பிரிட்டனில் வேலை இல்லா திண்டாட்டம் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. இது குறித்து வேலை வாய்ப்புத்துறை அமைச்சர் கிறிஸ் கிரேலிங்க் கூறுகையில், இந்த வேலை இல்லாத நிலை அதிகரிப்பை நாங்கள் தவிர்க்க விரும்புகின்றோம் என்றார்.

பிரிட்டனின் பொருளாதாரம் அதிகரிக்கவும் தனியர் துறையில் அதிகளவு வேலை வாய்ப்புக்களை அதிகரிக்கவும் அரசு உறுதியாக நடவடிக்கை எடுக்கிறது என்றும் அமைச்சர் தெரிவித்தார். (4-2)



சூடான் கார்டோம் நகரில் நடைபெற்ற பதவியேற்பு விழாவில் ஜனாதிபதி அல்-பஷீர் முன்னிலையில் துணை ஜனாதிபதி அல் ஒஸ்மான் தாகா (வலது) பதவியேற்பதை படத்தில் காணலாம்.




# அமெரிக்காவில் வறுமையில் வாடும் மக்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

(நியூயோர்க்)

அமெரிக்காவின் பொருளாதாரம் மிகக் குறைந்த வேகத்தில் வளர்வதால் அங்கு வறுமைக்கோட்டுக்கு கீழ் உள்ள மக்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக அந்நாட்டின் சமீபத்திய கணக்கெடுப்பு தெரிவிக்கின்றது.

அமெரிக்க மக்கள் தொகைக் கணக்கெடுப்புப் பிரிவின் இயக்குநர் கடந்த 13 ஆம் திகதி அமெரிக்காவில் வறுமையில் வாடும் மக்களின் எண்ணிக்கை பற்றிய புள்ளி விபரங்களை வெளியிட்டார்.

அதன்படி கடந்தாண்டு இறுதிவரை ஒட்டு மொத்த மக்கள் தொகையில் 15.1 சதவீதம் பேர் அதாவது நான்கு கோடியே 60 இலட்சம் பேர் வறுமையில் வாடுகின்றார்கள்.

நான்கு பேர் கொண்ட ஒரு குடும்பம் ஆண்டுக்கு 22 ஆயிரத்து 113 டொலர் சம்பாதித்தால் அக்குடும்பம் வறுமைக்கோட்டுக்குக் கீழ் இருப்பதாக அமெரிக்காவில் கணக்கிடப் படுகின்றது.

கடந்த 52 ஆண்டுகளில் தற்போதுதான் வறுமையில் வாடும் மக்களின் எண்ணிக்கை மிகவும் அதிகரித்துள்ளது. கடந்தாண்டு மட்டும் நடுத்தரப் பிரிவில் இருந்து 26 இலட்சம் மக்கள் வறுமையில் வீழ்ந்துள்ளதாகத் தெரியவந்துள்ளது. அதேபோல் நடுத்தர வர்க்கப் பிரிவு மக்களின் வருமானம் கடந்தாண்டின் இறுதியில் 2.3 சதவீதம் குறைந்துள்ளது.

நடுத்தர வர்க்க குடும்பங்களில் வருமானம் கணிசமான அளவில் குறைந்துள்ளதால் நாட்டில் 15 வயது முதல் 24 வயதுக்குட்பட்ட இளைஞர்கள் பெருமளவில் பாதிக்கப் பட்டுள்ளனர். 25 இல் இருந்து 34 வயதுக்குட்பட்டோரில் 45.3 சதவீதம் பேர் வறுமைக் கோட்டுக்குக் கீழ் உள்ளனர். (ஸ்ரீ-4)

# இங்கிலாந்தில் புற்றுநோய்க்கான மருந்து கண்டுபிடிப்பு

உலகை அச்சுறுத்தி வரும் மிக கொடிய உயிர்க்கொல்லி நோயான புற்றுநோயை முழுவதுமாக குணப்படுத்த இதுவரை எந்த மருந்தும் கண்டுபிடிக்கப்படவில்லை. இந்நிலையில் புற்றுநோயை குணப்படுத்தும் புதிய மருந்தை இங்கிலாந்து நாட்டு விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.


ஸ்மார்ட் பாம் என்று பெயரிட்டுள்ள இந்த மருந்து அனைத்து வகை புற்றுநோய்களையும் குணப்படுத்தும் என தெரிவித்துள்ளனர். கோல்சிசைன் என்ற இந்த மருத்துவ முறை முதலில் எலிகளுக்கு வெற்றிகரமாக பரிசோதிக்கப்பட்டது.

இந்த பரிசோதனை முழு வெற்றி பெற்றுள்ளதாகவும் இதனை தொடர்ந்து அடுத்த கட்டமாக மனிதர்களுக்கு சோதிக்கப்படவுள்ளதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

ஆன்டம் குரோகஸ் என்ற ஒருவகை மலரில் இருந்து இந்த மருந்தின் மூலப் பொருள் எடுக்கப்பட்டதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

மேலும் இந்த மருந்து புற்றுநோய்க் கலன்களை முற்றிலுமாக அழித்துவிடும் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனால் வேறு பாதிப்பும் இருக்காது என தெரிவித்துள்ளனர். மனிதர்களுக்கு அளிக்கப்படும் சோதனை வெற்றிபெறும் பட்சத்தில் இந்த மருந்து இன்னும் 7 ஆண்டுகளில் மக்களின் பயன்பாட்டிற்கு வரும் என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். (ஸ்ரீ-4)



நியூயோர்க் நகரில் வசிக்கும் வால்டன், இப்பெண் கை விரல் நகங்களின் மொத்த நீளம் 6.02 மீற்றர். இது புதிய 2012 ஆம் ஆண்டு கின்னஸ் புத்தகத்தில் இடம் பெற்றிருக்கின்றது.

# போராட்டக்காரர்கள் மீது சிரிய படையினர் தாக்குதல்

சிரியாவில் பஷார் அல் அசாத் நிர்வாகத்திற்கு எதிராக போராட்டம் நடந்து வருகின்றது. போராட்டக்காரர்களுக்கு எதிராக அரச பாதுகாப்பு படையினர் திடீர் தாக்குதலை மேற்கொண்டு இருக்கின்றார்கள்.

இந்த தாக்குதல் நாட்டின் வடமேற்கு பகுதியில் நடந்தது.

இது குறித்து போராட்டக்காரர்கள் கூறுகையில்,

சிரிய துருப்பினர் ஜபல் அல-ஜவய்யா பகுதியில் உள்ள 10 கிராமங்களில் புகுந்தனர். அவர்கள் சரமாரியாக எந்திரத் துப்பாக்கியால் சுட்டனர் என தெரிவித்தனர்.

முன்னதாக அரச துருப்பினர் பொது மக்கள் மீது கண்ணீர் புகை குண்டுகளை வீசினர். தலைநகர் டமாஸ்கசுக்கு புறநகர் பகுதியில் உள்ள இடத்தில் உரிமை ஆர்வலர் இறுதி அஞ்சலி நிகழ்ச்சியின் போது இந்த தாக்குதல் நடந்தது.

இந்த நிகழ்ச்சியின் போது உரிமை ஆர்வலரின் இறுதி நிகழ்ச்சியில் அமெரிக்க தூதரும் கலந்து கொண்டார். சிரிய துருப்பினர் தாக்குதலுக்கு முன்னர் அவர் வந்திருந்தார். (4)

# நரேந்திரமோடியின் திறமையான நிர்வாகத்திற்கு அமெரிக்கா பாராட்டு

(புதுடில்லி)

இந்தியாவைப் பொறுத்தவரை திறமையான நிர்வாகத்துக்கும் அபாரமான வளர்ச்சிக்கும் நரேந்திரமோடி தலைமையிலான குஜராத் மாநில அரசு சிறந்த முன்னுதாரணமாகத் திகழ்கிறது என அமெரிக்கா பாராட்டியுள்ளது.

அமெரிக்க பாராளுமன்ற ஆய்வுக்குழு (சி.ஆர்.எஸ்.) அந்த நாட்டின் எம்.பி.க்களுக்காக இந்தியாவின் முக்கிய விடயங்களை விளக்கும் அறிக்கையை தயாரித்துள்ளது.

94 பக்கங்களைக் கொண்ட இந்த அறிக்கை சமீபத்தில் வெளியிடப்பட்டது. அதில் குஜராத் மாநிலத்தின் வளர்ச்சியும் அம்மாநில முதல்வர் நரேந்திரமோடியின் செயற்பாடுகளும் வெகுவாகப் பாராட்டப்பட்டுள்ளன.

அந்த அறிக்கையில், இந்திய மாநிலங்களைப் பொறுத்தவரை திறமையான நிர்வாகத்துக்கும் அபாரமான வளர்ச்சிக்கும் சிறந்த முன்னுதாரணமாக குஜராத் மாநிலம் திகழ்கிறது. இந்த மாநிலத்தின் முதல்வரான நரேந்திரமோடி 2002 இல் நடந்த கலவரம் தொடர்பாக பெரும் சர்ச்சையில் சிக்கினார். ஆனாலும் அந்தச் சர்ச்சையிலிருந்து மீண்டு வந்து மாநிலத்தின் வளர்ச்சிக்குப் பயனுள்ள திட்டங்களைத்தீட்டி செயற்படுத்தினார்.

இதன்காரணமாக குஜராத் மாநிலம் பல்வேறு துறைகளிலும் சிறப்பான வளர்ச்சியை எட்டியுள்ளது. பொருளாதார நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தியது, சிவப்பு நாடா முறையை ஒழித்தது. ஊழலைக் குறைத்தது போன்ற நடவடிக்கைமூலம் தேசிய பொருளாதார வளர்ச்சிக்கு முக்கிய காரணமாக மோடி விளங்குகிறார். வீதி மேம்பாடு, மின்சார வசதி ஆகியவற்றிற்காக பெரியளவிலான தொகையை முதலீடு செய்தார் மோடி.

இதன்காரணமாக, அந்த மாநிலத்தின் ஆண்டு பொருளாதார வளர்ச்சி சமீப ஆண்டுகளில் 11 சதவீதமாக வளர்ச்சியடைந்துள்ளது. வெளிநாட்டு முதலீடுகளை ஈர்ப்பதிலும் குஜராத் மாநில அரசு முதலிடத்தில் உள்ளது. ஜெனரல் மோட்டார்ஸ், மிற்சுபிசி போன்ற நிறுவனங்கள் குஜராத்தில் முதலீடு செய்துள்ளன.

ஒட்டுமொத்த இந்தியாவில் உள்ள மக்கள் தொகையில் வெறும் 5 சதவீதம் பேர்தான் குஜராத்தில் வசிக்கின்றனர். ஆனால் இந்தியாவின் மொத்த ஏற்றுமதியில் குஜராத் மாநிலம் முக்கிய பங்கு வகிக்கிறது. ஒட்டு மொத்த இந்தியாவில் இருந்து ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களில் ஐந்தில் ஒரு பங்கு குஜராத்தில் இருந்து ஏற்றுமதி செய்யப்படுகிறது.

குஜராத்துக்கு அடுத்தபடியாக பீகார் மாநிலமும் நிர்வாகத்தில் சிறப்பாகச் செயற்படுகிறது. பொருளாதார வளர்ச்சியில் மிகவும் பின்தங்கிய இந்த மாநிலம் நிதிஷ்குமார் முதல்வராக பதவியேற்ற பின்னர் நல்ல வளர்ச்சியைக் கண்டுள்ளது. சட்டம், ஒழுங்கை கட்டுக்குள் கொண்டு வந்தது. கட்டமைப்பு மற்றும் கல்வித்துறைகளின் வளர்ச்சிக்கு அதிக முக்கியத்துவம் அளித்தது ஆகியவை நிதிஷ்குமாரின் சாதனைகள்.

எதிர்வரும் 2014ஆம் ஆண்டில் காங்கிரஸ் பொதுச்செயலர் ராகுல் மற்றும் குஜராத் முதல்வர் நரேந்திரமோடிக்கும் இடையே பிரதமர் பதவிக்காக நேரடி போட்டி ஏற்படலாம் என அமெரிக்க பாராளுமன்ற ஆய்வுக்குழு (சி.ஆர்.எஸ்.) அறிக்கையில் தெரிவித்துள்ளது. இந்த அமைப்பு அரசியல் சார்பற்ற



சுயேச்சையான அமைப்பு என்பது குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-4)

## சில்லறை நாணயத்தாள் இயந்திரம் அறிமுகம்

(காரைக்குடி)

தென்மாவட்டத்தில் முதன்முறையாக சில்லறை நாணயம் வழங்கும் இயந்திரம் காரைக்குடியில் அறிமுகம் செய்யப்படவுள்ளது. வங்கிகளால் மக்களுக்கு தேவைப்படும் சில்லறை நாணயங்களை வழங்குவதில் சிரமம் ஏற்படுகிறது. இதில் 5,10,20 ரூபாய் தாளுக்குத் தேவையான சில்லறை நாணயங்கள் கிடைக்கும்.

இயந்திரத்தில் ஒன்று, இரண்டு, ஐந்து ரூபாய் நாணயங்கள் கிடைக்கும். இதில் 20 ரூபாய்க்கு மேல் சில்லறை கிடைக்காது. இது குறித்து இந்தியன் ஓவர்சீஸ் வங்கி முதன்மை மண்டல மேலாளர் எம்.ராமதாஸ் கூறியதாவது, சில்லறை தட்டுப்பாட்டை நீக்க 3.25 இலட்ச ரூபாயில் நாணயம் வழங்கும் இயந்திரம் நிறுவப்படவுள்ளது. இந்த இயந்திரத்தில் 1,2, மற்றும் 5 ரூபாய் நாணயங்கள் ஒரு இலட்ச ரூபாவரை வைக்கப்படும். 5 மற்றும் 20 ரூபாய் நோட்டுக்களுக்கு மட்டுமே நாணயங்கள் பெறலாம் என்றார். (4-2)

## பாரதச் செய்திகள்



## மாறன் சகோதரர்களிடம் சி.பி.ஐ. கிடுக்குப்பிடி விசாரணை

(புதுடில்லி)

முன்னாள் மத்திய அமைச்சர் தயாநிதி மாறன், சன்.டி.வி நிர்வாக இயக்குநர் கலாநிதி மாறன், ஒஸ்ட்ரோ முதன்மைச் செயல் அதிகாரி ரால்ப் மார்ஷல் ஆகியோரை சி.பி.ஐ நேரில் அழைத்து விசாரணை நடத்தியுள்ளது.



மத்திய தொலைத் தொடர்பு அமைச்சராக தயாநிதிமாறன் 2004 முதல் 2007 ஆம் ஆண்டுவரை பதவி வகித்தார். அப்போது ஏர்செல் நிறுவனம் இந்தியாவில் சேவையை விரிவாக்கம் செய்ய விண்ணப்பித்தது. இதற்கு தயாநிதிமாறன் அனுமதி அளிக்க கால தாமதம் செய்தார் எனக் கூறப்படுகிறது.

ஏர்செல் நிறுவனத்தின் பங்குகளை மலேசியாவில மாக்சிஸ் நிறுவனத்துக்கு விற்க தயாநிதி மாறன் வற்புறுத்தியதாக ஏர்செல் நிறுவனத்தின் முன்னாள் தலைவர் சிவசங்கரன் குற்றஞ்சாட்டினார். இதற்கு கைமாறாக பெரும் தொகை சன்.டி.வி.யில் முதலீடு செய்யப்பட்டது என்றும் கூறப்பட்டது. இதனால் தயாநிதிமாறனுக்கு நெருக்கடி ஏற்பட்டது. இதையடுத்து மத்திய ஜவுளித் துறை அமைச்சராக பதவி வகித்துவந்த தயாநிதிமாறன் கடந்த ஜூலை மாதம் பதவி விலகினார்.

இந்த விவகாரம் தொடர்பாக முன்னாள் ஏர்செல் நிறுவனத்தின் தலைவர் சிவசங்கரனிடம் சி.பி.ஐ. ஏற்கனவே விசாரணை நடத்தியது. அப்போது முன்னாள் மத்திய அமைச்சர் தயாநிதிமாறன், சன்.டி.வி நிர்வாக இயக்குநர் கலாநிதிமாறன் மீதும் பல்வேறு குற்றச்சாட்டுக்களை சிவசங்கரன் தெரிவித்தார்

இந்த விவகாரம் தொடர்பாக சன்.டி.வி நிர்வாக இயக்குநர் கலாநிதிமாறன் டில்லி சி.பி.ஐ. தலைமை அலுவலகத்தில் திங்கட்கிழமை ஆஜராகியுள்ளார். அன்றைய தினம் மலேசியாவில் ஒஸ்ட்ரோ நிறுவனத்தின் முதன்மைச் செயல் அதிகாரி ரால்ப் மார்ஷலும் ஆஜராகினார். இந்த நிறுவனம் சன்.டி.வி யில் சுமார் ரூ.600 கோடி முதலீடு செய்ததாக குற்றச்சாட்டு உள்ளது.

முன்னாள் தொலைத்தொடர்புதுறை அமைச்சர் தயாநிதிமாறனிடம் சி.பி.ஐ அதிகாரிகள் விசாரணை நடத்தியுள்ளனர். டில்லியில் தங்கியிருக்கும் அவர் புதன் கிழமை காலை சி.பி.ஐ தலைமை அலுவலகத்துக்குச் சென்றார். அங்கு சி.பி.ஐ. அதிகாரிகள் சுமார் 5 மணிநேரம் விசாரணை நடத்தியுள்ளதாக தெரிகிறது.

அப்போது ரால்ப் மார்ஷலுக்கும், தயாநிதி மாறனுக்கும் இடையே நடைபெற்ற 4 சந்திப்புக்களின் திகதிகளை குறிப்பிட்டு கேள்விகள் கேட்கப்பட்டன.

தயாநிதிமாறனின் உதவியாளர் நம்பியாரிடமும் சி.பி.ஐ. அதிகாரிகள் புதன் கிழமை விசாரணை நடத்தியதாக தெரிகிறது. ஆயினும் முன்னாள் மத்திய அமைச்சர் தயாநிதி மாறனிடம் மீண்டும் விசாரணை நடத்த வாய்ப்புள்ளதாக சி.பி.ஐ. வட்டாரங்கள் தெரிவித்தன. (ஸ்ரீ-4)

## உள்ளாட்சித் தேர்தலில் தி.மு.க.தனித்துப் போட்டி



### கருணாநிதி அறிவிப்பு

(சென்னை)

உள்ளாட்சித் தேர்தலில் அரசியல் நோக்கில் கூட்டணி வைத்துக் கொள்ளாமல் தி.மு.க. தனித்துப் போட்டியிடும் என தி.மு.க. தலைவர் கருணாநிதி அறிவித்துள்ளார்.

கடந்த 2006 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தல் வரை உள்ளாட்சித் தேர்தலில் தி.மு.க. கூட்டணி அமைத்தே போட்டியிட்டது. இந்த முறையே முதல்முறையாக தி.மு.க. தனித்துப் போட்டியிடவுள்ளது. இது தொடர்பாக புதன்கிழமை அவர் அறிக்கை வெளியிட்டார். அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, மத்தியில் முற்போக்கு அரசை அமைத்திடவும் மாநிலத்தில் ஜனநாயக ஆட்சியை அமைக்கவும் பயன்பட வேண்டும் என்ற காரணத்திற்காகவே ஒரேமாதிரியான கருத்துடைய கட்சிகளோடு தி.மு.க. கூட்டணி அமைத்தது.

உள்ளாட்சித் தேர்தல்களில் அரசியல் அடிப்படையோ, கொள்கை அடிப்படையோ முன்வைக்கப்படாமல் பொதுமக்களுக்குத் தேவையான சுகாதாரம், கல்வி, வீதி, மருத்துவம், குடிநீர் போன்ற பொதுப்பணிகளைக் குறிக்கோளாக கொண்டு இயங்க வேண்டும்.

எனவே, உள்ளாட்சி மன்றத் தேர்தல்களில் அரசியல் நோக்கில் கூட்டணிகளை உருவாக்குவது தேவையில்லை என்பதை ஆழ்ந்த சிந்தனைக்குப் பின்னர் தி.மு.க. முடிவாக எடுத்துள்ளது என்று கூறியுள்ளார் கருணாநிதி. (ஸ்ரீ-4)

## பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு சுஷ்மா சுவராஜ் பாராட்டு

(சிங்கப்பூர்)

லோக்சபா எதிர்க்கட்சித் தலைவரான சுஷ்மா சுவராஜ் அரச முறைப் பயணமாக சிங்கப்பூர் சென்றுள்ளார். அந்நாட்டு பிரதமர் லீ சீன் லூங், வெளியுறவு அமைச்சர் ஷண்முகம் உள்ளிட்டவர்களை இன்று சந்தித்துப் பேசியுள்ளார்.

இதற்கிடையே அவர் நிருபர்களிடம் குறிப்பிடுகையில்,

பிரதமர் மன்மோகன் சிங்கின் வங்கதேச பயணம் நன்றாக முடிந்துள்ளது. அவருடன் மேற்கு வங்க முதல்வர் மம்தாவும் சென்றிருந்தால் அந்த பயணம் மேலும் சிறப்புள்ளதாக அமைந்திருக்கும்.

தகவல் இடைவெளியின் காரணமாக அவர் இந்த பயணத்தை தவிர்த்துள்ளார். பிரதமரின் இந்த பயணத்தின் மூலம் வங்க தேசத்துடனான உறவு மேலும் பலப்பட்டுள்ளது. ஆனால், சீனாவுடனான நட்புறவைத் தான் எச்சரிக்கையுடன் கையாள வேண்டியுள்ளது என்றார். (ஸ்ரீ-4)



அரைக்கோணம் பகுதியில் புகையிரத . விபத்தில் காயம் அடைந்த பயணிகளை மருத்துவமனையில் நேரில் சந்தித்த தே.மு.தி.க. கட்சி தலைவர் விஜயகாந்த் ஆறுதல் கூறுவதைப் படத்தில் காணலாம்.

# அலரிமாளிகையின் விருந்துகளுக்கு பொதுமக்களின் பணம் பயன்படுவதில்லை

## அரசாங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

தேர்தல்களில் வெற்றி பெறுவதற்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் அலரி மாளிகையில் தினந்தோறும் விருந்துபசாரங்கள் நடத்தப்படுவதாக ஐக்கிய தேசிய கட்சியினால் முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கு அரசாங்கம் தனது கடும் கண்டனத்தை நேற்று வெளியிட்டுள்ளது.

இதேவேளை, இந்த விருந்துபசாரங்கள், தேர்தல் வெற்றியை நோக்காகக் கொண்டவை அல்ல என்பதுடன் அதற்காக செலவளிக்கப்படும் நிதி பொதுமக்கள் நிதியிலிருந்து பெற்றபட்டவை அல்ல எனவும் அரசாங்கம் சுட்டிக்காட்டியது.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று வியாழக்கிழமை காலை அரசாங்க தகவல் திணைக்களத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்ட அமைச்சர் கருத்து தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர் மஹிந்த ராஜபக்ஷ குடும்பம் ஏனையோருக்கு நன்றாக விருந்தளிக்கும் குடும்பமாகும். அலரிமாளிகை என்பது முன்னர் அமைச்சர்களுக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் மட்டுமே வரையறுக்கப்பட்ட இடமாகக் காணப்பட்டது. அங்கு பொதுமக்கள், மதத் தலைவர்கள் அல்லது வேறு தரப்பினர் எவரும் செல்ல முடியாத வகையில் வரையறுக்கப்பட்டிருந்தது.

இவ்வானதொரு நிலைமையினை மாற்றியமைத்தவர் ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷ. தினந்தோறும் அனுஷ்டிக்கப்படும் விசேட தினங்களை கருத்தில் கொண்டு அவற்றுடன் தொடர்புடையதான அமைப்புக்கள் பொதுமக்களைச் சந்தித்து ஜனாதிபதி தினமும் கலந்துரையாடுகின்றார். அவர்களைச் சந்திப்பதன் மூலம் வரவு- செலவுத் திட்டத்துக்கான தகவல்களையும் திரட்டிக் கொள்கின்றார்.

இதற்காகப் பொதுமக்களின் பணம் செலவிடப்படுவதில்லை. இவ்வாறிருக்க தேர்தலில் வெற்றி பெறுவதற்கான விருந்துபசார நிலையமாக அலரிமாளிகை அமைந்துள்ளது என ஐக்கிய தேசியக்கட்சியின் பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க குற்றஞ்சாட்டியுள்ளார். ஐக்கிய தேசியக் கட்சியின் தொடர் தோல்விக்கு ஜனாதிபதியால் வழங்கப்படும் விருந்தே காரணமாக அமைந்துள்ளது என்பதைப் போல அவரது கருத்து அமைந்துள்ளது.

ஐக்கிய தேசியக்கட்சி தற்போது ஒரு பலவீனமடைந்த கட்சியாக மாறியுள்ளது. அக்கட்சி பல பிரிவுகளாக பிளவடைந்து கிடக்கின்றது. அண்மையில் நடைபெறவுள்ள உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் சுயேட்சைக் கட்சிகள் சார்பில் போட்டியிடும் சிலர் கண்ணாடி சின்னத்தில் ஐ.தே.க.வின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் புகைப்படத்தைப் பயன்படுத்தி பிரசாரங்களில் ஈடுபட்டு வருகின்றன.

இவ்வாறான பலவீனங்களை அக்கட்சியினர் திருத்திக்கொள்ளாமல் அரசாங்கத்தின் மீது பழிகளை சுமத்தி வருகிக்றனர். நாட்டுக்கு பலம்வாய்ந்த எதிர்க்கட்சியொன்று தேவை. அந்த இடத்தை ஐ.தே.க.தவறவிடப் பார்க்கிறது. அதனால் தங்களுக்குள் உள்ள குறைகளை மறந்து கட்சியை வெற்றிப் பாதையில் கொண்டு செல்லும் நடவடிக்கைகளில் அக்கட்சி ஈடுபடவேண்டும் என அவர் தெரிவித்துள்ளார். (4-2)

# கண் பரிசோதனை மேற்கொண்ட மாணவர்களுக்கான அறிவித்தல்

(சாவகச்சேரி)

தென்மராட்சி பாடசாலைகளில் சுகாதாரப் பகுதியினரால் மேற்கொள்ளப்பட்ட கண் பரிசோதனையில் மேலதிக சிகிச்சைக்காக தெரிவு செய்யப்பட்ட மாணவர்களை நாளை சனிக்கிழமை காலை 8 மணிக்கு சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு சமுகமளிக்குமாறு சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினர் அறிவித்துள்ளனர்.

அத்தோடு இச் சிகிச்சை முகாமிற்கு கொழும்பிலிருந்து விசேட கண் வைத்திய நிபுணர்கள் கலந்து சிகிச்சையளிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-12-29)

# புத்தாக்குநர்களின் புதிய கண்டுபிடிப்புக்களை சர்வதேசமட்டத்திற்கு கொண்டு செல்ல திட்டம்

(கொழும்பு)

இலங்கை பல்கலைக்கழகங்களிலுள்ள புத்தாக்குநர்களின் புதிய கண்டுபிடிப்புக்களை சர்வதேச மட்டத்திற்கு கொண்டு செல்லும் திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகங்களிலுள்ள புத்தாக்குநர்களை அடையாளம் கண்டு அவர்களை பதிவுசெய்ய நடவடிக்கை எடுப்பதாக உயர் கல்வி அமைச்சின் செயலாளர் கலாநிதி சுனில் ஜயந்த நவரட்ண தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழக மாணவர்களையும் விரிவுரையாளர்களையும் இந்த வேலைத் திட்டத்தில் இணைத்துக்கொள்ள திட்டமிட்டுள்ளதாக உயர்கல்வி அமைச்சின் செயலாளர் மேலும் தெரிவிக்கின்றார். (ஸ்ரீ-4)

# ஐக்கிய அரபு எமிரேட்ஸுக்கு செல்வோருக்கு மருத்துவச்சான்றிதழ் கட்டாயம்

(கொழும்பு)

இலங்கை மற்றும் இந்தோனேசியாவிலிருந்து ஐக்கிய அரபு எமிரேட்ஸுக்கு தொழில் மற்றும் வசிப்பதற்காக வருபவர்கள் தாம் நோய்களினால் பீடிக்கப்படவில்லை என்பதை உறுதிப்படுத்தும் சான்றிதழை சமர்ப்பிக்க வேண்டும் என ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அரசாங்கம் நேற்று முன்தினம் புதன்கிழமை அறிவித்துள்ளது.

ரி.பீ.கல்லீரல் அழற்சி, எச்.ஐ.வி.எய்ட்ஸ் சிபிலிஸ் போன்ற நோய்கள் தொடர்பாக முதல் தொகுதி சோதனை தத்தமது நாடுகளிலுள்ள முன் அங்கீராகம் பெற்ற சுகாதார நிலையங்களில் சோதனை மேற்கொள்ளப்படவேண்டும்.

ஐக்கிய அரபு எமிரேட்ஸுக்கு வந்தவுடன் இரண்டாவது சோதனை மேற்கொள்ளப்படும் என அந்நாட்டு சுகாதார அமைச்சின் சுகாதார கொள்கைகளுக்கான உதவி செயலாளர் டாக்டர் மஹ்மூத் பிக்ரி தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-4)

# விண்ணப்பம் கோரல்

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்.பிராந்திய நிலையத்தினால் சுற்றுலாத் துறையும் விடுதி முகாமைத்துவமும் சான்றிதழ் க்ற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

18 வயதிற்கு மேற்பட்ட அனைவரும் இக்கற்கை நெறிக்கு விண்ணப்பிக்கமுடியும். விண்ணப்பப்படிவங்களை இலவசமாக இன்று முதல் பிறவுண்வீதி, கொக்குவிலில் அமைந்துள்ள யாழ்.பிராந்திய நிலையத்தில் பெற்றுக் கொள்ளலாம் என யாழ்.பிராந்திய நிலைய இணைப்பாளர் தெரிவித்துள்ளார். (4-2)

# சிறுவர் இல்லங்களை ஆராய அதிகாரிகள் நியமனம்

(கொழும்பு)

நாடளாவிய ரீதியாகவுள்ள சிறுவர் இல்லங்கள் குறித்து ஆராய்வதற்கு உரிய அதிகாரிகளை நியமித்துள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தலைவர் அனோமா திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

இது குறித்து தமக்கு ஆலோசனைகளை முன்வைப்பதற்கு விசேட குழுவொன்றையும் நியமித்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

நாட்டிலுள்ள அனைத்து சிறுவர் இல்லங்கள் குறித்தும் துரிதமான பணிகளை முன்னெடுக்க தாம் எதிர்பார்த்துள்ளதாக அனோமா திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அண்மையில் தீப்பரவல் காரணமாக குழந்தையொன்று பலியான நிட்டம்புவ சிறுவர்கள் இல்லத்தில் மேலும் 4 சிறுவர்கள் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தலைவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-4)

# நாட்டின் இன்றைய நிலைமைகள் குறித்து ரொபேட் ஓ பிளேக் திருப்தி

## லக்ஷ்மன் யாப்பா தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை அரசின் நடவடிக்கைகள் குறித்து இங்கு விஜயம் செய்துள்ள அமெரிக்காவின் பிரதி இராஜாங்கச் செயலாளர் ரொபேட் ஓ பிளேக் பாராட்டுத் தெரிவித்ததாக பதில் அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

தகவல் திணைக்களத்தில் நேற்று காலை நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பின் போது ஊடகவியலாளர் ஒருவர் கேட்ட கேள்விக்கு பதில் அளிக்கும் வகையிலேயே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த பிளேக் என்ன கூறுகின்றார் என்று ஊடகவியலாளர் தமது கேள்வியில் கேட்டுள்ளார்.

கடந்த 2009 ஆம் ஆண்டு மே மாதத்தில் தான் இலங்கையை விட்டு சென்றபோது காணப்பட்ட நிலைமையைவிட தற்போது நாட்டின் நிலைமை மிகவும் முன்னேற்றகரமாக மாறியுள்ளது.

இடம்பெயர்ந்தவர்களில் பெரும்பாலானவர்கள் மீள்குடியமர்த்தப்பட்டுள்ளனர். 8 ஆயிரம் முன்னாள் புலி உறுப்பினர்கள் புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளனர். இதுபோன்ற பல்வேறு முன்னேற்றங்கள் நாட்டில் ஏற்பட்டுள்ளன.

அரசாங்கத்துக்கும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாவது, வரவேற்கத்தக்கது. இப் பேச்சுவார்த்தைகள் மீண்டும் தொடர்ந்து செல்ல வேண்டும் என பிளேக் தெரிவித்ததாக அமைச்சர் கூறினார்.

மெனிக்பாம்முகாமில்இடம்பெயர்ந்தவர்கள் குறைந்துள்ளதன் மூலம் மீள்குடியேற்றம் சிறப்பாக இடம் பெற்றுள்ளமை மற்றும் நிலக்கண்ணி வெடிகள் அகற்றும் பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளமை போன்றவற்றை அமெரிக்கா வரவேற்பதாகவும் இலங்கையின் இந்த முயற்சிக்கு அமெரிக்கா மேலும் உதவும் வகையில் 20 மில்லியன் டொலரை வழங்கவும் பிளேக் இணக்கம் தெரிவித்ததாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (4-2)


# அறிவித்தல்

## நல்லூர் பிரதேச சபை- நல்லூர் உப அலுவலகம்

## ஆதனப்பெயர் மாற்றம்

**வட்டாரம்- 08**
**சிவன்கோவில் வீதி,**
**ஆதன இல-17.**

*நல்லூர் பிரதேச சபைக்கு உட்பட்ட நல்லூர் உப அலுவலக வட்டாரம் 08, சிவன் கோவில் வீதியிலுள்ள, ஆட்டையன் வளவு 17 ஆம் இலக்க, ஆதனமானது திரு: நித்தியானந்தன் பெண் செல்வசோதி என்பவரால் 10.01.2006 ஆம் திகதிய 1072 ஆம் இலக்க வெளிப்படுத்தல் உறுதி மூலம் தமக்கு சொந்தமானது என தெரியப்படுத்தப்பட்டு, சரவணமுத்து தெய்வேந்திரனும் பெண் இராஜேஸ்வரிக்கு 11.02.2010 ஆம் திகதிய 4053 இலக்க உறுதி மூலம் விற்பனை செய்யப்பட்டுள்ளது. தற்போது சரவணமுத்து தெய்வேந்திரனும் பெண் இராஜேஸ்வரி என்பவர் எமது ஆதனப்பதிவேட்டில் தமது பெயருக்கு மாற்றம் செய்வதற்காக விண்ணப்பித்துள்ளார். இவ் ஆதனத்திற்கு உரிமை கோருபவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 14 நாட்களுக்குள் எழுத்துமூலம் எமக்கு முறையிடுமாறு கேட்டுக்கொள்கின்றேன். அவ்வாறு உரிமை கோரப்படாதவிடத்து குறித்த ஆதனமானது திரு.சரவணமுத்து தெய்வேந்திரனும் பெண் இராஜேஸ்வரி என்ற பெயருக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றேன்.*

*2011.09.16*

**ப.வசந்தகுமார்**
**தவிசாளர்,**
**நல்லூர்பிரதேச சபை,**
**கொக்குவில்.**

*(சி-4446)*

ஒருவன் எப்போதும் வீரனாகவே வாழ முடியாது. ஆனால் என்றைக்கும் மனிதனாக வாழ முடியும் ~ஓர் அறிஞர்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## சர்வதேசம் அரசை அதட்டாவிட்டால் தமிழர்கள் இலங்கையில் வாழ்ந்த வரலாறே மிஞ்சும்

ஈழத் தமிழ் மக்களின் நீண்ட காலப் போராட்டம் மிகப் பெரும் துன்பத்தில் முடிந்து போனமை உலகின் சகிக்க முடியாத துன்ப வரலாறுகளில் முதன்மையானதாகிவிட்டது.

அக் கொடுந்துன்பத்தை உலக நாடுகள் தெரிந்து கொண்டிருந்தும் அதனைத் தடுத்து நிறுத்த முற்படாமை வேதனையிலும் வேதனை.

வன்னி யுத்தத்தில் அகப்பட்ட தமிழ் மக்கள் உலக நாடுகளிடம் எங்களைக் காப்பாற்றுங்கள் என்று கேட்டார்கள்.

ஐ.நா. அமைப்புகள் வன்னியிலிருந்து வெளியேறிய போது மக்கள் வீதிக்குக் குறுக்கே கிடந்து எங்களை கைவிட்டுப் போகாதீர்கள் என்று மன்றாடினார்கள்.

ஆனால், நீங்கள் எப்பாடுபட்டாலும் பரவாயில்லை என்று சொல்லி விட்டுப் போவது போல ஐ.நா. அமைப்புகள் வன்னி மண்ணிலிருந்து ஓடிச் சென்றன.

மீட்பாரும் காப்பாரும் இல்லாமல் உயிரிழந்த தமிழ் மக்களின் விடயத்தில் இன்றுவரை நீதி கிடைக்கவில்லை.

நீதி கிடைப்பதை தடுப்பதில் கடும் பிரயத்தனங்கள் நடந்தேறுகின்றன. இந்நிலையில் போரினால் உயிரிழந்து, சொத்திழந்து, சொந்தங்களைப் பறிகொடுத்து கண்ணீரும் கம்பலையுமாக வாழும் தமிழ் மக்களின் இறுதி நம்பிக்கை உலக நாடுகள் மீதே உள்ளது.

எங்களுக்கு ஏற்பட்ட இழப்புக்கள், பட்ட அவலங்கள், தொடரும் துன்பங்கள் இவையாவற்றுக்கும் முடிபு கிடைக்க வேண்டுமாயின் அது அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகளின் கைகளிலேயே தங்கியுள்ளது.

ஐ.நா. சபையின் செயலாளர் பான் கீ மூன் கூட எங்களுக்கு துரோகம் இழைத்துவிட்டார் என்ற நினைப்பு தமிழ் மக்களிடம் ஆழமாகப் பதிந்துள்ளது.

இந்நிலையில், இலங்கை தொடர்பில் சர்வதேச நாடுகளின் அழுத்தம், இறுக்கம் போதுமானவையாகத் தெரியவில்லை.

போர் முடிந்துவிட்டது என்பது இனப்பிரச்சினைக்கான தீர்வாக மாட்டாது. எனவே உலக நாடுகள் ஈழத் தமிழர்களின் நெடுந்துயருக்கு – அவர்கள் நீண்டகால அவல வாழ்வுக்கு முடிபு கட்ட திடசங்கற்பம் கொள்ளவேண்டும்.

அத்தகையதோர் திடசங்கற்ப நிலை என்பது இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதை கால அவகாசத்துடன் கட்டாயப்படுத்துவதாகும்.

இலங்கை அரசுக்கு இத்தகைய கட்டாயப் படுத்தல் இல்லையாயின் எதிர்கால நிலைமை இலங்கையில் தமிழர்கள் வாழ்ந்தார்கள் என்ற வரலாறு மட்டுமே மிஞ்சுவதாக இருக்கும்.

# சேர்.பொன்.இராமநாதனின் கல்விச் சிந்தனையும் கல்விப் பணியும்

### நூல் விமர்சனம்

பழம்பெரும் கல்வியாளர் ஆர். எஸ். நடராசா அவர்கள் எழுதிய சேர். பொன் இராமநாதனின் கல்விச்சிந்தனையும் கல்விப்பணியும் என்னும் ஆய்வு நூல் நாளை சனிக்கிழமை நல்லூர் இந்து மாமன்ற அரங்கிலே வெளியிடப்படவுள்ளது.


நீண்ட காலமாகக் கல்விப்பணியோடு தன்னை இணைத்துக் கொண்ட ஆர்.எஸ். நடராசா அவர்கள் நெடுந்தீவைப் பிறப்பிடமாகக் கொண்டவர். சென்னைப் பல்கலைக்கழகப் பட்டதாரி.

பலாலி ஆசிரியர் பயிற்சிக்கலாசாலையில் அதிபராகக் கஷ்டமான காலத்திலே அர்ப்பணிப்புடன் பணியாற்றி அனைவரதும் நன்மதிப்பைப் பெற்றவர்.

மானுட நேயம் மிக்க அதிபர் என்று மாணவர்கள் இவரை இன்றும் பாராட்டுகின்றனர்.

ஈழத்துக் கல்விப் பாரம்பரியத்தின் ஊற்றுக்களையும் ஓட்டங்களையும் விஸ்திரமாக ஆராயும் இந்நூல், இப்பாரம்பரியத்திலே சேர்.பொன். இராமநாதன் பெறும் இடத்தினைக் காய்தல், உவர்தல் இன்றி ஆராய்கின்றது.

ஆர்.எஸ்.நடராசா அவர்கள் தமது நூலினை நெடுந்தீவின் கல்விச் சிற்பி எனக் போற்றப்படுகின்ற அதிபர் நவரட்ணசிங்கம் அவர்களுக்குச் சமர்ப்பணம் செய்துள்ளமை குறிப்படத்தக்க அம்சமாகும். ஆசிரிய, மாணவர் உறவிலே நன்றி உணர்வு எவ்வளவு வலிமையாகச் செயற்படுகின்றது என்பதை இந்நூலின் சமர்ப்பண உரை காட்டி நிற்கின்றது.




ஒரு ஆய்வுநூலை நாவல் படிப்பது போலப் படிக்கக் கூடிய வகையிலே இலகுவான நடையில் ஆர். எஸ். நடராசா அவர்கள் எழுதியுள்ளார்கள்.

இலங்கைகல்விப் பாரம் பரியத்தின் மூலவேரையும் விழுதுகளையும் கிளைகளையும் கண்டறிய இந்த நூல் பெரிதும் உதவும் என நம்புகிறேன்.

பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா

## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### அபிஷேகப் பிரியர் சிவபெருமான்

சிவபெருமானை வழிபடுவோர் வசதி படைத்தவர்களாக இருந்தால் கஸ்தூரி, கோரோசனை, குங்குமப்பூ, பச்சைக்கர்ப்பூரம் ஆகிய நறுமணப் பொருட்களை ஒன்றாகக் கலந்து சந்தனக்காப்பு செய்யலாம். இது சிவ பெருமானுக்கு மிகவும் பொருத்தமான வழிபாடு. இவ்வாறு சிவனை குளிர்வித்தால் வழிபாடு செய்பவருக்கு மட்டுமன்றி உலக உயிர்களுக்கும் புண்ணியம் கிடைக்கும். தானங்களில் மிக உயர்ந்த தானமாக புண்ணியதானம் கருதப்படுகிறது.

கர்ணன் தனது புண்ணியத்தைப் பகவானுக்கு அர்ப்பணம் செய்ததால்தான், அவன் கெட்டவர்களுக்குத் துணையாக இருந்தும் கூட பகவானின் விஸ்வரூப தரிசனத்தைப் பெற்றான். அவனது புகழ் பல்லாயிரம் ஆண்டுகளாக நிலைத்து நிற்கிறது. மேலும், சிவனுக்கு சந்தனக்காப்பு செய்தவர் தேவ வருடத்தில் கோடி வருடங்கள் சிவலோகத்தில் இன்பமாக இருப்-பார்கள் என்பது ஐதீகம்.

## பிடிக்கப்பட்டவர் இராணுவம் அல்ல!

கொட்டடியில் நேற்று முன்தினம் பிடிக்கப்பட்டவர் இராணுவத்தைச் சேர்ந்தவர் அல்ல என பலாலி படைத் தலைமையகம் அறிவித்துள்ளது. இது தொடர்பாக அவர்கள் வெளியிட்ட அறிக்கை வருமாறு,

நேற்றையதினம் உங்கள் பத்திரிகையில் முதலாம் பக்கத்தில் மர்ம மனிதர் மடக்கிப் பிடிப்பு; கொட்டடியில் நேற்றிரவு சம்பவம் என்னும் தலைப்பில் வெளியான செய்தியில் அந்நபர் 511 படைத் தலைமையகத்தைச் சேர்ந்தவர் என்று கூறப்பட்டுள்ளது.

எனினும் அந்நபர் பற்றிய தீவிர விசாரணையின் போது அவர் கடந்த வருடம் யாழ்ப்பாணத்தில் இருந்து கிழக்கு மாகாணத்தில் உள்ள ஹிங்குராகொட பகுதிக்கு அனுப்பப்பட்டுள்ளமை தெரிய வந்தது.

அத்துடன் கடந்த டிசம்பர் மாதம் 15-ம் திகதியில் இருந்து இராணுவத்தில் இருந்து நீக்கப்பட்டவர் என்றும் இவர் கட்டாய விடுமுறையில்சென்றவர் என்றும் தகவல் கிடைத்துள்ளது.

இவ்வாறான செய்திகளால் இராணுவம் மீது மக்கள் கொண்டுள்ள நம்பிக்கை இல்லாமல் போகின்றது என அதில் கூறப்பட்டுள்ளது. (ஏ)

## வெள்ளி நற்சிந்தனை

# செவ்வியல் தமிழில் சீர்மியம்

கடவுளை அறிந்தவர் சிலரே. இறை வழிபாட்டில் ஈடுபட்டோரும் இடையில் வினைப்பயனால் அவ்வழிபாட்டைக் கைவிட்டு விடுவதுண்டு. உலக வாழ்க்கையின்பங்கள் மீது கொண்ட பற்றுதலே இதற்குக் காரணம். பக்திவயப்பட்டோர் இவ்வாறு உலகவாழ்க்கையிலே திரும்பவும் செல்ல நினைப்பதுண்டு. இவர்களைப் பிராரத்த வினையுடையவர் என்பர். இந்த அனுபவத்தை மணிவாசகர் பெற்றுள்ளார். இறைவன் அவரை வலியவந்து ஆட்கொண்டதை மறந்து உலகவாழ்க்கை பற்றி எண்ணினார். அதனால் மீண்டும் இறைவனைத் தேடியலைய வேண்டிய நிலை அவருக்கு ஏற்பட்டது. தன்னுடைய நிலையைப் பாடல்களில் எடுத்துரைத்துள்ளார்.

வினை என்போல் உடையார் பிறர் ஆர் என்று தேடுகிறார். இறைவன் வலிய வந்து ஆட்கொள்ளும் பேறுபெற்ற போதும் இறைவன் கழலடி சேராமல் பிராரத்த வினையை அனுபவிக்கின்றேனே என நினைத்து வருந்துகிறார். தன்னை அடிமையாகிய நாய்போன்றவன் எனக் குறிப்பிட்டு இறைவனுக்குத் தினையளவின் பாதியளவு பொழுதும் தன்னைப் பிரிந்திருக்க மாட்டான் என்கிறார். இந்த நம்பிக்கை அவரிடம் இருப்பதற்குக் காரணம் இறைவன் அவரை வலிய வந்து ஆட்கொண்டமையாகும். அத்தகைய இறைவன் வினையின் நீங்கிய விளங்கிய அறிவினையுடையவனை வணங்காதிருப்பதை நினைத்து வாடுகிறார். இறைவன் திருவடி மலர்களை அணுகியிராமல் பிரிந்திருக்கிறேனே! அது மட்டுமல்லாமல் இறைவன் பிரிவினை ஆற்றாது என் தலையை கற்றூணில் மோதாமலிருக்கிறேனே! அன்பில்லாத வன்மையான இரும்பு போல இருக்கின்றது என அழுது அரற்றுகிறார். என் மனமும் கல்போல இளகாமல் இருக்கின்றது. என்னுடைய செவி எத்தகையது என்று கூறுவது? என அவர் பாடியிருப்பது எம்மைச் சிந்திக்க வைக்கின்றது.

வலியக் கிடைப்பதை உதாசீனம் செய்துவிட்டுப் பின்னர் அதற்காக வருந்துவது மனித இயல்பாகும். மணிவாசகர் அதனை அனுபவித்துத் துன்பப்பட்டவர். அதனால் மக்களுக்கு அறிவுறுத்த எண்ணிப் பாடுகிறார். இறைவனிடம் குருவடிவில் உபதேசம் பெற்ற செவி கூட அதனை மறந்து விட்டது. எனவே, இந்த உலகத்திலே தன்னைப் போல ஒருவரும் இல்லை என்ற முடிபுக்கு வந்துவிட்டார். ஆனால், எல்லாவற்றுக்கும் காரணம் இறைவன் மலர்ப்பதங்களைத் தொடர்ச்சியாக வழிபடாததுதான் என்பதை நன்கு உணர்ந்து கொண்டார். இவ்வாறு வழிபாட்டை மறப்பதற்குத் தான் ஒரு நாய் போல இருப்பதே காரணம் என நினைக்கிறார். மனம் வழிபாட்டிலே தொடர்ந்து நிற்கவேண்டும். செவி என்னும் உறுப்பு இறைவன் பற்றிய செய்திகளை எப்போதும் கேட்க வேண்டும். தேவாரப் பாடல்கள் பாடப்படும் போதும் வேதம் ஓதும்போதும் கேட்பதற்குச் செவிகள் தயாராக இருக்க வேண்டும். திருக் கோயிலிலே வழிபாடு செய்யும் போது வீணான பேச்சுக்கு இடமளிக்கக் கூடாது. மணிவாசகர் அருளுபதேசத்தைப் பெற்றிருந்தும் அதனை மறந்து உலக வாழ்வியலிலே ஈடுபட்டமையால் துன்புற நேர்ந்தது. எனவே, எல்லோரும் இறையருளைப் பெறும் பொருட்டுத் தொடர்ச்சியான வழிபாட்டைச் செய்ய வேண்டும்.

''வினையென் போலுடை யார்பிறர்
ஆர் உடையான் அடிநாயேனைத்
தினையின் பாகமும் பிரிவது
திருக் குறிப்பன்று மற்றதனாலே
முனைவன் பாதநன் மலர்பிரிந்தி
ருந்து நான் முட்டிலேன் தலைகீறேன்
இனையன் பாவனை யிரும்புகன்
மனஞ்செவி யின்னதென்றறியேனே.''

கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்


# விண்டோஸ் 8-இதுவரை தெரிந்தவை

மைக்ரோசொப்ட் தன் அடுத்த ஒப்பரேட்டிங் சிஸ்டம் தயாரிப்பில் மிக வேகமாக ஈடுபட்டு வருகிறது. பல வலைமனைகளில் இதன் கட்டமைப்பு குறித்த செய்திகள் வந்த வண்ணம் உள்ளன. மைக்ரோசொப்ட் நிறுவனத்தின் Building Windows 8 என்ற வலைமனையில் பல தகவல்கள் கிடைக்கின்றன. அவற்றை இங்கு பார்க்கலாம்.

விண்டோஸ் 95 சிஸ்டம் வந்த பின் பெரிய அளவிலான மாறுதல்களுடன் வர இருப்பது இந்த புதிய ஒப்பரேட்டிங் சிஸ்டமாகும். விண்டோஸ் 95 வெளியான போது டெக்ஸ்டொப் கணனி பயன்பாடுதான் உச்சத்தில் இருந்தது.

லப்டொப் கணனிகள் சாதாரண மக்கள் வாங்கிப் பயன்படுத்த முடியாத விலையில் அனைத்து நாடுகளிலும் இருந்தன. இப்போது நிலைமை தலை கீழாக மாறி விட்டது. நுகர்வோர் தொழில் நுட்ப ரீதியில் சிறப்பான இயக்கத்தினை அனைத்து சாதனங்களிலும் எதிர்பார்க் கின்றனர். அண்ட்ராய்ட் ஸ்மார்ட் போன் மற்றும் ஐபேட் சாதனங்களில் உள்ள வசதிகளை பேர்சனல் கணனிகளிலும் எதிர்பார்க்கின்றனர். அந்த வகையிலான எதிர்பார்ப்புக்களைச் சந்திக்கும் வகையில் விண்டோஸ் 8 இருக்கும் என்று எதிர்பார்க் கப்படுகிறது.

எனவே புதிய தொடுதிரை தொழில் நுட்பம் கொண்டதாகவும் வழக்கமான பயன்பாடும் இணைந்ததாகவும் விண்டோஸ் 8 அமையும். இந்த சிஸ்டம் ஏ.ஆர்.எம்.மற்றும் இன்டெல் சிப்கள் என இரண்டு வகை புரோசசர்களில் இயங்கும். தற்போது மைக்ரோசொப்ட் தரும் ஒன் லைன் வசதிகளான ஸ்கை ட்ரைவ் ஒபீஸ் 365 மற்றும் இலவச ஒபீஸ் இணைய அப்ளிகேசன்களை ஒருங்கிணைப்பதாக அமையும். மற்ற சிறப்பு அம்சங்களாக யு.எஸ்.பி. 3 சப்ரோர்ட் மற்றும் மாற்றி அமைக்கப்பட்ட விண்டோஸ் எக்ஸ்புளோரர் தொகுப்பினைக் கூறலாம்.



தொடுதிரை வசதிக்கென பெரிய அளவி லான பேனல்களை விண்டோஸ் 8 திரையில் காட்டும். இதனை மவுஸ் கொண்டும் இயக்கலாம். வழக்கமான ஸ்டார்ட் பட்டன் டாஸ்க்பார் மற்றும் டெஸ்க்டொப் வகை யறாவும் இதில் கிடைக்கும். தொடுதிரை தருவதன் மூலம் இப் போது வரும் டேப்ளட் பீசிக்களுடன் விண்டோஸ் போட்டியிட முடியும்.

மேலும் தன்னுடன் ஒப்பந்தம் கொண்டுள்ள சொப்ட் வெயர் நிறுவனங்களுக்கு மைக்ரோசொப்ட் தன் விண்டோஸ் 8 சிஸ்டத்தின் கட்டமைப்பினை வழங்கியுள்ளது. அவர்களும் தொடுதிரை அமைப்பில் இயங்கக் கூடிய அப்ளிக்கேசன் புரோகிராம் களைத் தயாரித்து வருகின்றன.

விண்டோஸ் எக்ஸ்புளோரின் செயல்பாட்டில் அதிக கவனம் விண்டோஸ் 8 தொகுப்பில் காட்டப்படுகிறது.

கொப்பி, மூவ், ரீ நேம், டிலீட் எனப் பல செயற்பாடுகளை நாம் அடிக்கடி இதில் மேற்கொள்கிறோம். இந்த ஒவ்வொரு செயலுக்கும் ஒவ்வொரு விண்டோவினை இது வரை ஒப்பரேட்டிங் சிஸ்டம் தந்து வந்தது.

விண்டோஸ் 8 தொகுப்பில் இவை அனைத்தும் ஒரே விண் டோவில் இருக்கும் . இதன்மூலம் பெரிய பைல்கள், குறிப்பாக வீடியோ மற்றும் போட்டோ பைல்களை எளிதாக ஒரே இடத்தில் கையாள முடியும். பைல்கள் கொப்பி செய் யப்படும் போதும் நகர்த்தப்படும் போதும் எவ்வளவு பிட்டேட்டா மாற்றப்பட்டுள்ளது என வரைபடம் மூலம் தெரியவரும்.




விண்டோஸ் விஸ்டாவில் தரப்பட்ட ரிப்பன் இன்டர்பேஸ் இதில் தரப்படுகிறது.

இதன் மூலம் பைல்களைக் கையாள்வது எளிதாக இருக்கும் என்று தெரிகிறது. எக்ஸ் புளோரர் விண்டோவில் மூன்று டேப்கள் முக்கியமானதாக இடம்பெறும். அவை ஹோம், செயார் மற்றும் வியூ (Home> Share and View) ஆகும். இடது புறம் பைல் மெனு கிடைக்கும். ஹோம் டேப்பில், விண்டோஸ் எக்ஸ்புளோரர் மூலம் மேற் கொள்ளப்படும் 84% செயல்களுக்கான கட்டளைகள் கிடைக்கும்.

ஒரு பைலை அதன் டைரக்டரிக்கான வழியுடன் கொப்பி செய்வதற்கு Copy path என்னும் கட்டளை இதில் தரப் படுகிறது. இந்த கட்டளையுடன் பைல் ஒன்றை இன்னொரு எக்ஸ்புளோரர் விண்டோவில் கொப்பி செய்யப்படுகையில் , பைலை அணுகுவது எளிதாகிறது.

செயார் என்னும் டேப்பின் கீழ் இமெயில் மற்றும் ஸிப் கட்டளைகள் கிடைக்கின்றன. பேர்ண் டு டிஸ்க் (Burn to Disc), பிறிண்ட் மற்றும் பக்ஸ் ஆகியவையும் இதில் உள்ளன.

புதிய பைல் மெனு மூலம் கெமாண்ட் ப்ராம்ப்ட் கிடைக்கிறது. இன்னொரு எக்ஸ்புளோரர் விண்டோ மூலம் ஹார்ட் ட்ரைவினை போர்மட், ஒப்டிமைஸ், கிளீன் அப் போன்ற செயல்களை மேற்கொள்ளலாம். பிளர் ட்ரைவ் ஒன்றை வெளியில் எடுக்க ஆட்டோ பிளே இயக்க இங்கு கட்டளையிடலாம்.

இன்னும் தொடர்ந்து பல புதிய கட்டளைகளையும் வசதிகளையும் உள்ளடக்கியதாக விண்டோஸ் 8 இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# கணனியை உங்களுடையதாக மாற்ற...

கணனி நம்முடையதுதான் என்றாலும், யூசர் நேம்,அதற்கான படங்களில் மட்டுமே நம் பெயர், படங்கள் இடம்பெறுகின்றன. இவற்றுடன் இன்னும் சில இடங்களில் நம் பெயர்களை அமைத்து கணனியை நம் பெயரையும் படத்தையும் போட்டு, முழுமையான நம் கணனியாக எப்படி மாற்றலாம் என்று பார்க்கலாம். இதனை விண்டோஸ் எக்ஸ்பிக்கு குறிப்புகளாகத் தருகிறேன்.



விண்டோஸ் சிஸ்டத்தில் சில மாற்றங்களை ஏற்படுத்திகணனியில் நீங்கள் விரும்புவதனைப் பதிக்கலாம். முதலில் டெக்ஸ் டொப்பில் உள்ள My Computer ஐகனில், கிளிக் செய்திடவும். கிடைக்கும் மெனுவில் Properties என்பதனைத் தேர்ந்தெடுக்க வும். இங்கு சிலரின் கணனிகளின் விண் டோஸ் லோகோ அருகே, கணனியைத் தயாரித்த நிறுவனத்தின் லோகோ கூட இருக்கலாம். அப்படியானால் நம் லோகோ அல்லது பெயர் எப்படி இணைப்பது?

1.முதலில் ஒருபடம் ஒன்று தயாரிக்கப் படவேண்டும். மைக்ரோசொப்ட் பெயிண்ட் புரோகிராமினை இயக்கவும். இதற்கு Start> All Programs> Accessories> Paint எனச் செல்லவும்.

2.இங்கு நாம் அமைக்க இருக்கும் படம் அல்லது லோகோ 180X115 என்ற அளவிலான பிக்ஸெல்களில் மட்டுமே இருக்க வேண்டும் என்பதால், கான்வாஸ் எனப்படும் படத்தின் தன்மையை செட் செய்திட வேண்டும். இதற்கு Image மற்றும் Attributes தேர்ந்தெடுக்கவும். கிடைக்கும் பொக்ஸில் அளவு யூனிட்டாக Pixels என்பத னைத் தேர்ந்தெடுக் கவும்.இதில் மேலே சொன்ன அளவினை அமைக் கவும். பின்னர் ஓகே கிளிக் செய்திடவும்.

3.டூல்பாரில் உள்ள டூல்களைப் பயன் படுத்தி நீங்கள் விரும்பும் லோகோவினை அமைக்கவும். லோகோவின் பின்னணியினை அமைக்க Fill Tool பயன்படுத்தலாம். Text Tool பயன்படுத்தி கலரில் டெக்ஸ்ட் அமைக்கலாம். மேலும் கிளிப் ஆர்ட் கலரியிலிருந்து ஏதேனும் நமக்குப் பிடித்த படத்தைத் தேர்ந்தெடுத்து அமைக்கலாம். உங்கள் எண்ணங்களுக்கேற்ற வகையில் போட்டோக் களை இணைத்து லோகோவினைத் தயார் செய்திடலாம்.

4.அடுத்து File மெனு கிளிக்செய்து அதில் Save As என்ற பிரிவினைத் தேர்ந்தெடுக் கவும். இனி கிடைக்கும் டயலொக் பொக்ஸில் சேவ் செய்யவேண்டிய டைரக்டரியாக C:/ Windows/System32 என்ற டைரக்டரியைத் தேர்ந்தெடுக்கவும். சேவ் செய்யப்படும் பைலின் பெயராக oemlogo.bmp என்று கொடுக்கவும். இப்போது லோகோ தயாரா கிவிட்டது. அடுத்து டெக்ஸ்ட் என்டர் செய்ய வேண்டும். இதற்கு நோட்பாட் பயன்படுத்த லாம்.

1.நோட்பாட் கிடைக்க Start>All Programs> Accessories> Notpad என்று செல்லவும்.

[General]

Manufacturer= (இங்கு எதனையும் கொடுக்கலாம்)

Model= [Support Information]

Line1=This computer was devised by

line2= mr.....

Line3= Enjoy Using It

Line4=*******

இங்கு சமன் (=) அடையாளத்தினை அடுத்து நீங்கள் எந்தத் தகவலையும் டைப் செய்திடலாம். இன்னும் அதிகமான வரிகளையும் இணைக்கலாம். ஆனால் அதே போர்மட்டில் இருக்க வேண்டும்.

2.இங்கு அனைத்தும் முடிந்தவுடன் File தேர்ந்தெடுத்து அதில் Save As என்பதில் கிளிக் செய்து கிடைக்கும் டயலொக் பொக்ஸில் மேலே குறிப்பிட்ட அதே டைரக்டரியின் (C:/Windows/System32) பெயரை டைப்செய்து பைலை oeminfo.ini என்ற பெயரில் சேவ் செய்திடவும்.

இதில் கவனமாக பைல்டைப் (File Type) என்பதில் டெக்ஸ்ட் டொகுமெண்ட் (Text Document) என்பதற்குப் பதிலாக All Files என இருக்கும் படி பார்த்துக் கொள்ளவும்.

மேலே சொன்ன அனைத்தையும் சரியானபடி நீங்கள் செய்துவிட்டால் அடுத்த முறை கணனியை ரீ ஸ்டார்ட் செய்து பின்னர் சிஸ்டம் புரோப்பர்ட்டீஸ் பார்க்கையில் உங்களுடைய புதிய லோகோ மற்றும் தகவல்களைக் காணலாம். நம் செய்தியைக் காண Support Information என்பதில் கிளிக் செய்திட வேண்டும் என்பதனை மறக்க வேண்டாம்.

இன்னொரு இடத்திலும் உங்கள் பெயரை அல்லது விரும்பும் லேபிளை அமைக்கலாம். அது ஸ்டார்ட் பட்டனாகும். அனைவரும் ஸ்டார்ட் பட்டனை எப்படியும் பார்த்து பயன்படுத்துவர் என்பதால் இதில் உங்கள் பெயர் அமைந்தால் இன்னும் நன்றாக இருக்கும்.

ஆனால் இங்கு இதற்கெனக் கிடைக்கும் புரோகிராம் ஒன்றைப் பயன்படுத்த வேண்டும். அந்த புரோகிராமின் பெயர் Start Button Renamer. கிடைக்கும் தள முகவரி:

http://www.Kellyskornerxp.com/regs-edits/ProgFull.zip.

இங்கு இன்ஸ்டலேட்ன் எதுவும் தேவை இல்லை. Start Btn என்று இருப்பதில் கிளிக் செய்தால் போதும். இனி ஸ்டார்ட் பட்டனில் என்ன சொல் அல்லது பெயர் இருக்க வேண்டுமோ அதனை டைப் செய்திடவும். பின்னர் ஓகே கிளிக் செய்திடவும். உடனே உங்கள் ஸ்டார்ட் பட்டன் பெயர் நீங்கள் டைப் செய்திட்ட பெயராக இருப்பதனைக் காணலாம். ஒவ்வொரு முறை நீங்களோ அல்லது மற்றவர்களோ கணனியில் லொக் ஒன் செய்திடுகையில் இந்த ஸ்டார்ட் பட்டனில் உள்ள சொல்லை மேற்படி புரோகிராம் மூலம் மாற்றிக் கொள்ளலாம்.

# எனது 100ஆவது போட்டியை இலங்கை வெற்றியுடன் கொண்டாடும்

## சங்கக்கார நம்பிக்கை




இலங்கை-அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையில் இன்று ஆரம்பமாகவுள்ள 3 ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி குமார் சங்கக்காரவின் 100ஆவது டெஸ்ட் போட்டியாகும்.

இப்போட்டியை இலங்கை அணி வெற்றியுடன் கொண்டாடும் என தான் எதிர்பார்ப்பதாக சங்கக்கார தெரிவித்துள்ளார்.

எனது நாட்டை இத்தனை காலம் பிரதிநிதித்துவப்படுத்துவது பெரும் கௌரவமாகும்.100ஆவது டெஸ்ட் போட்டியில் விளையாடுவதும் பெரும் கௌரவமாகும். வீரர்களுக்கு அடிக்கடி இந்த வாய்ப்பு கிடைப்பதில்லை இவ்வளவு காலம் எனது நாட்டை பிரதிநிதித்துவப்படுத்த வாய்ப்பு கிடைத்தமை குறித்து பெருமையடைகின்றேன் என செய்தியாளர்களிடம் சங்கக்கார தெரிவித்துள்ளார்.

மிக முக்கிய விடயம் என்னவென்றால் முடிந்தளவு எமது அணி வெற்றி பெறுவதற்கு பங்களிப்புச் செய்வதாகும்.

100 டெஸ்ட் போட்டிகளில் விளையாடிய பெருமையை அடையவுள்ள 5ஆவது இலங்கை வீரர் குமார் சங்கக்கார ஆவார். முத்தையா முரளிதரன் (132),மஹேல ஜெயவர்த்தன (121), சமிந்த வாஸ் (111),சனத் ஜெயசூரிய (110) ஆகியோர் நூற்றுக்கும் அதிகமான போட்டிகளில் விளையாடியுள்ளனர்.

அடுத்த மாதம் தனது 34ஆவது பிறந்த தினத்தை கொண்டாடவுள்ள குமார் சங்கக்கார 2000ஆம் ஆண்டு தென்னாபிரிக்காவுக்கு எதிராக காலியில் நடந்த டெஸ்ட் போட்டியில் அறிமுகமானர். இதுவரை 99 டெஸ்ட் போட்டிகளில் 8 ஆயிரத்து 572 ஓட்டங்களை (சராசரி 55.66) பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவற்றில் 25 சதங்களும் அடங்கும்.

அதிக டெஸ்ட் ஓட்டங்களைக் குவித்த இலங்கை வீரர்கள் பட்டியலில் சங்கக்கார 2ஆம் இடத்தில் உள்ளார்.

மஹேல ஜெயவர்த்தன 121 டெஸ்ட் போட்டிகளில் 9ஆயிரத்து 801 ஓட்டங்களைக் குவித்துள்ளார். இந்நிலையில் 10ஆயிரம் டெஸ்ட் ஓட்டங்களையும் 30 சதங்களையும் பெறுவதே தனது இலக்கு என குமார் சங்கக்கார கூறியுள்ளார்.


நியூயார்க் நகரில் உள்ள பிரபல எம்பயர் ஸ்டேட் பில்டிங்கின் உச்சியில் நின்று, கோப்பையுடன் உற்சாகமாக போஸ் கொடுத்த நடப்பு யு.எஸ்., ஓபன் சாம்பியன் நோவக் டோகோவிச் (செர்பியா).

## பீரிஸ் தலைமையில்...

கூட்டமைப்புக் குழுவில் எம்.சுமந்திரன், சுரேஸ் பிரேமச்சந்திரன் ஆகியோர் கலந்து கொள்வார்கள். கடந்த ஜனவரிக்குப்பின்னர் 9 தடவைகள் இருதரப்பும் சந்தித்து பேசியபோதிலும் அரசாங்கத் தரப்பு இணங்கிய எந்த விடயமும் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

பேசப்பட்ட விடயங்கள் மற்றும் இணக்கம் காணப்பட்ட விடயங்கள் தொடர்பாக எழுத்து மூலம் பதில் வழங்கினால் மட்டுமே தாம் மீண்டும் பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்ள முடியும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிவித்திருந்தது.

இதனைத் தொடர்ந்து பேச்சுவார்த்தைகளுக்கான அடுத்த திகதி நிர்ணயிக்கப்படாது நிறுத்தப்பட்டிருந்தது.

இந்நிலையில் கொழும்புக்கு விஜயம் செய்த அமெரிக்க உதவி ராஜாங்கச் செயலாளர் றொபேர்ட் ஓ பிளேக் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புத் தலைவர் ஆர்.சம்பந்தன் அரசுத் தலைவர்கள் ஆகியோரைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியதைத் தொடர்ந்து இரு தரப்பும் இன்று சந்தித்து பேசவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-5)

## புலிகள் வீரர்களா?...

பிரபாகரன் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டதன் பின்னரும் இந்த நிதி வழங்கல் தொடர்ந்து இடம்பெற்றுள்ளன.

இந்தக் குற்றச்சாட்டின் கீழ் பல நெதர்லாந்து தமிழர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்களில் 5 பேர் தொடர்பிலான வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தது. இந்தக் குழுவில் நெதர்லாந்தில் இயங்கிய விடுதலைப்புலிகளின் கிளைத் தலைவர் என்று நம்பப்படும் ஆர்.சிறிரங்கமும் உள்ளடங்குகிறார். நெதர்லாந்தின் ஹேக் நகர நீதிமன்றத்தில் இந்த வழக்கு விசாரிக்கப்படவுள்ளது.

ஏற்கனவே விடுதலைப்புலிகள் மீதான தடையை நீக்கவேண்டும் என, சிறிரங்கத்தின் சட்டத்தரணி, விக்டர்கொபே ஐரோப்பிய சங்க நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இதேவேளை நேற்று இடம்பெற்ற விசாரணையின் பின்னர் அடுத்த 3 வார காலப்பகுதிக்குள் விடுதலைப்புலிகள் பயங்கரவாதிகளா அல்லது விடுதலை வீரர்களா என்பதை ஹேக் நீதிமன்றம் தீர்மானிக்கும் என நெதர்லாந்து வானொலி தெரிவித்துள்ளது. (ச-5)

## அகில இலங்கையில்...

மொஹமெட் நளீம் ஸக்கி அஹமட் தமிழ் மொழிமூலம் இப் பரீட்சைக்குத் தோற்றியமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இம் மூவருக்கு அடுத்ததாக இரு மாணவர் தலா 194 புள்ளிகளைப் பெற்று அகில இலங்கை ரீதியில் நான்காம் இடம் பெற்றுள்ளனர்.

வவுனியா விஸ்வமடு மேற்கில் உள்ள நெத்தலியாறு தமிழ் வித்தியாலய மாணவன் பரமேஸ்வரன் சேதுராகவன், மற்றும் பிலிலை மெதகம மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த டி.எம்.இஷான் லக்ஷிதசத்சர சுமனபால ஆகியோரே இவ்விருவருமாவர்.

யாழ். புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலய மாணவி ரமேஷ் நிதூஷியா 192 புள்ளிகள் பெற்று யாழ்.மாவட்டத்தில் முதல் இடத்தைப் பெற்றுள்ளார்.

யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை மாணவன்லோ.டிலோஷன் 191புள்ளிகள்பெற்று இரண்டாம் இடத்தைப் பெற்றுக்கொண்டார். (ச-5,6)

## தமிழர்களுக்கான தீர்வு...

யுத்தமொன்றில் ஈடுபட்டு வெற்றி காண்பது போன்று அரசியல் தீர்வொன்றை உடனடியாக பெற்றுக் கொடுக்க முடியாது. நல்ல பிரதி பலன் கிடைக்கும் வகையில் அந்த அரசியல் தீர்வு அமையப் பெற வேண்டும் என்று ஊடகத்துறை பதில் அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்தார்.

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று வியாழக்கிழமை காலை அரசாங்கத் தகவல் திணைக்களத்தின் கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது. இதில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அமைச்சர், தமிழ் மக்களுக்காக முன்வைக்கப்படும் அரசியல் தீர்வு அம் மக்களுக்கும் நாட்டுக்கும் உகந்ததாகவும் அமையப் பெறவேண்டும். அதனாலேயே அந்தத் தீர்வினை வழங்குவதில் அரசாங்கத்துக்கு கால தாமதம் ஏற்பட்டுள்ளது.

இதேவேளை தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வினை பெற்றுக் கொடுக்கும் வகையில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு உட்பட தமிழ் கட்சிகளுடனான பேச்சுவார்த்தை நிச்சயமாகத் தொடரும்.

தமிழ்க் கட்சிகளுடனான பேச்சுவார்த்தை மற்றும் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவினூடான தீர்மானம் ஆகியவற்றினூடாக தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வினை எட்ட முடியும் என்பதில் அரசாங்கம் நம்பிக்கை கொண்டுள்ளது.

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் அங்கம் வகிக்க விரும்பாத கட்சியினர் அலரிமாளிகையில் வழங்கப்படும் கோப்பியைப் பருகியோ அல்லது அரசாங்கத்துடன் பேச்சுக்கு தயாரில்லை என்று கருதும் கட்சியினர் நாடாளுமன்றத்தில் வழங்கப்படும் தேநீரைப் பருகியோ அரசியல் தீர்வை நோக்கிப் பயணிக்க முடியும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார். (ச-5)

## விடையளித்தலில் ஏற்...

இவ்வாறு முதலிடத்தைப் பெறுவேன் என நினைத்திருக்கவில்லை. அப்பா புதுக்குடியிருப்பு கோட்டக் கல்வி அதிகாரியாகவும் அம்மா கரவெட்டி யார்க்கரை அ.த.க. பாடசாலையில் ஆசிரியையாகவும் உள்ளனர்.

நான் பாடசாலையிலும் அம்மாவிடவுமே கல்வி கற்றேன். எனது பிரதேசத்தில் தனியார் வகுப்புக்கள் இல்லாத காரணத்தினால் முழுமையாக பாடசாலைப் படிப்பினையே நம்பியிருந்தேன்.

எனது வெற்றிக்கு அதிபர், ஆசிரியர் மற்றும் பாடசாலை சமூகத்தினருக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அகில இலங்கைரீதியில் இரண்டாமிடத்தைப் பெற்றது சந்தோசமாக இருந்தபோதிலும் முதலிடத்தைப் பெறமுடியாமல் போனது கவலைதான். எனது கவனயீனமே முதல் இடத்தை பெறுவதற்கு தடையாக இருந்திருக்கும் என நம்புகிறேன்.

நான் பெரியவனானதும் ஒரு பொறியியலாளராக வரவேண்டும் என ஆசைப்படுகிறேன். எனது வெற்றிக்கு உதவிய ஆண்டவனுக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்றார்.

இதேவேளை எனது மகன் நாட்டுக்கு நல்ல பிரஜையாக வரவேண்டும். அதுவே தனக்குப் போதுமென சேதுராகவனின் தந்தை பரமேஸ்வரன் தெரிவித்தார்.

பாடசாலை சமூகத்தின் வழிகாட்டலும் எனது மனைவி, பிள்ளைகளின் ஊக்கப்படுத்தலுமே இவ்வெற்றிக்கு உதவியது என அவர் கூறினார்.

இதேவேளை வட மாகாணத்தில் முதலிடத்தைப் பெற்ற சேதுராகவனுக்கு வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எல்.இளங்கோவன் மாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் ஆகியோர் வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளனர். (ச)

## ஈ.பி.டி.பி. அரசியல் கட்சியே ...

ஆதாரமற்ற சில குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளார்.

நாம் துணை இராணுவக் குழுக்கள் என்றும், ஆயுதங்களோடு நடமாடுவதாகவும் தெரிவித்த அவர், நாம் வைத்திருப்பதாக அவர் கூறும் ஆயுதங்கள் களையப்பட வேண்டும் என்றும் தெரிவித்திருக்கிறார்.

இது தவிர யாழ்.பல்கலைக்கழக மாணவர்களுக்கும் எமக்கும் இடையில் முரண்பாடுகளை திட்டமிட்டு தோற்றுவிக்கும் வகையில் பல்கலைக்கழக மாணவர்களை தான் சந்திக்க விருந்ததாக பொய்யுரைத்து, தமது சந்திப்பை நாமே தடுத்து நிறுத்தியிருந்ததாகவும் கருத்து வெளியிட்டுள்ளார்.

இவர்கள் உண்மைக்கு புறம்பானதும் ஆதாரமற்றதும் எம்மீது அவதூறு பரப்புவதுமான ஒரு திட்டமிட்ட உள்நோக்கம் கொண்ட செயலாகும் என்பதை நாம் வலியுறுத்த விரும்புகின்றோம்.

ஆரம்பங்களில் ஆயுதப் போராட்டத்தின் முன்னோடிகளில் ஒருவராக செயற்பட்டிருந்த எமது செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவும் மற்றும் எமது கட்சியின் மூத்த உறுப்பினர்களும் இலங்கை-இந்திய ஒப்பந்தத்தை அடுத்து ஜனநாயக வழிமுறைக்கு திரும்பியிருந்தவர்கள்.

ஆனாலும் இலங்கை-இந்திய ஒப்பந்த நடைமுறைகளில் எமது தலைமை பங்கெடுத்திருக்கவில்லை என்பதும் அதன் சாதக பாதகங்களில் எமக்கு சம்பந்தம் இருந்திருக்கவில்லை என்பதும் சகலரும் அறிந்த விடயம்.

எமது மக்களின் அரசியலுரிமைக்காகவும், அபிவிருத்தி மற்றும் அன்றாட அவலங்களுக்கான தீர்வுக்காகவும் மரண அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் மக்கள் மத்தியில் நின்று உறுதியுடன் நாம் உழைத்து வந்திருக்கின்றோம்.

எமது சொந்த பாதுகாப்பிற்காக ஏனைய தமிழ் கட்சிகளைப் போலவே நாமும் வைத்திருந்த சிறு ஆயுதங்களையும் 2002ஆம் ஆண்டு ஒப்பந்தத்தை அடுத்து முழுமையாக நாம் ஒப்படைத்திருந்தோம். எமது கட்சி உறுப்பினர்கள் ஆயுதங்கள் இன்றி நிராயுதபாணியாக நின்றிருந்த காரணத்தினாலேயே தமது இன்னுயிர்களை இழக்கவேண்டிய துயரங்கள் இங்கு நிகழ்ந்தன என்பதை சகலரும் ஏற்றுக் கொள்வார்கள்.

ரணில்-புலிகள் ஒப்பந்தம் முதல் இன்று வரை எமது கட்சி சார்பாக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளுக்கு அரச பொலிஸார் மட்டுமே சட்ட ரீதியிலான பாதுகாப்பை வழங்கி வருகின்றார்கள். இந் நிலையில் எமது கட்சி உறுப்பினர்கள் ஆயுதங்கள் வைத்திருப்பதாகவோ, ஆயுதங்களால் எவரையும் அச்சுறுத்தியதாகவோ எமது மக்களிடம் இருந்து எந்தவித புகார்களும் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறு தெரிவிக்கப்பட்டிருந்தால் றொபேர்ட் ஓ பிளேக் அதை ஆதாரபூர்வமாக நிரூபித்தாக வேண்டும்.

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியினராகிய நாம் 1990ஆம் ஆண்டு வடக்கு கிழக்கில் கால்பதித்திருந்தோம். 1994ஆம் ஆண்டிலிருந்து இறுதியாக 2010ஆம் ஆண்டு வரை நடந்து முடிந்த அனைத்து தேர்தல்களிலும் போட்டியிட்டு தமிழ் மக்களின் அரசியல் அங்கீகாரத்தை பலத்த சவால்களுக்கு மத்தியிலும் பெற்று வந்திருக்கின்றோம். அன்றிலிருந்து தொடர்ச்சியாக பதினேழு வருடங்களாக நாம் இன்று வரை நாடாளுமன்ற உறுப்புரிமையை பெற்றும் வந்திருக்கின்றோம்.

இறுதியாக 2010-ல் நடந்த நாடாளுமன்ற தேர்தலின் போது வடக்குக் கிழக்கில் அதிகூடிய விருப்பு வாக்குகளை பெற்ற ஒரேயொரு தமிழ்த் தலைவராக எமது செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவுக்கு தமிழ் மக்கள் தமது அங்கீகாரத்தை வழங்கியும் இருக்கிறார்கள்.

உண்மையை பேசுவதாலும் எமது மக்களின் அரசியலுரிமைப் பிரச்சினைக்கு தீர்வு காணும் நடைமுறை சாத்தியமான வழிமுறையை நாம் தொடர்ந்தும் வலியுறுத்தி வருவதாலும் தமிழ் மக்களின் அரசியலுரிமை பிரச்சினையை தீராப் பிரச்சினையாக நீடித்து சென்று அதில் அரசியல் ஆதாயம் தேட விரும்பும் சுயலாப தமிழ்த் தலைமைகள் எம்மீதான அவதூறுகளை பரப்பிவருகின்றமை எமது மக்கள் அறிந்த விடயமாகும். இந்நிலையில் றொபேர்ட் ஓ பிளேக் அவர்களும் எம்மை துணை இராணுவக்குழு என்றும், எம்மால் சமாதானம் தடைப்படுகின்றது என்றும் உண்மைக்குப் புறம்பான கருத்துக்களை பரப்பிவரும் செயலானது அவரது ராஜதந்திர செயற்பாடுகள் மீதான பலத்த சந்தேகங்களை எழுப்பியுள்ளது.

சமாதானத்திற்காகவும், நடைமுறைச் சாத்தியமான வழிமுறையிலான கௌரவமான ஓர் அரசியல் தீர்விற்காகவும் எம்மை ஆதரித்து எமக்கு அரசியல் அங்கீகாரம் வழங்கியிருக்கும் தமிழ் மக்களின் விருப்பங்களை நிராகரிக்கும் றொபேர்ட் ஓ பிளேக் அவர்களின் அவதூறான கருத்துக்களை நாம் கண்டிக்கின்றோம் என்றுள்ளது. (எ)

மஹாராஜா Food நிறுவனத்தின் மற்றும் ஒரு சேவை

G.T.V.யும் Aramex இணைந்து நடத்தும் உள் நாட்டு கடிதங்கள் பொதிகள் விநியோகம் செய்தல் கொழும்பு /யாழ்ப்பாணம் ஆகிய இடங்களுக்கு ஒப்படைத்த அடுத்த தினமே முகவரியில் ஒப்படைக்கப்படும்.

MAHARAJA FOOD PRODUCT

மேலதிக விபரங்களுக்கு:-

கொழும்பு
# 18/3 Dr.E.A coory Mawatha,
Wellawathte.
T.P:-0112360926,0112259849

கொழும்புக்கான கட்டணம் ரூபா 200/= மட்டுமே

யாழ்ப்பாணம்
aramex delivery unlimited
No.225, Kasturiyar Road, Jaffna
T.P.: 021 222 4338
No.272, K.K.S. Road, Jaffna.
T.P.: 021 222 4825



உல்லாசம் உங்கள் கண்முன்னே...

TILKO JAFFNA CITY HOTEL

No.70/6, K.K.S Road, Jaffna.
Tel: 021 2225969

web:www.cityhoteljaffna.com
e-mail: info@cityhoteljaffna.com





இடமாற்றம்

இல. 75, கஸ்தூரியார் வீதியில் இயங்கி வந்த

நியூ லலிதாஸ் ஜுவல்லறி ஸ்தாபனம்

10.09.2011 தொடக்கம் இல. 111, மின்சார நிலைய வீதியில் இயங்கி வருகின்றது என்பதை அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தொடர்புகளுக்கு : 021 222 4134

(சி-4225)





NIRUTUITION CENTRE
KONDAVIL

A/L 2012 வணிகக் கல்வி Paper Class

ஆரம்பம்: 20.09.2011 (Tue 4-5 pm)

By: திரு. S. யசோதரன்

(3898)


## இலங்...

போராட்டத்தில் ஈடுபட்ட தொண்டர்கள் வீதியால் சென்றவர்களிடம் இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் பற்றிய துண்டுப் பிரசுரங்களை விநியோகித்ததுடன் அது தொடர்பான மனுவொன்றிலும் கையெழுத்துக்களைத் திரட்டியுள்ளனர்.

வடக்கு சொம்செற் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினரும் அமைச்சருமான லியம் பொக்ஸ் இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் குறித்து அனைத்துலக விசாரணைக்கு அழைப்பு விடுக்க வேண்டும் என்று இவர்கள் கோரியுள்ளனர்.

இது தொடர்பான மனுவையும் ஆதரவாகத்திரட்டிய கையொப்பங்களையும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் லியம் பொக்ஸின் தொகுதி செயலகத்தில் கையளிக்கவுள்ளனர்.

போர்க்குற்ற விசாரணைக்கு லியம்பொக்ஸ் ஆதரவு தெரிவிக்கும் வரை தாம் தொடர்ந்து வடக்கு சொம்சற் தொகுதியில் தொடர்ச்சியாக இத்தகைய போராட்டத்தை மேற்கொள்ளப் போவதாகவும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்துள்ளனர். (ச-5)

## யாழ்.மாவ...

குருநாகல் மற்றும் மாத்தறை ஆகிய மாவட்டங்களில் 153 புள்ளிகள்என அறிவிக்கப்பட்டுள்ளது.

பதுளை, நுவரேலியா, அம்பாந்தோட்டை ஆகிய இடங்களில் 149 புள்ளிகள், புத்தளம் 150, அனுராதபுரம் 148, பொலநறுவை-150, மொனராகலை-143, இவை தரம் 5 ஆம் ஆண்டுப் புலமைப் பரீட்சையின் தமிழ் மொழி மூலம் வெட்டுப்புள்ளிகளாகும். (ச-9)


மீண்டும் சாதனை படைத்தது வெற்றித்தேர்வு

2011-தரம்:5 புலமைப்பரிசில் இறுதிப் பரீட்சையில் ஏராளமான வினாக்களை மாதிரி வினாக்களாக வெளியிட்ட பெருமை வெற்றித்தேர்வுக்கு மட்டுமே உரியது.

தொடர்சாதனை ஆசிரியர்களின் உருவாக்கத்தில்.. தோற்றியோரைக் கேளுங்கள்

அகில இலங்கையில் மாணவர்களை முதல் நிலைக்குக் கொண்டுவந்த, விசேட அங்கீகாரத்துடன் முதற்தர வினாப்பத்திரமான வெற்றித்தேர்வு தயார் நிலையில். தேவையான பாடசாலைகள் உடன் தொடர்பு கொள்க. பாடசாலைகளுக்கும், புத்தகசாலைகளுக்கும் 2012இல் தனித்தனியான வினாப்பத்திரங்கள்.

பாடசாலைகளுக்கு தரம்:5ற்கு 20 பத்திரங்கள். தரம்:4ற்கு 15 பத்திரங்கள்

2011-தரம்:4ற்கு, 7ம், 8ம் வெற்றித்தேர்வு வந்துவிட்டது. இன்னும் 7தேர்வுவரும்

மேலதிக விபரங்களுக்கு எமது பிராந்திய இணைப்பாளர்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்.
யாழ்ப்பாணம்-0212229016,0775388471,0773126807. வடமராட்சி-0212263815.
வலிகாமம்-0773946744. தென்மராட்சி-0778693352. தீவகம்-0775388471.
கிளிநொச்சி,முல்லைத்தீவு,துணுக்காய்,வவுனியா,மன்னார்-0775388471,0773126807.

பாடசாலைகளுக்கு விசேட கழிவுடன், ஆசிரியர் பிரதி இலவசம், திருத்தமான விடைகளுடன் இலவசக் கையேடும் வழங்கப்படும்



வேலையாள் தேவை

பணியாற்றும் குடும்பமொன்றுக்கு வீட்டுவேலைசெய்வதற்கு வேலையாள் (பெண்) தேவை.

தொடர்பு:0779184178



AFTER A/L?
WHAT NEXT?
STUDY IN UK
IELTS இன்றி
Spot Admission
& Seminar
இலவச கருத்தரங்கும் உடனடி அனுமதிகளும்
Jaffna

காலம் 18th September 2011: 10.00a.m.-1.00p.m.
இடம் Exponet -Jaffna Branch
197,Arasady Road,jaffna
(Between Kantharmadam Junction & Jaffna Hindu Ladies College)





உங்கள் பதிவுகளுக்கு முந்துங்கள்

பதிவுகளுக்கு
Colombo - 011 7 555511, Jaffna - 021 7538395
Hotline - 0117 555514, Fax - 0117 555517

EXPONET Overseas Consultants (Group of Exponet (Pvt) Ltd.)
Head Office : 379 - 1/2, Galle Road, Colombo 06.
Jaffna Branch : 197,Arasady Road, Jaffna.
London Branch : 56, The Gradens Harrow Middlessex, HA1 4EY, UK.
Web: www.expogroup.lk | Email: nimal@expogroup.lk



ENGLISH CLASSES

யாவருக்குமான Spoken and Grammar அடிப்படையில் இருந்து எழுத, வாசிக்க, கதைக்க மிகவும் இலகுவான கற்பித்தல் மூலம். குழுவாகவோ தனியாகவோ வீடுகளுக்கு வந்து கற்பித்து தரப்படும்.

தொடர்பு
0777110523

(6148)



அடுத்த பிரிவுகளுக்கான பதிவுகள் நடைபெறுகிறது
NIBM
அரச சான்றிதழுடனான கற்கை நெறிகள்

Certificate in Compueter Science
(Week ends 9.00 am- 12.00, Week day- Full)
Certificate in English Language
(Week ends 9.00 am - 12.00, Week day- Full)
&
Certificate in Business Management
(Thursday, Friday 9.00am-12.00)

077 071 6974 , 021 222 0360
No-40 College Road , Jaffna



வசந்தம் நெற்சோன்

M.M.V. Road Nelliady

அனைத்து விதமான போட்டோ கொப்பி இயந்திரங்கள், பிறிண்டர்களுக்கான தரமான டோனர் (Toner - Eop Japan) வகைகளை நியாயமான விலையில் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

T.P :- 021 226 3105
0777 563 239

(சி-4354)



SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE

A/L எழுதிய மாணவர்கள், உயர்கல்வி மாணவர்கள், தனியார் அலுவலர்களுக்கான

சனி, ஞாயிறு புதிய பிரிவுகள் ஆரம்பம் - 17.09.2011

பிரிவு 1 : காலை 8.00 - 10.00 பிரிவு 2 : காலை 10.00 - 12.00
பிரிவு 3 : மாலை 2.00 - 4.00 பிரிவு 4 : மாலை 4.00 - 6.00

ஆரம்ப வகுப்பு 17.09.2011 - மதியம் 12.30 - 2.00

MyWay 182, STANLEY RD, JAFFNA
077 33 63 456 222 9505


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.09.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.